மேகதூதம்

தமிழாக்கம்

நவாலியூர் சோ. நடராசன்

'தினகரன்' ஆசிரியரும் செந்தமிழ்ப் பண்டிதருமாகிய
திரு. வே. க. ப. நாதன் நல்கியது

காவிற் சிறந்தன கற்பகக் காநலங் காட்டுமெழிற்
பூவிற் சிறந்தன செந்தா மரைகதி பூண்டெழுந்த
மாவிற் சிறந்தன வுச்சைச் சிரவ மகிதலத்திற்
பாவிற் சிறந்த நடராச மேகக் கவிமழையே.

யோ. தமிழினி

மேகதூதம்

வடமொழிமூலம்:

மகா கவி காளிதாசர்

தமிழாக்கம்:

நவாலியூர், சோ. நடராசன்

(இலங்கைக் கல்விப் பகுதிப் பரீட்சை அத்தியட்சகர்)

பிரசுரிப்பவர்:
கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிற்றெட்
குமார வீதி, கோட்டை, கொழும்பு, இலங்கை
1954

சிவமயம்

உரிமையுரை

ஆராவன்பி னெமைப் பயந்தே
அழியாக் கல்வி யமுதூட்டி
அழகு கொழிக்குந் தமிழ்ப் பாடல்
ஆக்கும் புலமைத் திருத்தந்து
சீரார் வாழ்க்கைத் திறங் காட்டித்
தெய்வங் காட்டி யெமைவளர்த்த
சிந்தா மணியைப் பாவமுதந்
திரண்டு பொங்கும் பாற்கடலை
நேரா தாரும் நேர்ந்தவரும்
நித்தம் போற்றும் நெடுந்தகையை
நினைக்குந் தோறு மினிக்கின்ற
ஞானத் தேனை நாயகத்தை
ஏரார் சோம சுந்தரனை
எங்கள் குலத்துக் கொருமணியை
என்றும் மறவா தேத்துதற்கே
இந்நூலுரிமை யாகுகவே.

சோ. நடராசன்

சிறப்புப் பாயிரம்

I

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிச் சைவாசிரிய
கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியவை

1. 'மருள்விழி மானிற் கண்டேன்
வாண்முகம் மதியிற் கண்டேன்
உருவெலா மொருங்கு காண
வொருபொருள் காணேன்' என்று
வருமிரு அடிகள் தம்மில்
வழிவழிக் கவிதை கண்டேன்
திருநட ராசன் தந்த
செழுந்தமிழ் தழைக்க மாதோ.

2. வடபுலக் கவிஞர் கோமான்
மகாகவி காளி தாசன்
படர்புகழ் மேக தூதம்
பைந்தமிழ்ப் பாவா லாக்கி
இடர்புகா விளக்க மொன்றும்
இனிதுதேன் சொட்டச் செய்து
குடர்விளக் காகி நின்றான்
குளிர்ந்துதாயுவக்கு மாறே.

சிறப்புப் பாயிரம்

II

பண்டிதமணி, வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை அவர்கள் கூறியவை

1. ஆரியமாம் பௌவத்தி னருமணிபோன் றௌிர்நூலா யகிலம் போற்றுஞ்
சீரியமா கவிகாளி தாசன்சொற் றிலகமெனு மேக தூதம்
பாரியலத் தமிழ்மொழியிற் பகர்ந்திட்டான் றமிழணங்கு பணியாப் பூண
ஏரியல நவாலியூ ரிசைப்புலவன் நடராச னினிமை சால.

2. செந்தமிழோ டாங்கிலமுஞ் சங்கதமுந் தேர்ந்தறிந்த தீரன் மற்றும்
முந்திடுகீ தாஞ்சலிப்பா மொழிந்துதமிழ் முகத்தழகு பூக்கக் கண்டோன்
பைந்தமிழின் பாற்கீத கோவிந்தம் பகர்ந்தரிய பணியாப் பூட்டிச்
சிந்தைகளி கொண்டவன்முன் றிருச்சோம சுந்தரனும் புலவன் சேயே.

3. அகத்திணையிற் பாலையொடு மருமுல்லைத் திணைக்கெடுத்துக் காட்டேயாக
இகத்தொருநற் காவிய மதியங்கிடத்தா னீந்தனனேற் புடைவிருந்தா
அகத்துவப்பச் சகாப்தமே ஆயிரத்தெண் ணூற்றெழுபா னேழாம் வண்மைச்
சகத்தினிதே மேகசந்தேசமொடு நடராசத் தரும னேங்க.

சிறப்புப் பாயிரம்

III

மாவைக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனூர் என்னும்
பண்டிதமணி சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள்
கூறியவை

தமிழ்தழைக்குந் திருநாவான் சைவநெறி தவழ்நுதலான்
அமிழ்தினிக்குங் கவியுயிரான் அன்பனென துயிரினிலே
கமழ் தகையான் கவிசோம சுந்தரனின் கலைமரபிற்
திகழ்தருவான் செந்தமிழு மாங்கிலமுந் தேர்கலைஞன்.

சங்கதநன் மொழியினிலே காளிதாசன் தந்ததொரு
இங்கிதமாம் வனப்புநிறை இலக்கியத்திற் காதலொளி
பொங்கிவரு மேகதூதம் பொலிவொன்றுங் குறையாமல்
அங்குள்ள படிதமிழிற் பெயர்த்தளித்தான் அமுதூற.

கல்வியெனுங் கடற்குளித்தான் கலையென்னும் முத்தணிந்தான்
சொன்மரபுங் கவிமரபுந் தூயதமிழ் ஒழுக்காறும்
தொன்மரபின் படியுடையான் தோகைதமி ழணங்குவந்து
நல்வரவு சொலுந்தகையான் நடராச நாவலனே.

அணிந்துரை

I

இராமநாதன் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
திரு. அ. சே. சுந்தரராஜன் அவர்கள் தந்தது

காளிதாச மகா கவி வட மொழியில் அருளிச் செய்த 'மேகதூதம்' உலகம் போற்றும் உத்தமக் கவிவளம்வாய்ந்த தொரு நூலாகும். சிவபெருமானின் தோழனாகிய குபேரன் இட்ட சாபங் காரணமாகக் கடமையிற் பிழைத்த இயக்கன் ஒருவன் தன் காதல் மனைவியைப் பிரிந்து சித்திரகூட மலைச் சாரலில் எட்டுத் திங்கள் அளவும் படாத துயருழந்த நிலையில் கண்டதொரு கார்மேகத்தை அவள்பால் தூதனுப்பியமையே அப்பனுவல் கூறும் பொருளாகும். அச்சீரிய நூல் அதன் ஆசிரியரது தங்குதடையின்றி யாண்டுந் தன்னிச்சைப்படி உயர்ந்து செல்லும் கற்பனை சக்திக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். மனைவியைப் பிரிந்த இயக்கனது ஆராத காதல் மனநிலையை ஏற்ற பெற்றி அரிதின் முயன்று நுணுகிய முறையிற் சித்திரித்துக் காட்டுவது. பல திறப்பட்ட நிலைக்களனடியாகத் தோன்றிய, கற்றோரிதயம் களிப்புறச் செய்யும் இனிய உவமையணிகளோடு விரவிய இயற்கைக் காட்சி வருணனைகள் மலிந்தது. இவற்றோடு ஆசிரியரின் உலக அனுபவ சாரமாக அமைந்த ஆழ் பொருளைக்கொண்ட வாழ்க்கை விமரிசனக் குறிப்புகள் பலவற்றுடன் மிளிர்வது.

இத்தகைய செஞ்சொற் கவியின் பல்லலங்காரப் பண்பு களில் ஈடுபட்ட நவாலியூர், திரு. சோ. நடராசன் அவர்கள், அதனைச் சீரிய முறையில் தமிழில் மொழிபெயர்த்து உதவி யுள்ளார்கள். காளிதாசரின் மூலநூலைப் பல்காற் பயின்று பெறக்கடவ முதிர்சுவைக் கவியமுதத்தை தமிழ் நாட்டவர் எளிதிலே நுகர்ந்தனுபவிக்கலாம்படி அமைந்துள்ளது இத் தமிழாக்கம். சோமசுந்தரப் புலவர் பெருமகனார் வழித் தோன்றலாகிய இவ்வாசிரியர் இதன் வாயிலாக ஆற்றியுள்ள தமிழ்ப்பணி வட சொற்கும் தமிழ் மொழிக்கும் ஒத்த அளவில் பெருமையளிப்பது. யாவரும் இந்நூலைக் கற்று இன்புறு வார்களாக.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்,
19-8-54.

அணிந்துரை

II

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் வடமொழி வியாகரண மகோபாத்யாயரும் ஆகிய அந்தணர் செம்மல் வை. இராமசாமி சர்மா அவர்கள் தந்தது

காளிதாசர் இயற்றிய காவியங்களிற்றலை சிறந்து விளங்குவது 'மேகதூதம்'. இதுவே தூது என்னும் ஒருவகைக் காவியத்துக்கு வழிகாட்டி. இதனையடுத்து வட மொழியில் எழுந்த தூதுக் காவியங்களுக்கு அளவேயில்லை. இது இனிய, தெள்ளிய நடைவாய்ந்தது. சிருங்காரரசம் எனும் இன்பச்சுவை நிரம்பியது. அதிலும் விப்பிரலம்பம் (பிரிவு) என்றால் அதன் சுவைப் பெருக்கைச் சொல்லவும் வேண்டுமோ?

இச்சீரிய நூலைத் தமிழிற் செய்யுள் நடையில் இப்போது எமக்கு மொழிபெயர்த்து உதவியவர் நவாலியூர், திரு. சோ. நடராசன் அவர்கள் ஆவர். ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷைக்கு மொழிபெயர்க்கும்போது ஒரு நூலின் அழகும் சுவையும் சிறிதளவு குறையுமென்றே அறிஞர் கூறுவர். ஆனால் இம்மொழிபெயர்ப்பு அதற்கு மாறாக முதனூலையொப்பச் சுவையும் இனிமையும் மலிந்து விளங்குவதோடு ஒரு தனி நூலாகவும் விளங்குகிறது. காளிதாசரின் கவியமுதத்தைத் தமிழரும் நன்கு சுவைத்து இன்புறுமாறு செய்த இவருடைய நன்முயற்சி என்றும் மறக்கற்பாலதன்று.

இந்நூலில் அர்த்தாந்தரந்யாஸ (வேற்றுப்பொருள் வைப்பு) முதலிய அணிகளுடன் ஆங்காங்கு வரும் அடிகள் என் இதயத்தை ஈர்க்கின்றன. 'உத்தரமே'கத்தில் வரும் 109-ம் பாட்டு இவருடைய பாட்டுக்களிற் காணப்படும் இனிமைக்கும் தெளிவுக்கும் ஓர் எடுத்துக்காட்டு. அது பின்வருமாறு:

மருள்விழி மானிற் கண்டேன்! வாண்முகம் மதியிற் கண்டேன்!
புருவங்கள் திரையிற் கண்டேன்! புனைகுழல் மயிலிற் கண்டேன்!
திருவளர் சாயல் கண்டேன்! திகழ்கொடி யதனில்; அந்தோ
உருவெலா மொருங்கு காண வொருபொருள் கண்டிலேனே.

இவருக்குக் கவிதை குலவித்தையானபடியால் இதில் பொருட்குணங்கள் மலிந்து கிடப்பது இயல்புதானே. இன்னும் இதுபோல் பல நூல்களைத் தமிழுலகுக்கு உபகரிக்க எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளைத் தந்தருளுவாராக.

யாழ்ப்பாணம்,
11-8-54.

கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலைத்
தமிழ்ப் பண்டிதர்

திரு. சு. இராசையா அவர்கள் பாடியவை

கற்பனை சொரியும் மேகக்
கவிக்குரு காளி தாசப்
பொற்புறு புணரி வந்த
புவிபுகழ் மேகந் தன்னைச்,
சொற்றேறு மினிமை சொட்டச்
சோகட ராச மேகம்
நற்றமிழ் மயில்கள் கண்டு
நடஞ்செய நல்கிற் றன்றே.

'உருவெலா மொருங்கு காணேன்'
என்றுளத் துடிப்பில், யானும்
இருந்தமிழ் மரபு வந்த
இலக்கியத் துடிப்பைக் கண்டேன்;
விருந்திது முதனூற் கென்னும்
மேன்மைகொள் மேக தூதம்
அருந்தமிழ் நுகர்ந்தோர்க் கெல்லாம்
அமிர்தமாயினிக்கும் மாதே.

1-9-54.

முன்னுரை

மகா கவி காளிதாசர் இயற்றிய இம் **மேகதூதம்**, வடமொழியிலக்கியத்திலுள்ள சிறுகாப்பியங்களுக்கு மகுடமணி போன்றது. சிறுகாப்பியமென்பது, பெருங்காப்பியத்தை யொரோவழித் தழுவிச் செய்யப்படுவது. சிறுகாப்பியங்கள் பெரும்பாலும் கடவுள் வழிபாட்டிற்குரிய பத்திப் பாடல்களாகவும், அகத்துறைபற்றிய செய்யுள்களாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். காதலும் இயற்கை வருணனைகளுமே இச்சிறுகாப்பியங்களின் முக்கியப் பொருள்கள்.

அகத்துறைப் பாட்டுக்கள், பெரும்பாலும் இயற்கையின் பருவ நிகழ்ச்சிகளையும், அவற்றுற் காதலருள்ளங்களில் எழும் மெய்ப்பாடுகளையும் இசைவித்துப் புனைந்த பாடல்களேயாம்.

இயற்கையின் கருப்பொருள், உரிப்பொருள்களெல்லாம், கவியின் தூயவுள்ளத்திலெழுகின்ற மெய்ப்பாடுகளை வெளிப்படுத்த உதவுவனவாம். 'வாழ்தலன்ன காதலும், சாதலன்ன பிரிவும்' கூறுங் கவி, உலகியல் வழக்கொடு புலனெறி வழக்கையுங் கலந்து கற்பனை செய்து ஒரு கவியுலகத்தை யுண்டாக்குகின்றான்.

மழை தூறுகின்றது; கதிரவன் எறிக்கின்றான். திடீரென்று எங்கிருந்தோ பல வண்ணங்களாற் குயின்ற அற்புதமான இந்திரவில்லு மரகத மலையடுத்துத் தோன்றுகின்றது. பறவைகள் அந்த இளவெயிலில் இன்னிசை பாடி வட்டமிடுகின்றன. மலை யணிந்துகொண்ட முத்துவடம் போலச் சிற்றருவிகள் சிகரங்களிலிருந்து இழுமெனப் பாய்கின்றன. மெல்லிய மந்தமாருதம் மரங்களையும் செடிகளையும் கொடிகளையும் அசைத்து அசைத்து மந்தகாசம் புரிகின்றது. மயிலும் குயிலும், சாதகமும் சக்கரவாகமும், அன்னமும் நாரையும் ஆங்காங்குத் தோன்றுகின்றன. மல்லிகை, அசோகு, மாலதி, மந்தாரம், கற்பகதரு, கடம்பு, நாவல், குரவம், மகிழ் மலைமல்லிகை முதலியன பூத்து விளங்குகின்றன. பனித்துளிகளைத் தாங்கும் தாமரையும் நீலோற்பலமும் மனத்தை மயக்குகின்றன.

யானைகள் நிலத்தின் கந்தத்தை உவகையுடன் மோந்து களிப் படைந்து பிளிறும். புனுகு மான்கள் தாமுறையும் முழைஞ்சு களையெல்லாம் நறுமணம் வீசச்செய்து உலாவும். வீட்டு மயில்கள் மழை கண்டு அகவும். மாடப்புருக்கள் உறங்கு வதை மின்னொளியாற் காணலாம். கழனிகளில் வேலை செய்யும் கடைசியர் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு நிழல் பரப்பும் மேகத்தை மகிழ்ச்சி பொங்கப் பார்ப்பார்கள். பருத்து நீண்ட ஆலமரங்களில் காக்கைகள் அந்திமாலையில் ஆரவாரஞ்செய்யும். மலைச்சிகரங்கள் காற்றி லூர்ந்து செல்வதுபோல மேகக்கூட்டங்கள் தோன்றும். இவைபோன்ற இயற்கைக் காட்சிகள் மக்களிடம் பல்வேறு கிளர்ச்சிகளையுண்டாக்குகின்றன. இயற்கையின் விசித்திரங் களாற், சமூகத்தில் வாழும் ஆண்களும் பெண்களும் பல்வேறு உணர்ச்சிகளைப் பெற்று, அவ்வுணர்ச்சிகளுக்கியைந்தவாறு செயல்களிற் புகுந்துகொள்ளுகின்றனர்.

பரந்துபட்டு விரியும் இயற்கையின் குணங்களையும் ஒழுக்கங்களையும் ஒரு காட்சியாயுதவும் வியாபாரத்தில் அமிழ்ந்துகின்ருன் கவிஞன். உலகியல் வழக்கும், புலனெறி வழக்கும் அவனுள்ளத்திற் பன்னிறம்வாய்ந்ததொரு வான வில்லைத் தோற்றுவிக்கின்றது. இது நனவு உலகத்து இயற்கை யையும் கனவு உலகத்துக் கற்பனையையுங் காட்டிக்கிடக்கும் ஒரு தோரணமா? இதனுள்ளே, இல்லதும் இனியதும், நல்லதுமமைந்ததொரு சொற்பதங் கடந்த உலகங் கிடக் கின்றது. இது கவிஞனின் செம்புலம். இதற்கு வாயிலமைத் திட்ட புறவாயிற்ருேரணம் என்று சொல்லும்படி யமைகின்றது கவியின் பாட்டு. நிலையில்லாதவுலகத்து, நிலையில்லாத தோற்றங்களைக்கொண்டு, தொட்டுஞ், சுட்டியும் காணலாகா நிலையுள்ள தோர் அழகையும், உண்மையையும் நன்மையையும் காட்டுதற் கெழுந்ததோர் குறிப்பன்றே பாட்டு. காலால் மிதிக்குங் கல்லையெடுத்துக் கடவுட் படிவஞ்செய்து காட்டு கின்ருேம். கல்லுக் கடவுளன்று; அதிலமைந்த படிவங் கடவுளைக் காட்டுமா? கண்முதற் புலனுற் காட்சியுமில்லாத தெனினும், பூவின் மணம்போல நாமதை யொருவாறு உய்த்துணரலாம். அவ்வொருதனிச் செம்பொருளை மனத்தி னுற் கற்பனை செய்துபார்க்கலாம்; ஐவகையெனும் பூதாதியை

வகுத்து ஒரு குறிப்பைக் காட்டியது. அக்குறிப்பைக் கொண்டு உய்த்துணரவைக்கும் செயல், மெய்ப்புலவர்க்கு ஏகபோகவுரிமையாகும்.

உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும் படாத இவ்வகிலாண்டத்தின் தன்மையை ஒரோவொருகால் 'கண்ணுலியானுங் கண்டேன் காண்க' என்று ஆனந்தத்தினுல் கூறுவது கவிகளுக்கு விதிவசத்தாலுண்டானதொரு நோய். இம்மேகதூதத்தில் 'பிரிவு' (பாலே) என்னும் ஒரு மெய்ப்பாட்டைச் சீவசுருதியாக வைத்து மகா கவி காளிதாசர் மண், விண்ணேப் பிரிந்து வாடும் ஒரு தாபத்தை வருணிக்கின்ருர்.

ஆடி மாதத்திற் சன்னதக்கோலங்கொண்டு விண்ணிடைத் தோன்றும் ஒரு மேகச்சிதரின் வாயிலாக விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளேயடைவேன் என்று தூது சொல்லுகின்ருர். காதலென்பது அழிவில்லாததொரு பெருங் காதலின் சாயலன்ருே? கலேகள் சொல்லவில்லேயா? பெண் அதனே நினேப்பூட்டுங் கற்படிமம். பெண் மாண்டாலும் பெண்மை யழியாது. பிரிந்தவொரு பெண்ணுக்குத் தூது அனுப்பும் ஒரு சிறிய சம்பவத்தைக் காளிதாசர் உலகப் பெருவிழாவாக்கிவிட்டார்; அண்டசராசரங்கள் எல்லாம் அதிற் கலந்துகொள்ளச் செய்கின்ருர். காரிற் பெய்யும் ஒரு துளியும், காடும், மலேயும், கங்கையும், கைலேயும் அதிற் பிரவேசிக்கின்றன. உருத்திர மூர்த்தியான மகா காளேசுவரர் குருதிதோய்ந்த யானேயுரியைப் போர்த்துக் கரங்களே வீசிப் பாதத்தையெடுத்து ஆடுகின்ருர்; மகேசுவரி தன் புத்திரப் பிரேமையினுல் முருகவேளின் மயிலில் உதிர்ந்த தோகை யொன்றை யெடுத்துக் காதிற் சூடிக்கொள்ளுகின்ருள். தாமரையிற் பனித்துளி பட அது நெகிழ்ந்து மலர்கின்றது. வண்டுகள் தேனுண்ணும் வேட்கையால் மலர்களே வட்டமிடுகின்றன.

'கிளியே என்னேப் பிரிந்த அவரை நீ நினேக்கின்ருயா? உன்னேடுதான் அவர் அத்தியந்த பிரேமையுடையவரன்ருே?' என்று கேட்கின்றது ஓர் உள்ளம். அந்த உள்ளத்தை யுருவெளித் தோற்றத்திற் கண்டு கரங்களே வீசி யிறுக வணேத்துக்கொள்ள விரும்புகின்றது மற்ருேருள்ளம். இவ்வியர்த்தத்தைக் கண்ணுற்ற வனதேவதைகள் கண்ணீர் விடுகின்றன.

இது மனிதவுள்ளமா? மரங்களின் உள்ளமா? விலங்குக் கூட்டங்களினுள்ளமா? அசேதனமான மலே, அருவி, மேகம், தாமரை யென்பவற்றினுள்ளமா? எல்லாவுள்ளமுந்தான். இவ்வாழ்வெனும் வேள்வி, அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்து நெருங்கியுள்ளது. வீட்டு வாயிலின் முன் வானவில்லுப்போன்ற தோரண வாயிலுக்கருகே அவள் வளர்த்த பால மந்தார விருட்சம் பூத்துத் தூங்குகின்றது. மரகதத்தண்டிற் படிகப் பலகை வைத்து, அதன் மேற் பொன்னுற் குயின்ற நிவாசத்தண்டத்தில் அவள் வளர்த்த மயில், அவளது சதங்கையணிந்த கை வளேயலாற் போட்ட தாளத்துக்கிசைய ஆடிய பின் வந்து இருக்கின்றது; வீணையை யெடுக்கின்ருள்; சுருதி சேர்க்கின்ருள். பாவம்! அந்த வீணக்குள்ள வுணர்ச்சி! வீணையின் நரம்புகள் அவள் விட்ட கண்ணீர் பட்டு இளகிக்கொடுக்கின்றன. கைவிரல் வெப்பத்தா லந்நரம்புகள் சூடேறிச் சுருதி சேர்கின்றன. அவன் நாமத்தையே யாத்தமைத்த ஓர் இசைப் பாட்டைப் பாடத் துவங்குகின்ருள். தானுகவே இசை வகுத்த பாட்டு. மூர்ச்சனையை மறந்துபோகின்ருள். ஆரோகண அவரோகணக் கிரமங்கள் மாயமாய் மறைந்து விட்டன. தையலும் வீணையும் தனிமையுந் தாண்டவமாடுகின்றன. குறுங்கட் சாளர வழியால் இவற்றையெல்லாம் பார்த்து நிற்கும் மேகம், 'சுமங்கலீ! நானுன் காதலனுக்குற்ற நண்பன்; ஒரு நாள் அமளியில் நீ அவன் கழுத்தைத் தழுவிக்கொண்டே துயின்றுவிட்டாய்; கனவில் அழுதாய்; துயில் நீங்கியதும், பன்னிப் பன்னிக் கேட்டபின் மிகுந்த சிரமத்தோடு உள்ளேயெழுந்த முறுவலே வெளிக்காட்டாமல், ''கள்வனே நீ வேருெருத்தியோடு கூடிக் குலாவக் கண்டேன்'', என்று சொன்னுயன்ருே?' என்று மேகங் குறிப்புக் கூறுகின்றது.

இப்பிரிவென்னும் பாலேயிற் சித்திர கூடத்துக் கிரிமல்லிகை முதல் அளகாபுரியிலுள்ள இல்லத்து வாவியின் மலர்ந்த பொற்ருமரைவரையும் உள்ள அறிவுப் பொருள்களும் அறிவில் பொருள்களும் வேறுபாடின்றிக் கலந்து ஒன்றுபோல் ஈடுபடுகின்றன. ஓர் உள்ளமன்று, உலகத்து உள்ளங்கள். ஒருவர் பிரிவன்று, உலகத்துப் பிரிவு. ஒரு தேசமன்று, அகிலாண்டமுங் கலந்துகொண்டது.

காதல் வாழ்விலுண்டாகும் சில நிகழ்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் உலகவரங்கில், இயற்கையின் கோலாகலத்தின் முன்னிலையிற் சித்திரிக்கிறார் கவி. இத்தகைய காதல் வாழ்க்கையைப் பழந்தமிழர் அன்பினைந்திணையென்று வகுத்து உயர்ந்த பல பாடல்களைப் புனைந்திருக்கின்றார்கள். ஆசிரியர் தொல்காப்பியனார் பழந்தமிழ் வாழ்க்கையை அகமென்றும் புறமென்றும் வகுத்து இலக்கணஞ் செய்தார்; அகத்தமிழாற் காதலும் புறத்தமிழால் வீரமும் கூறப்படும். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கிற் பலவும் இப்பொருள்களையுட்கொண்டெழுந்த களஞ்சியங்கள். பழந்தமிழன் அகத்தமிழை நிலை கண்டுணர்ந்தான். பேரின்பப் பெருவாழ்வின் சாயலே அகத்தமிழென்று கண்டு ஆரத் துய்த்து அழகியலின்பங்கண்டான்.

வடமொழி இலக்கியத்தில் காளிதாசர் கவிச்சக்கரவர்த்தி; தமிழிற் கம்பர், திருவள்ளுவர், இளங்கோ, சேக்கிழார், கச்சியப்பர்போலக் காளிதாசரும் பெரும் புகழ்படைத்தவர்; காளிதாசர் என்ற பெயராற் புலவர் பலர் பேசப்பட்டாலும், மகா கவியென்ற பட்டத்துக்குரியர், 'மேகதூதம்', 'இரகுவமிசம்', 'சாகுந்தலம்', 'குமாரசம்பவம்' முதலிய நூல்களை இயற்றிய காளிதாசரேயாவர்.

இவருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றி யறியக் கூடியன மிகச்சில. இவர், தம்மைப்பற்றித் தமது பனுவல்களிற் கூறுங் குறிப்புக்களும் மிகக்குறைவு. ஏனைப் புலவர்களும் இவர் தம் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி யெவ்வித குறிப்புக்களையும் எழுதிவைத்திலர். ஒரு சில புறச்சான்றுகளால் இவரைப்பற்றிய சில செய்திகளை மட்டுமறியலாம். இவர் மத்திய இந்தியாவிலுள்ள மாளவ தேசத்திற் பிறந்தவர். அக்காலத்திற் புகழ்பெற்று விளங்கிய இராசதானியாகிய உச்சையினியில் இவர் வாழ்ந்திருக்கலாமென்று கூற இடமுண்டு. உஞ்சையில் அரசு செலுத்திய விக்கிரமாதித்தனின் அவைக்களத்தில் ஒன்பது கவிமணிகள் விளங்கினரென்றும், காளிதாசர் அவர்களுக்குள்ளே சூடாமணி யொப்பவரென்றும் ஒரு கதை வழங்கிவருகின்றது.

இவர் நூல்களில் ஆங்காங்கு மிளிரும் சிவபத்திப் பாடல்களால் இவர் சைவரென்று கூறவிடமுண்டு. சைவரா

யிருந்தும், பரந்த நோக்கும், மறுசமயங்களை ஆதரவோடு குறிப்பிடும் தாராள மனோபாவமும் இவருடைய பெருந் தன்மையைப் புலப்படுத்தும். இந்தியாவின் பல தேசங்களை யும் இவர் பார்த்திருக்கிறாரென்பதற்கு இவர் கூறும் பல தேச வருணனைகள் சான்று பகரும்.

வேதவேதாந்தங்களிலும் புராணேதிகாசங்களிலும் சோதிட, வைத்திய சாத்திரங்களிலும் இவர் பயின்றவ ரென்பது இவர் பனுவல்களாற்போதரும்.

காலம் :—இவருடைய காலத்தை அறுதியிட்டு உறுதிகூற முடியாது. விக்கிரமாதித்தன் அவையில் இவர் சூடாமணி யாய் விளங்கினாரென்பது முன்னே கண்டாம். வரருசி வராகி மிகிரர், தன்வந்திரி முதலிய புலவர்கள் அச்சபையை யலங்கரித்தவர்கள். குப்தவரசர்கள் இந்தியாவை ஆண்ட காலத்திற் காளிதாசர் விளங்கினார் என்று அறிஞர் சிலர் கூறுவர். கி.பி. 300-கி.பி.650 வரை வட இந்தியாவிற் குப்த சாம்ராச்சியம் நிலவிற்று. இவர்கள் காலத்தில் வட மொழி இலக்கிய மறுமலர்ச்சியுண்டானது. இந்து மதமும் வளமுற்றது. 'வின்சென் சிமிது' என்ற சரித்திராசிரியர், காளிதாசர், முதலாவது குமாரகுப்தன் (413-455) காலத்தவ ரெனக் கூறுப. குப்த அரசரில் சிலர் விக்கிரமாதித்தர் என்ற விருது உடையவராயிருந்தனர். குப்த அரசரிற் சிலர் காலம் வருமாறு :—

சந்திரகுப்தன் II (கி.பி. 357-413)
குமாரகுப்தன் I (கி.பி. 413-455)
காந்தகுப்தன் (கி.பி. 455-480).

'வின்சென் சிமிது' கூறுவது இது :—' காளிதாசரின் ஆரம்ப காவியங்களான ''இருதுசங்காரமும்'' ''மேகதூதமும்'' கி.பி. 413-க்கு முன், அஃதாவது, இரண்டாவது சந்திரகுப்தன் ஆட்சி யில் செய்யப்பட்டதாயிருக்கலாம். ஆனால் அவருடைய ஏனைப் பனுவல்கள் முதலாவது குமாரகுப்தன் காலத்திலேதான் (கி.பி. 413-455) இயற்றப்பட்டிருத்தல்வேண்டும். மேலும் அவருடைய இலக்கிய முயற்சிகளெல்லாம் குமாரகுப்தன் காலத்துக்குட்பட்டவையென்று சொல்லுதற்குப் பல சான்றுக ளுண்டு. காந்தகுப்தன் அரசுகட்டிலேறிய பின்னர்க்கூடக் காளிதாசர் நூல்கள் இயற்றியிருக்கலாம்'.

காளிதாசர் இயற்றியதாகப் பல நூல்களுண்டு. அவற்றுட் 'சாகுந்தலம்', 'மாளவிகாகனிமித்திரம்', 'விக்கிர மோர் வசீயம்' என்ற நாடகங்களும், 'மேகதூதம்', 'குமாரசம்பவம்', 'இரகுவமிசம்' என்ற காப்பியங்களும் நிச்சயமாகக் காளிதாசரியற்றியவென்றே அறிஞர் கருதுகின் றனர். வடமொழிப் புலவர், காளிதாசரைச் சிறந்த கவியாகச் சிரமேற்கொள்ளுவர். காதம்பரியென்ற கதையெழுதிய பாண பட்டர், 'தேன்பிலிற்றும் மலரை விரும்புவதுபோல நவரசம் பொருந்திய காளிதாசரின் கவிகளைக் கேட்டவர், அவைகளை விரும்பாதிருப்பாரோ' எனக் கூறியுள்ளார். கீதகோவிந்தம் என்ற பத்திச்சுவைததும்பும் பாடல்களை யருளிய சயதேவர், காளிதாசரைக் 'கவிகுலகுரு' என்று போற்றுவர்.

மேலை நாட்டுக் கவிவாணரும் ஆராய்ச்சி வல்லுநரும் காளி தாசர் கவிதாவிலாசத்தைப் பெரிதும் புகழ்ந்து போற்றுவர். 'கேதே' என்ற சேர்மனியப் புலவர் காளிதாசரின் சாகுந் தலத்தைப் படித்து வியப்பும் நயப்புமடைந்தார்.

வசந்த மலர்களோ வாய்த்தநற் கனிகளோ
இசைந்தென் னுயிர்கனிந் தார்த்தின் புறுத்துவை ;
மண்ணும் விண்ணும் மயங்கியொன் றுகநீ
பண்ணுவை சகுந்தலை! பகர்ந்திடி னுன்பெயர்
சொல்லுதற் குலகில்வே றுள்ளதோ பொருளே

என்று நயந்து பாடினர்.

'இயற்கையின் தோற்றம், காதலர் கருத்தில் உண்டாக்குங் கிளர்ச்சிகளை வருணிக்கும் முறையில் காளிதாசருக்கு ஒப் பாரும் மிக்காருமில்லை ; உணர்ச்சிகளை மிக வினிமை பயக்கக் கூறுவர். கற்பனைக்கு அவர் களஞ்சியம் ; இதனால் காளி தாசர் உலக மகா கவிகளுட் சிறந்த இடத்தைப் பெற்று விட்டார்' என்று 'கம்போலுத்து' என்ற தத்துவ ஞானி குறிப்பிட்டார்.

இனி, வடமொழியிலக்கியத்தை மிக விழுமிய நடையும் அழகுமுடையதாக்கியவர் மகா கவி காளிதாசரேயாவர். அவருடைய இலக்கிய நடை தூய்மையும் எளிமையுமுடையது. கட்டுப்பாடின்றி மனம் போனவாறு ஒழுகிச்செல்லும் வட மொழிப் புராண நடையாதல், வாய்க்கு வந்தபடி விரித்துக் கூறும் பிற்கால இலக்கியங்களின் தன்மையாதல் காளிதாசரிடங்

கிடையா. தெளிவுஞ் சுருக்கமும் விகற்பமில்லாத போக்கு முடையது. விகாரமற்ற இயல்பான சொல்லொழுக்கம் வாய்ந்தது. உவமைகள் பொருத்தமும் திட்பமுமுடையன. உறுதிப் பொருள்களை நுணுகியாய்ந்து சுருக்கமாகக் கூறும் திறமும், படிப்போர் உள்ளத்திலவைகளைப் பசுமரத்தாணி போலப் பதியவைக்குந் நயமும், எடுத்த பொருளுக்கு மிக விணக்கமாக அணிகளைக் கோவைசெய்யுஞ் சாதுரியமும் காளி தாசரிடம் விளங்கிய தனிப்பண்புகளாம். அடுக்கிய தொகை மொழிகளும் பின்னமான அந்நுவயங்களும், வேண்டா அலங் கார விசித்திரங்களும், இயற்கைக்குமாறான வருணனைகளும் வலிந்து பொருள் கொள்ளுஞ் சிலேடைகளும் அவர் பாடலிற் பயிலா. காளிதாசர் சித்திரிக்கும் மெய்ப்பாடுகள் நேரே யிதயங்களை யுருக்கிச்செல்லுந்தகையன. தொனி எனப்படும் உள்ளுறையுவமமும் இறைச்சியும் அவர் பாடல்கள்தோறும் மிளிரும். இவ்வாறு அருமையும் எளிமையும் அழகும் நிறைந்த அவர் பாடல்களே எமக்கு இன்று முதுசொமாகக் கிடக்கின்றன. நாம் அவருடைய காவியங்களைப் படித்து விட்டு, 'அருமையின் எளிய அழகே போற்றி' என்று வியந்து பாராட்டுவோம்.

மேகதூதக் கதை

இம்மேகதூதம் வடமொழியில் 'மந்தாக் கிராந்தம்' என்ற விருத்தப்பாவாலியைந்தது. மந்தாக்கிராந்தம் என்றால் மெல்ல நடப்பது என்று பொருள். பிரிந்தோர் அன்பின் செலவும் மேகத்தின் செலவும் அப்பாடற் செலவும் ஒத்தியை வது கருதத்தக்கது.

இனி, இந்நூல் இரண்டு பிரிவுகளையுடையது. முற்பகுதி பூர்வமேகமெனப்படும்; பிற்பகுதி உத்தரமேகமெனப்படும்.

பூர்வமேகம்:—நிதியின் கிழவனான குபேரன், தன் கீழ்த் தொழும்பு பூண்ட ஓர் இயக்கனைக் கடமையிற்றவறிய காரணத்தால், சபித்துத் தொழில் நீக்கஞ்செய்தான். தன் சாபகாலமாகிய ஓராண்டினையும் புதுமணங்கண்ட அவ் வியக்கன், தன் காதலியைப் பிரிந்து, சித்திரகூட மலையில் வாழ நேர்ந்தது. அங்கே எட்டுத் திங்கள் காறும் தனித் திருந்து துன்பமுற்றவன், ஆடித்திங்களின் முதனாள் அம்மலை யுச்சியில் ஒரு மேகம், கொம்புக்கு மண்ணெடுக்கும் யானை

போலக் கிடந்ததைக் கண்டான். அப்பொழுது அவன் மனத்தில் ஓரெண்ணம் பிறந்தது. 'வடதிசையை நோக்கிச் செல்லும் இம்மேகம் என்னருமைக் காதலியுறையும் அளகா புரியையும் நோக்கிச் செல்லுமன்றே; இதன் வாயிலாக என் மனையாட்குத் தூது சொல்லியனுப்புதல் வேண்டும்' என்று சிந்தித்தான். சிந்தித்தவன், அன்றலர்ந்த கிரிமல்லிகைப் பூவினுல் அம்மேகத்திற்கு அருக்கியமளித்து, தூது போகு மாறு குறையிரந்து வேண்டுகின்றுன். பின்னர் இமாலயத்தி லுள்ள அளகாபுரிக்குப் போகும் வழியைக் கூறுகின்றுன்.

பெருமிதத் துடனே வாயு மென்மெல வசைந்தணைக்கும்
அருகிடஞ் சாதகப்புள் ளமுதெனப் பாட்டிசைக்கும்
முருகெழுவலாகை சூல்கொள் முயக்கினுல் வட்டமிட்டே
திருமலி கோலத் தீர்க்குச் சேணிடைச் சேவை செய்யும்.

இவ்வாறு நல்லுற்பாதங்களோடு புறப்பட்டு ஆமிரகூட மலையை, மேகமே நீ யடையவேண்டும். அம்மலையுன்னைச் சிரமேலேற்றுச் சிரமந் தீர்க்கும்.

காட்டு மாங்கனியால் வெண்மை கனிந்திடுஞ் சாரல் வெற்பின்
கோட்டினிற் றகரந்தோய்ந்த குந்தள நிகர்ப்பை; நல்லாள்
காட்டிய தனங்கள் மானக் கறுத்துமேல் வெளுத்த கோலம்
நாட்டங்கள் குளிர நோக்கி யண்டரும் நயப்பரன்றே.

அம்மலையை நீங்கி விஞ்சை மலையிலிருந்திழியும் இரேவா நதியை யடையவேண்டும். கடப்ப மலரை நோக்கி வண்டுகள் நிரையாய்ச் செல்லும். கதலிப் பூண்டின் முதற்றளிரை மான்கள் கறிக்கும். யானைகள் நிலத்திலிருந்தெழும் நறு மணத்தையுண்டு மகிழும். இவற்ருல் உன் வழியையறிந்து தசார்ணவ தேசத்தை யடையவேண்டும்.

முகை விரிந்த மெல்லிய பூக்களையுடைய கைதை கமழ, ஊர்மருங்கிலுள்ள பெருமரங்களிற் காக்கை ஆரவாரஞ் செய்யும்; நாவன் மரங்கள் கனி பழுத்துத் தூங்கும். இத் தேசத்தின் தலைநகரான விதிசையைக் காண்பாய். அங்கே அழகுகொடுக்கும் வேத்திரவதியாற்றின் நறும்புனலை மாந்தியபின்பு, நீச மலையில் இளைப்பாறுவாயாக. பின்னர்

உஞ்சைமா நகரச் சிறப்புக்களைக் கண்குளிரக் காண்பாய். இது பூமியில் ஒரு சுவர்க்கம் போன்றது. நிருவிந்தையாற்றைக் கடந்து உச்சைனியின் வனப்பையுங் கண்டபின் சண்டீசு வரனுறையும் புண்ணிய தலத்தை யடைவாய்.

விதுப்புறு வதன மாதர் மஞ்சனச் சாந்தும் வீற்றுக்
கதுப்புறு வசந்தப் பூவுங் காவியின் றுணருங் கொண்டு
நுதுப்பறப் பாயுங் கந்த வதிநுகர் காற்றுப்பட்டு
மதுப்பொழி மதனச் சோலை வளப்பமுங் கண்டு செல்வாய்.

இங்கே, ஈசன் சந்நிதியில் நிருத்தாஞ்சலி செய்யுங் கணிகை மாதர், உன்துளியைப் பெற்று அயர்வு நீங்கி யுன்னைக் கடைக் கண்ணால் நோக்குவர். சூலபாணிக்கு அந்திமாலையிலெடுக்கும் விழாவிலே நீ பலிமுரசறைந்து சேவை செய்தபின்னர், மாடப் புறுக்கள் கண்ணுறங்கும் மாளிகைத்தலத்தில் நீயும் உன் மனையாள் மின்னலோடு இராக்காலத்தைக் கழிக்கவேண்டும். பின்னர்க் காலையிலெழுந்து தாமரையின் ஊடலைத் தீர்க்கக் கதிரவன் நீட்டும் கரங்களைக் குறுக்கிட்டு விலக்காமல் மெல்லச் சென்று கம்பீரை நதியை யடையவேண்டும்.

நீல நீராடை மெல்ல நெகிழ்கரை யிடையிற் சோரக்
கோலமார் சூரற் கையாற் கொள்ளுதல் கண்டு காதற்
றோழநின் செலவு சாலத் தாழ்ந்திடும் . . .

ஆயின், குளிர்ந்த மந்தமாருதம் உன்னை மெல்லென்று ஊக்கிச் செல்லும். நீ, பின்னர் முருகவேளுறையும் தேவகிரியை யடைவாய். அங்கே மலர் மஞ்சாக மாறி அந்தர கங்கை தோய்ந்த 'ஆய் மலரழகற்காட்டய்'. பின் சருமவதி யென்னும் ஆற்றையுங் கடந்து தசபுர வனிதையர்க்குன் வடிவைக் காட்டிச் செல்வாய். பின்னர்ப் புகழ்பெற்ற பார்த்தன் தன் வில்லினால் எதிரிகள் தலையைக் கொன்று குவித்த குருக்கேத்திரத்தைப் பார்த்துக்கொண்டு சரசுவதி யாற்றின் புண்ணியத் தெண்ணீரையுண்டு மேற் செல்வாயாக. பின்னர் :

' மலையர சுதித்துப் போந்து மாகன கலத்திழிந்து
நிலைபெறு துறக்கஞ் சேர நீள்படி சாகரர்க்காய்
அலைபுரள் கங்கை மாதை யணைந் திடாய் '.

பின்னர் இமயமால்வரையை நண்ணிப் பிறையணியும் கறை மிடற்றோன் பாதச்சுவடு பதிந்த சிலையொன்றுண்டு. அதனை முறை முறை வலஞ்செய்து பணியவேண்டும். அங்கே:

> வேணுவில் வருடி நாதம் விண்டிசை தென்றல் கூட்டப்
> பாணியிற் றெய்வ மாதர் முப்புர விசயம் பாடச்
> சேணிடை விளங்குன் ஞேசை செறிமலை யுற்றுச் சேர
> வேணியர்க் கெடுத்த கீத விழாவினி தியலு மன்றே.

பின்னர் வடபாற் சென்று, கிரௌஞ்சப்பிளவுக் கூடாகச் சிவனுறையும் வெள்ளியங்கிரியை யடைவாய். அங்கே சிவபெருமான் செய்த அட்டகாசந் திரண்டு குவிந்து கிடப்பது போன்ற அக்கைலையின் சாரலில் விளங்குவது அளகாபுரி.

உத்தரமேகம்:

மேகமே! நீ அவ்வளகாபுரியின் மஞ்சுகொஞ்சும் மாளிகைகளை யொப்பாய்; நீயோ மின்னலோடு தோன்றுவை; அம் மாளிகைகள் அழகிய பெண்களையுடையன; உன்னிடத்து இந்திரவில்லு; அங்கே அழகொழுகும் பலவண்ண வோவியங்கள்; நீ மெல்லென இனிதாய் முழங்குவாய்; அங்கே இன்னிசை கனிந்த மத்தளவொலி. நீ, நீல நீர் நிரம்பினை; அவை மாணிக்க மணித்தலமுடையன. நீ உயர்ந்து செல்வாய்; அவை விண்ணையளாவி நிற்கும்.

> கண்ணினீர் மகிழ்வாலன்றிக் கசிந்திடாரியக்கர் காமன்
> பண்ணிய கணையா லன்றிப் பருவரலறியார் நாளும்
> நண்ணிய வூடலன்றி நலித்திடுபிரிவேயில்லை
> புண்ணிய நகரின் மூப்புப் புல்லுதலரிது மாதோ.

அங்கே மரங்கள் எப்போதும் மலர்களால் நிறைந்திருக்கும். மயில்கள் எல்லாப் பருவத்திலும் கலாபம் விரித்தாடும். இரவில் என்றும் வெண்ணிலா விளங்கும். இல்லங்கள் தோறும் இருநிதியிலங்கும். மாணிக்க மணிவிளக்குகள் யாண்டும் ஒளிகாலும், கற்பக தருக்கள் கருதுவனவெல்லாம் சலியாது நல்கும்.

> ஆண்டுளவளகைவேந்த னரண்மனை வடபாற்காண்பாய்;
> சேண்டரு சாப மானுஞ் சித்திர வாயின் மாடம்
> மாண்டகு துணைவியன்பால் வளர்த்ததோர் குழவிபோலக்
> காண்டகு சீர்மந்தாரங் கவின்மலர் பொதுளி நிற்கும்.

இல்லத்தின் புறத்தே சலக்கிரீடை செய்தற்கமைந்ததொரு வாவியுண்டு. அதன் படிகள் மரகதக் கல்லினுற் செய்யப் பட்டவை. வைடூரிய மன்ன நாளமும் பொன்னன்ன பூவு முடைய பொற்ருமரைகள் மலரும். அதன் பக்கத்தே இந் திர நீலக் கல்லினுற் சிகரமமைந்த ஆடற்குன்றுண்டு. அங்கே பொன்மயமான கதலி விளிம்படுத்திருக்கும். செவ்வ சோகும் மகிழமரமு முண்டு. அதனிடையே வீட்டுமயில் தங்குதற்கு ஒரு நிவாசத்தண்டம் அமைக்கப்பட்டிருக்கும். இக்குறிப்புக்களை மனத்தில் வைத்து எனது இல்லத்தை யடை யாளங் கண்டுகொள்வாய், அங்கே எனது காதற் கிழத்தியைக் காண்பாய். என்னை நினைந்து அழுது கொண்டே நான் வரும் நாள்களை யெண்ணிக்கொண்டிருப்பாள். வீணையையெடுத்து என் பெயரமைந்த இனிய வரிப்பாட்டுக்களைப் பாட நினைத்த வள், கண்ணீரால் நனைந்த நரம்புகளை யிசைக்கமுடியாது வருந்துவாள்; பின்னர் அதற்குரிய பண்ணை மறந்து சோரு வாள். அவளை மாடச்சாளர வழியாற் கண்டுகொள். கண்டு, 'சுமங்கலி! நானுன் காதலனுக்குற்ற நண்பன்; அவன் சித்திரகூட மலையில் உயிரோடு வாழுகின்ருன்; உன்னுடைய தீதின்மையும் நலப்பாடும் உசாவினுன். மேலும் அவன் கூறும்:

நீளவே நினைவேன் நாளும் நினைந்திடர் தாங்கி நின்றேன்
வாளரி விழியாயஞ்சேல் வருமிடர் தாங்கவேண்டும்.

இன்னும் நான்கு திங்களையும் ஒருவாறு கழிப்பாயாக. அதன் பின் எனது சாபம் நீங்கிவிடும். பின்னர் யான் உன்னை வந்தடைவேன்; இவ்வாறு உன்னினிய காதலன் என்னிடங் கூறினுன்' என்று முகில் தூதை யவளுக்குக் கூறுகின்றது.

இவ்வழகிய சிறுகாப்பியத்தைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற எண்ணம் பல்லாண்டாக என்னகத்திற் குடி கொண்டிருந்தது. ஆனுல் இவ்வாண்டு வைகாசித் திங்களில் நான் வசிக்கும் அம்பலாவை மலைமுகட்டில் ஒரு நாள் ஒரு மேகச் சிதர், அக்குன்றுவிட்ட கொட்டாவிபோலத் தென் பட்டது. கார்காலம் சகல வைபவங்களுடனும் தோன்றி யதைக் கண்டேன். உடனே என்னகத்திற் குடிகொண்டிருந்த அவ்வெண்ணமும் தூங்கிய அம்முகில்போல உள்ளத்திலோங்கி நிற்கவே நூலையெடுத்து விருத்தயாப்பிற் பாடத் தொடங்கி

னேன். பல கடமைகளுக்கிடையே தொடங்கிய இம்மொழி பெயர்ப்பு மாதம் முடிய முடிவுற்றது. மூலத்திலுள்ள அழகு களிற் பல எனது மொழிபெயர்ப்பில் ஒழுகிவிட்டன வென்பதை இரு நூல்களையும் படிப்போர் நன்குணர்வர். பாட்டுக்களின் பொழிப்பையும் அரும்பதங்களின் பொருளையும் படிப்போர்க்கு எளிதாகும்படி யெழுதியுள்ளேன். மூலத்திலுள்ள ஒரு சுலோ கத்தை தமிழிலும் ஒரு விருத்தப்பாவினுல் மொழிபெயர்த் திருக்கிறேன். இம்முயற்சியில் பலவகையில் பெருந் துணையாய் நின்று எமக்கு ஊக்கம் உதவியவர் எனது அரும் பெறற்றமையனுர். நவாலியூர், சோ. இளமுருகனுர் அவர்கள். அவர்க்கு நாம் என்றும் கடப்பாடுடையேம்.

சென்ற வருடம் யான் வெளியிட்ட 'கீதாஞ்சலி'யை எதிர் பாராதவிதமாக நன்கு வரவேற்ற தமிழுலகம் இதனையும் ஏற்றருளுமென்று நம்புகின்றேன். இது புதிதாக மலர்ந்த பூ. சாவதானமாகவே மோந்துகொள்ளுமாறு அறிஞரை வேண்டுகின்றேன்.

சோ. நடராசன்

'ஆமிரகூடம்' (அம்பலாவை),
கங்காசிரிபுரம் (கம்பளை),
இலங்கை.
6-6-1952.

பூர்வ மேகம்

நூல் வரலாறு

இமயமலையிலுள்ள அளகாபுரி குபேரனுடைய அரசிருக்கை. குபேரன் நிதியின் கிழவன். சிவபெருமானுக்குத் தோழன். அவனுடைய அரண்மனையில் ஓர் இயக்கன் ஏவல் புரிந்து வந்தான். அவன் ஒருமுறை தன் கடமையிற் றவறினனாக, அதுகண்ட குபேரன் கோபங்கொண்டு ஓர் ஆண்டு வரையும் மனையாளைப் பிரிந்திருக்கச் சாபமிட்டான். இயக்கன் மனைவியைப் பிரிந்து சித்திரகூட மலையில் உள்ள ஒரு தவப் பள்ளியில் வசித்துவந்தான். அங்கே எட்டு மாத காலமாகத் தனித்திருந்து பிரிவுத்துயரால் வருந்தினான். ஆடித்திங்களின் முதல் நாளில் ஒரு கார்மேகம் அம்மலையின் உச்சியிற் கொம்புக்கு மண்ணெடுக்கும் யானைபோற் கிடந்ததைக் கண்டான். அப்பொழுது அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றிற்று. வடக்கு நோக்கிச் செல்லும் இம்மேகம் என் மனையாளிருக்கும் அளகாபுரியையுங் காணும். ஆதலால் இம் மேகத்திடம் தூது சொல்லிவிடுவது பெரிதும் பொருத்தமாகும் என்று சிந்தித்தான்.

மேகத்தைத் தூதுபோக்க விரும்பிய அவ்வியக்கன், அன்றலர்ந்த கிரிமல்லிகைப் பூவினால் அருக்கியமளித்து அதனைத் தனக்கினிய நண்பனாக்கி, முகமன்கூறி, வழியியல்பு களையும் இல்லத்தின் அடையாளங்களையும் பிரிவாற்றாது வருந்தும் காதலியின் பண்புகளையும் எடுத்துச் சொல்லி அளகா புரிக்கு அனுப்பினான்.

இவ்வாறு கற்பனை செய்துகொண்டு காளிதாச மகா கவி ‘மேகதூதம்’ என்னும் இவ்விழுமிய காப்பியத்தைப் பாடி யருளினார்.

நூல்

இயக்கன் சாபம் பெறுதல்

1. பொன்மதி லளகை வேந்தன் புகழெழில் பிழைத்துச் சாபம்
மன்னியோ ரியக்கன் முன்னாள் மங்கையைப் பிரிந்தோ ராண்டாய்
அன்னையெஞ் சீதை நல்லா ளாடிய புனித நீருந்
துன்னிய காவுஞ் சூழ்ந்த சித்திர கூடஞ் சேர்ந்தான்.

விளக்கம்:

தன் கடமையில்தவறிய ஓர் இயக்கன் தன் தலைவனாகிய குபேரனின் கோபத்திற்காளாகிப், பெருமை இழந்து, ஓர் ஆண்டுவரையுந் தன் காதலியைப் பிரிந்து வாழுங் கொடிய சாபத்தைப் பெற்றான். பெற்றவன், சீதாபிராட்டியார் படிந்து நீராடியதாற் புனிதமடைந்த தீர்த்தத்தைக் கொண்டதும் சோலை சூழ்ந்ததும் ஆகிய சித்திரகூட மலையில் வாழ்ந்துவந்தான்.

அளகை—அளகாபுரி. வேந்தன்—அரசனாகிய குபேரன். துன்னிய—நெருங்கிய. கா—சோலை.

திருமகளே சீதையாக அவதரித்தாளாதலின், அவள் ஆடிய நீர் புனிதமடைந்தது. காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமான இராமபிரானுக்கு மனைவியாதலின் ‘ அன்னை ’ எனப்பட்டது.

இயக்கன் மேகத்தைக் காணுதல்

2. பொன்மணிக் கடகஞ் சோரப், பூங்கொடி பிரிவாற் றேம்பித்
தன்னுயிர் சின்னாள் காறுந் தாங்கினன் தலைநா ளாடி
மண்ணினைக் கோட்டிற் கொள்ளும் மதங்கமே யனைய மேகம்
விண்ணுயர் சிகர மேவக் கண்டனன் விரக மிக்கான்.

விளக்கம்:

(சித்திரகூடஞ் சேர்ந்த அவ்வியக்கன்) அழகிய கடகங்கள் கழன்று வீழப், பிரிவாற்ருது வருந்தி, அவ்வருத்தத்தோடு சில மாதங்களை அம்மலையிற் கழித்தான். கழிக்கும்போது ஆடி மாதத்து முதல் நாளிற் கொம்புக்கு மண்ணெடுத்துக் கொண்டு நிற்கும் யானையைப்போன்ற ஒரு மேகம் அச்சித்திர கூட மலையின் உயர்ந்த சிகரத்திற் கிடப்பதைக் கண்டான். அக்கார்வரவினுலே விரக துன்பத்தை மிகுதியும் அடைந்தான்.

பொன் மணிக் கடகம்—பொன்னுற் செய்யப்பட்டு மணிகள் பதித்த காப்பு. பூங்கொடி—உவமையாகு பெயர்; மனைவியை உணர்த்தியது. சின்னுள்—சில மாதங்கள். தனக்கு நேர்ந்த பிரிவுக் காலமாகிய ஓராண்டிலே எட்டு மாதங்களையும் வருந்திக் கழித்தான். 'ஆடித்தலைநாள்' என மாறுக. கோடு—கொம்பு. மதங்கம்—யானை. விரகம்—காமநோய். இயக்கன் தாங்கினன், கண்டனன், விரகமிக்கான் எனத் தோன்ரு எழுவாய் வருவித்துப் பொருள் முடித்துக்கொள்க. பிரிவுத்துயரால் உண்டான மெலிவு அவனணிந்திருந்த பொற்கடகத்தைக் கழன்று வீழச் செய்தது.

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்கள் வேனிற்காலம். ஆவணியும் புரட்டாதியும் கார்காலம். வேனிற்காலத்தில் மழை மேகங்கள் தோன்றுவதில்லை. கார்காலத்தில் மேகங்கள் இடித்து முழங்கி மழைபெய்யும். இக்கார்காலம் பிரிந்திருக்கும் தலைவன், தலைவியரை வருத்தும் இயல்புடையது. வேனிற்காலத்தின் முடிவாகவும் கார்காலத்தைத் தொடக்குவதாகவும் நின்ற ஆடி மாதத்தின் முதல் நாளிற் சித்திரகூட மலையில் இம்மேகந் தோன்றுகின்றது. அது மலையுச்சியைத் தழுவிக் கிடந்த தோற்றம், யானை கொம்புக்கு மண்ணெடுப்பதுபோலும் என்றது உவமை. கார்வரவாலே இயக்கன் விரகதாபம் மிகப் பெற்ருன் என்க.

எழிலிகண்டிரங்கல்

3. கண்ணிணை கலங்கக் காதற் கனலினை யருட்டு மேகந்
தன்முனே யரிதி னின்று தலைவியி னினைவாற் றேம்பித்
தன்னிலை காணு னன்னுன் றனிமையென் னுலகில் மற்றும்
இன்னிலை யெய்தி னேரு மெழிலிகண் டினைவ ரன்றே.

விளக்கம்:

கண்கள் கலங்கி நீர் சொரியுமாறு காதலைத் தூண்டி நிற்கும் அம்மேகத்தின் முன்னே அவ்வியக்கன் ஒருவாறு எழுந்து நின்று, தலைவியினது நினைவினாலே பெரிதும் மனம் உடைந்து தன்னிலை இத்தகையதென்று சொல்லவுந் தகுதி யற்றவனாய் நிலை கலங்கினான். அவனது தனிமையை எப்படிச் சொல்லுவது? உலகிலே மனைவி மக்களைப் பிரியாது இல்லத்திலே சுகமுற்றிருப்போருங் கார்மேகத்தைக் கண்டு வருந்துவது இயல்பாயிருக்கின்றது.

இணை—இரண்டு. அருட்டும்—தூண்டும்.

இல் + நிலை = இன்னிலை. இல்லத்திலே சுகமுற்றிருக்கும் நிலை.

மேகத்தைத் தூதுவிட எண்ணுதல்

4. அன்றலர் குடசப் பூவா லருக்கிய முவந்த ளித்தே
துன்றிய வின்சொல் லோடு சோபனம் பலவுங் கூறி
மென்றொடி நல்லா ளாற்றி மேவுமா வணிநன் னாளிற்
தன்றுயர் தாங்கல் வேண்டித் தண்முகில் தன்னை நோக்கி.

விளக்கம்:

(தலைவியின் நினைவிலாழ்ந்த இயக்கன்) அத்தண் முகிலைப் பார்த்து, மெல்லிய வளையலை அணிந்த காதலி பிரிவாற்றிக் கார்காலமாகிய ஆவணி மாதத்தில் இறந்துபடாது தனது வருத்தத்தைத் தாங்கி யிருக்கவேண்டுமென விரும்பி, அன்ற லர்ந்த கிரிமல்லிகைப் பூக்களைத் தூவி வழிபாடாற்றி, இன் சொல்லோடு கூடிய வாழ்த்துரைகள் பலவற்றையுங் கூறி.

இதுவும் அடுத்த செய்யுளுங் குளகம். நோக்கி வேண்டி அளித்துக் கூறித் தூது இரந்தான் என அடுத்த செய்யுளோடு வினைமுடிபு செய்க.

குடசம்—கிரிமல்லிகை. அருக்கியம்—விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம். சோபனம்—வாழ்த்து. பல்லாண்டு கூறி வாழ்த்துவது.

ஆவணி மாதத்துக் கார்வரவுகண்டு தலைவி வருந்தி இறந்து விடுவாளென்று அஞ்சிய இயக்கன் தான் தீதின்றி இருக்குஞ் செய்தியை அம்மேகத்தின் வாயிலாக அவளுக்கு அறிவிக்க எண்ணினான். அதனாலே மேகத்தை அருக்கியமளித்தும் சோபனங் கூறியும் முகம்படுத்திக்கொள்ளுகிறான்.

மேகத்தைத் தூதுவிடத் துணிதல்

5. புகையொளி புனல்காற் றின்ன புணர்ந்திடு மேக மெங்கே
வகைதெரி புலத்தோர் சொல்லும் வல்லதோர் தூது மெங்கே
தகைமையீ தோரான் மேகந் தன்னையே யிரந்தான் தூது
மிகையுறு காதல் சித்து மசித்துமோ ராது மன்னே.

விளக்கம்:

புகையும் ஒளியும், நீரும் காற்றும் கூடிய சேர்க்கையான மேகம் எங்கே? புலன்களின் சதுரப்பாடு உடையோராலே கொண்டுசெல்லப்படும் தூது எங்கே? என்று முன்னியது முற்றுவிக்கும் ஆசையினுல் ஆராயாது அம்மேகத்தையே தூது செல்லுமாறு இரந்தான். அறிவுள்ளது இது, அறிவில்லாதது இது எனப் பகுத்தறியுங் குணம் காதல் வயப்பட்டோருக்கு இயல்பாகக் கிடையாதன்றே.

வகை—புலன்களின் வகை. ஐம்புலன்களினுலுண்டாகும் அறிவு. புலத்தோர்—அறிவுள்ளவர்.

தகைமை—தான் சொல்லவேண்டிய தூதினதும் அதனைச் சொல்லி விடுக்க நினைக்கும் மேகத்தினதும் தகுதிப்பாடுகள். பேசுமியல்பற்ற அறிவில்லாத மேகத்தைத் தனது ஆற்ருமை யாற்றூதாக விட எண்ணினுன் என்றவாறு.

சித்து—அறிவுடைப்பொருள். அசித்து—அறிவில்லாப் பொருள்.

மேகத்தைத் தூதுபோக வேண்டுதல்

6. பிறந்தனை யுலக மேத்தும் பெருங்குலத் தென்பர் சிந்தைத்
திறந்தரு வடிவங் கொள்வாய் தேவர்கோ னேவல் பூண்டாய்
மறந்தரப் பிரிந்தேன் காதன் மங்கைபாற் றூது செல்வாய்
சிறந்தவ ரிரத்தல் மேலாஞ் சிறியவர் கொடையின் மன்னே.

விளக்கம்:

முகிலே உலகெங்கும் புகழ்பெற்ற புட்கலாவர்த்த மென்னும் உயர் குலத்தில் நீ பிறந்தாய் என்பர். காண்பவர் நினைவுக்கு ஏற்றபடி உருவு காட்டுவாய். இந்திரனுக்கு

அமைச்சனு யேவல் பூண்டாய். இவ்வாறு நீ உலகிற் பெரியோன் என்பதை அறிவேன். நானே தீவினை தனது தீப் பயனைத்தர அதனாலே அன்புடைய காதலியைப் பிரிந்து இருக்கின்றேன். சிறியவர் கொடுக்கும் கொடையை ஏற்பதிலும் பார்க்க, நின்போன்ற சிறந்தவர் வறியராயினும் அவர் மாட்டு இரத்தல் மேன்மை தரும். ஆதலால் நீ எனது காதன் மங்கைபாற் றூதுசெல்ல வேண்டுகிறேன்.

மறம்—தீவினை. மன்—மிகுதிப் பொருளில் வந்தது.

சிறந்தவர் பால் இரத்தல் பயன்தராத காலத்தும் மிகுதியும் மேலானது என்க.

அளகைக்குப் போகவேண்டுமெனல்

7. வெம்பினோர் சரணம் நீயே மேகமே யளகை யீசன்
வெம்பிய பிரிவால் வாடும் மின்கொடிக் குரையாய் செய்தி
உம்பரி லளகை நாமத் தியக்கர்கோன் நகர்செல் லாங்கே
சம்புவின் றலையில் மின்னுந் தண்பிறை யொளிரு மில்லம்.

விளக்கம்:

மேகமே! வெப்பமுற்றோருக்கு நீயே சரணம். ஆதலாற் குபேரனுடைய கோபத்தால் எனக்கு நேர்ந்த பிரிவை யெண்ணித் தான் வாடிவருந்துகின்ற மின்னற்கொடிபோலும் என் காதலிக்கு, நான் தீதின்றி இருக்குஞ் செய்தியை உரைக்குமாறு வேண்டுகின்றேன். அவ்வாறு உரைப்பதற்கு உலகிலே புகழ்மிக்க அளகாபுரி என்னும் பெயர்பெற்ற இயக்கதனிகரின் நகருக்கு நீ போகவேண்டும்; அங்கே சிவபெருமானது தலையில் மின்னும் குளிர்ந்த பிறைச்சந்திரனது ஒளிபெற்று, மாடங்கள் நின்மலமாய் விளங்கும்.

வெம்பினோர்—வெப்பினால் வாடினோர்; விரகதாபத்தினால் மெலிந்தோர். அளகையீசன்—குபேரன். வெம்புதல்—கோபித்தல். உம்பர்—மேல். சம்பு—சிவன். இல்லம்—மனை.

அன்றி இல்லங்கள்தோறும், (எனது இல்லத்திலும்) முன்றிலில் குபேரனுக்குத் தோழனான சங்கரன் படிவம் விளங்கும். அப்படிவத்தின் தலையில் விளங்கும் இளம் பிறையின் ஒளியால் அவ்வில்லங்கள் பிரகாசிக்கும் எனினுமாம்.

கார்கண்டு பிரிந்தோர் இரங்குவரெனல்

8. விண்ணிடை யெழுந்தா யாக வீழ்ந்துசோர் கூந்தல் நீக்கித்
திண்ணென முழங்கி மின்னித் திரண்டநின் கோல நோக்கிக்
கண்ணிணை கலுழ்வர் நல்லார் காரிடைப் பிரிவார் யாரே
மண்ணிலென் போல வேறு மாந்தருக் காட்பட் டோரே.

விளக்கம்:

ஆகாயத்திலே நீ தோன்றியதும் தூரதேசஞ் சென்று பிரிந்த தலைவரை நினையும் மகளிர் சோர்ந்து வீழுங் கூந்தலை நீக்கித் திரண்டெழுந்து முழங்கி மின்னித் தோன்றும் நினது கார்காலக் கோலத்தை நோக்கிக் கண்ணீர் சொரிவார்கள். வானில் நீ பரந்து எழும் கார்காலத்தில் யாவர் காதலியைப் பிரிந்திருப்பவர்? என்னைப்போலப் பராதீனப்பட்டு வாழும் ஒருவனொழிய வேறு ஒருவரும் இரார்.

வீழ்ந்து சோர் கூந்தல் என்றதினாலும் கண்ணிணை கலுழ்வர் என்றதினாலும் பிரிவுடையாரென்பது பெறப்படும். நல்லார் நீ எழுந்தாயாகக் கலுழ்வர் எனப் பொருள் முடிபு செய்க. தலைவனைப் பிரிந்த தலைவி தலைநீவி முடியாது விரிசடையினளாவாளென்பது கவிமரபு.

விரைந்து போதல் வேண்டுமெனல்

9. உயிரொடும் வாழு கின்றா ளுள்ளநா ளூழி யாகக்
கயல்படு கண்கள் முத்தங் கான்றிடுங் கருத்துச் சோரும்
மயலுறுங் கொண்க னின்னே வருவரென் றுள்ளந் தேறும்
அயல்வழி யரவ மோர்க்கும் ஆற்றிட விரைதி யண்ணல்!

விளக்கம்:

அரிய சகோதரனே! வாழுநாளெல்லாம் ஒரு நாள் ஓர் ஊழியாக எண்ணி உயிர்தாங்கி வாழுகின்றாள். கயல்போலுங் கண்கள் முத்துப்போலக் கண்ணீர் சொரியும். அறிவு சோரும். மயக்கமடையும். பின்பு நாயகன் இப்பொழுது வருவரென்று உள்ளந் தெளியும். வீட்டின் பக்கத்திலுள்ள வழியில் நாயகனது தேரொலி கேட்கின்றதோ என்று ஆராயும். இவ்வாறு வருந்தும் அப்பதிவிரதையைப் பிரிவாற்றி வைத்திருப்பதற்கு நீ விரைந்து புறப்படுவாயாக.

உள்ள நாள்—உயிர் தாங்கிய இத்தனை நாளும், எனவே 'கார்காலத்தில் உயிர் தாங்கலாற்ருது விடுதற்கு நினைக்கும் நாளும் வரக்கூடும். ஆதலால் நீ விரைந்து புறப்படுதல் வேண்டும்' என மேகத்தை விரைந்து செல்லத் தூண்டும் குறிப்புத்தோன்ற மொழிகின்ருன். இனி உள்ள நாள் என்றது பிரிந்திருக்கவேண்டிய ஓராண்டுக்காலம் என்றலும் அமையும்.

கொண்கன்—நாயகன். அரவம்—தேரொலி. இன்னே —இப்பொழுது. ஓர்க்கும்—ஆராயும்.

வழிச்செலவு மங்கலமாகுமெனல்

10. பெருமிதத் துடனே வாயு மென்மெல வசைந்த ணைக்கும்
அருகிடஞ் சாதகப்புள் ளழுதெனப் பாட்டி சைக்கும்
முருகெழு வலாகை சூல்கொள் முயக்கினுல் வட்டமிட்டே
திருமலி கோலத் தீர்க்குச் சேணிடைச் சேவை செய்யும்.

விளக்கம்:

வழிச்செலவிற்கு அநுகூலமான காற்றுப் பெருமகிழ்ச்சி யுடனே மெல்ல மெல்ல அசைந்து நின்னை அணைத்துத் தொடரும். இடப் புறத்தில் வானம்பாடிப் பறவைகள் இனிமையாகப் பாடும். அழகிய பெண் கொக்குகள் கருத் தரிக்கும் இன்ப நுகர்ச்சியினுலே மாலையாகச் சூழ்ந்து வட்ட மிட்டுக்கொண்டு அழகிய தோற்றப்பொலிவை உடைய உமக்கு ஆகாயத்திலே தொண்டு செய்து தொடரும்.

அருகு இடம்—இடப்பக்கம். வலாகை—கொக்கு. சாதகப்புள்—வானம்பாடி. முருகு—அழகு. சூல்—கரு. முயக்கு—இன்ப நுகர்ச்சி. திருமலிகோலம்—அழகொழுகுந் தோற்றம். சேண்—ஆகாயம்.

அன்னம் வழித்துணையாகுமெனல்

11. அழகிய தாளி பூக்கும் அவனியிற் செல்வ மோங்கும்
பழகிய செவிகட் கின்பம் பயக்குநின் முழக்கங் கேட்டே
இளநளி னத்தின் தண்டை யிரைகொளு மெகினம் வெள்ளி
வளவரை வாவிக் கேகும் வழித்துணை நினக்கு மன்றே.

விளக்கம்:

அழகிய கந்தளிச் செடியைப் பூக்கச் செய்வதும் நிலத்திற் செல்வத்தை வளரச் செய்வதும் பழகிய செவிகளுக்கு இன்பத்தைத் தருவதும் ஆகிய நினது இடிமுழக்கத்தைக் கேட்டு, வழிக்கு உணவாகத் தாமரைத் தண்டின் துண்டுகளைக் கொண்டுசெல்லும் அரச வன்னங்கள் கார்வரவறிந்து இவ்விடத்தினின்றும் புறப்பட்டுக் கைலாசமலையின் பக்கத்திலுள்ள மானசவாவிக்குச் செல்லும். அவ்வன்னங்கள் நினக்கு வழித்துணையுமாகும்.

தாளி—கந்தளிச் செடி. அவனி—நிலவுலகம். நளினம்—தாமரை. எகினம்—அன்னம்.

வாவி—மானசவாவி. அது கைலைமலையை அடுத்த குபேர வனத்திலுள்ளது. அன்னப் பறவைகள் இவ்வாவியை விரும்பியுறையும். அவை, நீர்வறந்த காலங்களில் வேற்றிடஞ் சென்று வசிக்குமாயினும் கார்காலந் தொடங்கியதும் மீட்டும் இவ்வாவியை நினைந்து வந்து சேரும்.

நண்பனிடம் விடைபெற்றுச் செல்லெனல்

12. மண்ணுளோர் வணங்குங் கொண்டல் வண்ணனின் மலர்கள் தோய்ந்த
விண்ணுற நிவந்த கூட வெற்பனைத் தழுவிப் பன்னுள்
நண்ணுரு வகற்சிக் குள்ளம் நைந்திட நளின மன்ன
கண்ணினீர் சிந்திச் செல்வாய் காதலின் பெற்றி யஃதே.

விளக்கம்:

பூமியிலுள்ள மக்கள் விரும்பித் தொழுகின்ற முகில் வண்ணனாகிய இராமபிரானது திருவடித் தாமரைகள் தீண்டி நடந்த உயர்ந்த இந்தச் சித்திரகூட மலையாகிய நண்பனை நீ செல்லத் தொடங்குமுன் தழுவி விடைபெற்றுக்கொள்வாய். தழுவும்போது பல நாளாகப் பிரிந்திருந்த பிரிவிற்கு மனநெகிழ்ந்து, தாமரை மலர்போன்ற உனது கண்களினின்றும் சொரிகின்ற கண்ணீரைச் சிந்தி, அன்பின் பெருக்கைக் காட்டுதி; அன்பின் தன்மை, கண்டவழிக் கண்ணீர் சொரிதலாகிய அத்திறத்தது ஆதலான்.

கொண்டல்—முகில். முகிலின் நிறத்தை உடையோனு தலின் இராமன் கொண்டல்வண்ணன் எனப்படுவன். மலர்கள்—மலர்போன்ற திருவடிகள். நிவந்த—ஓங்கிய. கூடவெற்பன்—சித்திரகூட மலையாகிய நண்பன். பன்னுள் நண்ணுறு அகற்சி—பல நாட்களாக வந்து காணுத பிரிவு. நளினம்—தாமரை. பெற்றி—தன்மை.

வழித்திறங்கேளெனல்

13. செல்லுதற் குகந்த மார்க்கம் செப்புவன் முகிலே கேட்டி
செல்வழி யயர்வு நேரின் சிலம்பிடைப் புலம்பி யாங்கட்
கல்லலைத் தொழுகுந் தெண்ணீர்க் கதிர்மணிச் சுனைக ளுண்டால்
மெல்லவே படிந்து வேட்கை விளிந்திடப் பருகிச் செல்வாய்.

விளக்கம்:

முகிலே! இனி உன் வழிச்செலவுக்கு உகந்த வழியைச் சொல்லுகின்றேன் கேட்பாய். நான் சொல்லப்போகும் வழியில் மலைப்பாறைகளை அலைத்து ஒழுகுகின்ற, தெளிந்த நீரையுடைய அழகிய சுனைகளிருக்கின்றன. உனக்கு வழியில் அயர்ச்சி தோன்றுமாயின் அச்சுனைகளின் நீரைக் குடித்து, மலைகளிலிலே இருந்து முழங்கி, இனிதே செல்வாய்.

உகந்த—ஏற்ற. செப்புவன்—சொல்வேன். அயர்வு—வழியிளைப்பு. சிலம்பு—மலை. சுனை—மலைகளிலுள்ள நீர் நிலை. வேட்கை—நீர் விடாய். விளிந்திட—தீர்ந்திட. முகிலே! மார்க்கஞ் செப்புவன் கேட்டி. ஆங்கட் சுனைகளுண்டு. அயர்வு நேரின் பருகி புலம்பிச்செல்வாய் எனப் பொருள் முடிபு செய்க.

வடதிசைச் செல்லெனல்

14. பருவதச் சிகர மந்தோ பவனமீர்த் தெழுந்த தென்றுன்
உருவளர் செலவு நோக்கி யுளம்வியப் புறுவர் சித்தர்
சிறுமதி மடவார் செய்ய நிசுலமார் சிலம்பு நீங்கிப்
பெருவெளி வடபாலேகு பிழைத்திடு திசைநாகங்கள்.

விளக்கம்:

சித்திரகூட மலைச்சிகரத்தைக் காற்றுத்தான் தூக்கிச் செல்லுகின்றதோ என்று உனது விரைந்த செலவைக் கண்ட சித்த குல மடவார் அங்காந்து பார்த்துப் பேதைமையால்

மிகுந்த ஆச்சரியப்படுவர். (அவ்வாறு அவர்கள் ஆச்சரியப் படத்தக்க விரைந்த செலவுடன்) பசிய நிசுலச் செடிகள் நிறைந்த இராமகிரியை நீங்கி வானிலெழுந்து ஆகாயப் பெரு வெளியிலே வடதிசையை நோக்கிச் செல்வாயாக. வழியில் திக்கு யானைகளின் பெரிய துதிக்கை வீச்சுக்கு அகப்படாது போகக் கடவை.

பருவதம்—மலை. சிகரம்—உச்சி. பவனம்—காற்று. உரு—அச்சம். அஞ்சத்தக்க, விரைந்த செலவைக் குறித்து நின்றது. கெழு—பொருந்திய. சிறுமதி—பேதைமை. நிசுலம்—ஓர்வகைச் செடி. வெளி—ஆகாயம். திசை நாகம்—திக்கு யானைகள்.

வன்மீகக் குன்றிற் கண்ணனை ஒப்பாய் எனல்

15. பலமணிப் புணர்வு போன்று பரந்தவன் மீகக் குன்றில்
நிலவிடும் வான வில்லின் நிழல்பட நினது கோலம்
உலகினை யளந்தோன் கண்ண னுருவிலே கலபஞ் சூடக்
குலவிய கோல மொத்துக் கோமளஞ் செய்யு மன்றே.

விளக்கம்:

பல நிற மணிகள் சேர்ந்து ஒளிவிடுவதுபோலப் பரந்த வன்மீக மேட்டிலே ஒளிவிடுகின்ற இந்திரவில்லின் நிழல் படுதலினாலே உனது நிலமேனி, உலகினை அளந்த திருமால் ஆயர்பாடியிலே கண்ணனாய் அவதரித்தபோது உச்சியிலே மயிலிறகைச் சூடிக்கொள்ள அவனது நீலமேனி பொலிந்து காட்டிய திருக்கோலம்போல அழகுமிக்குப் பொலிந்து காட்டும்.

வன்மீகக் குன்று—கறையான் புற்று. கலபம்—மயிலிறகு. கோமளம்—இளமையோடு கூடிய அழகு.

மாளவ தேசத்து வளங்காண்பாயெனல்

16. மண்ணிடை யுழவுச் செல்வம் வழங்குவை மருதப் பெண்கள்
கண்ணினாற் பருகி நாளுங் கருத்தினால் நயப்பர் ; மேழி
அண்மையிற் றெருதல் போகி யவிர்தருங் கழனி மாளம்
விண்ணிடைக் கடந்து மேற்கு நிமிர்ந்துபின் வடக்குச் செல்வாய்.

விளக்கம்:

இம்மண்ணுலகிலுள்ளவர்களுக்கு உழவின் பயனைத் தருவாய். அதனாலே மருத நிலத்துப் பெண்கள் விகற்ப மறியாத தமது கண்களினாலே உனது கோலத்தைப் பருகி உள்ளத்தினாலே பலவாறு நயந்து கொள்வர். அவ்வாறு அவர்கள் நயந்து பாராட்டச் சிறிது முன்னாகக் கலப்பையாலே உழப்பட்டுப் பரிமளித்துக்கிடக்கும் மாளவ தேசத்து வயல்கள் மீது நீ தோன்றி அவற்றைக் கடந்து மேற்கே திரும்பிச் சிறிது போய்ப் பின் வடக்கு நோக்கிச் செல்வாய்.

மருதப் பெண்கள்—பள்ளியர். மேழி—கலப்பை. அவிர்தல்—விளங்குதல். கழனி—வயல்.

ஆமிரகூடம் களைப்பு நீக்குமெனல்

17. ஒருதனிப் பெயலான் முன்னா ளுறுவனத் தீயை மாய்த்த
அருவினைத் திறங்க ளுன்னி யாமிர கூட மன்பால்
வருநெறிக் களைப்பு மாற்றி வன்றலைச் சுமக்கும் நன்றி
சிறியரும் மறவா ரென்றாற் பெரியரைச் செப்பல் வேண்டா.

விளக்கம்:

ஒப்பற்ற பெரிய மழையினாலே முன்னொரு நாளிற் காட்டுத் தீயை அணைத்த உனது செயற்கருஞ் செயலை நினைந்து ஆமிரகூட மலை அன்போடு இருக்கை தந்து வழியிளைப்பு மாற்றித் தலையிலே ஏற்றுக்கொள்ளும். ஒருவர் செய்த நன்றியைச் சிறியோரும் மறவாரென்றாற் பெரியோரைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

பெயல்—மழை. அருவினை—செயற்கருஞ் செயல். நெறி—வழி.

ஆமிரகூடத்தில் நின்தோற்றம் இவ்வாறாகுமெனல்

18. காட்டுமாங் கனியால் வெண்மை கனிந்திடுஞ் சாரல் வெற்பின்
கோட்டினிற் றகரந் தோய்ந்த குந்தளம் நிகர்ப்பை; நல்லாள்
காட்டிய தனங்கள் மானக் கறுத்துமேல் வெளுத்த கோலம்
நாட்டங்கள் குளிர நோக்கி யமரரும் நயப்ப ரன்றே.

விளக்கம்:

பழுத்த காட்டு மாங்கனிகளினாலே வெண்மை நிறம் பெற்ற பக்கங்களையுடைய ஆமிரகூட மலையின் உச்சியை நீ சேரும் போது, மயிர்ச்சாந்து பூசி முடிக்கப்பட்ட கூந்தல்போலக் காட்சி தருவாய். பூமியாகிய பெண்ணின் தனங்கள்போல, மேலே கறுத்துப் பக்கமெல்லாம் வெளுத்த அம்மலையின் கோலத்தை அசுவினி தேவர்களும் கண்குளிரப் பார்த்துப் பாராட்டுவர் என்க.

சாரல்—மலைப்பக்கம். நல்லாள்—பூமி. தகரம்—மயிர்ச் சாந்து. கோடு—சிகரம். வெற்பு—ஆமிரகூட மலை. நாட்டங்கள்—கண்கள். அமரர்—தேவர்கள்.

இங்கே அசுவினி தேவர்களைக் குறித்தது.

நருமதை யாற்றையும் விந்திய மலையையும் காண்பாயெனல்

19. வனசர மகளி ராடும் வல்லிமண் டபங்கள் நோக்கி
இனன்கதி ரளையும் வெற்பிற் சிலபொழு திருந்து தண்மைக்
கனமறப் பொழிந்த பின்னர்க் கதுமெனச் சென்று காண்பாய்
புனைவரிக் கோல வேழம் போலுநன் மதையுங் குன்றும்.

விளக்கம்:

குறப்பெண்களிருந்து விளையாட்டயரும் கொடி மண்டபங்களைக் கண்டு மகிழ்ந்து, பின்னர்ச் சூரிய கிரணங்கள் அளைந்து விளையாடும் ஆமிரகூட மலையிற் சிறிது பொழுது தங்கிக், குளிர்ந்த நீர்க்கனங் குறையுமாறு மழைபொழிந்த பின், மெலிந்திருப்பாயாதலால், அப்பாலுள்ள இடங்களை விரைந்து கடப்பாய். செல்லும் வழியில் வெண்ணீற்றினாற் புனைந்த கீற்று வடிவத்தை உடைய யானைபோல நருமதை யாற்றின் அருவிகள் கற்பாறைகளில் மோதிச் சிதறுண்டு பிரிந்தோடும் விந்திய மலையைக் காண்பாய்.

வனசரமகளிர்—குறப்பெண்கள். ஆடும்—விளையாடும். வல்லிமண்டபம்—கொடிமண்டபம். குறவரிருக்கையிற் பல வகையான கொடியினங்கள் மரக்கிளைகளிலே பின்னிப் படர்ந்து ஆங்காங்கும் மண்டபங்கள்போலத் தோன்றும் என்க.

இனன்—சூரியன். வெற்பு—ஆமிரகூட மலை. கனம்—பாரம். கதுமென—விரைவாக. புனைவரிக்கோல வேழம்—வெண்ணீற்றுற் புனைந்த கீற்று வடிவத்தையுடைய யானை. நன்மதை—நருமதையாறு.

நருமதையின் நீர் பருகிச் செல்லெனல்

20. நிறைபெயல் கான்று காலின் நிலைகுலை யாது கானத்
துறைகளி றுகுத்த நீரா லுயர்மண முற்றுச் சம்பு
சிறைசெயத் தளரும் ரேவா நதிவரு நீருண் டேகாய்
வெறுமையே சிறுமை யார்க்கும் மிகுநிறை பெருமை யன்றே.

விளக்கம்:

பெயலைப் புறத்தே உமிழ்ந்த பின் நீ மெலிந்திருத்தல் கண்டு காற்று நின்னை அலைக்க வரும். நீ அதன் அலைப்பிற்கு அகப்படாது காட்டு யானைகளின் மணங்கமழும் மதநீரினுல் வாசனை பெற்றதும் கிளைத்துத் தழைத்த சம்புச் செடிகளால் வேகம் தடைப்பட்டதுமான நருமதை யாற்றின் நீரை நிறையப் பருகிச் செல்வாயாக. உள்ளீடு ஒன்றுமில்லாதவர்கள் சிறியவர்கள். நிறைவுடையவர்கள் பெரியவர்கள் ஆதலான்.

பெயல்—மழை. கான்று—உமிழ்ந்து. கால்—காற்று. நிலைகுலைதல்—அலைப்புறுதல். கானம்—காடு. சம்பு—ஒருவகைப் பிரம்பு. சிறைசெய—தடைசெய்ய. வெறுமை—உள்ளீடின்மை.

வழியிற் காண்பன இவையெனல்

21. பாதியே விரிந்த தாலே பசுமையுங் கபில முஞ்சேர்
கோதிலாக் கடம்பை நோக்கிக் குறுகிடும் வண்டி னீட்டந்
தாதவிழ் கதலிப் பூண்டின் முதற்றளி ரருந்தும் மான்கள்
மேதினி யுயிர்த்த கந்த முயிர்க்குநின் னெறியில் வேழம்.

விளக்கம்:

மேகமே! நின்னெறியிற் பாதி மலர்ந்தும் பாதி மலராதுமுள்ள இதழ்களையுடைமையாற் பச்சையுங் கபிலமுமான நிறங்காட்டுங் கடப்ப மலரை நோக்கி வண்டுகள் மொய்த்துக்கொண்டு போகும். குட்டைகளின் கரையில் முதற்றளிர் விட்டு மலர்ந்துள்ள காந்தளை மான்கள் உண்டு

நிற்கும். காட்டிலே யானைகள் நறுமணங்கமழும் நிலத்தின் கந்தத்தை மோந்துகொண்டுலாவும். இவை நீ போக வேண்டிய வழியைக் காட்டுவன.

கோது—குற்றம். தாதவிழ்—தாதுவிரி. கதலி—ஒரு வகைச் செடி, காந்தள் என்ப. மேதினி—நிலம். உயிர்த்த—வீசிய; கமழ்ந்த; நாறிய. கந்தம்—நறுமணம். நெறி—வழி. வேழம்—யானை.

வழித்தடை நீக்கிச் செல்க எனல்

22. நண்பவென் காத லால்நீ நனிவிரைந் தேகுந் தோறும்
விண்கமழ் குடச மல்கும் விலங்கன்மாட் டலங்கல் தோன்றும்
கண்டுளி பயிலத் தோகை கசிந்துநல் வரவு கூறிப்
பண்புட னகவு மொல்லும் பான்மையால் விரைந்து செல்வாய்.

விளக்கம்:

நண்ப! என் காதலி நிமித்தம் விரைந்து செல்லும் விருப்பமுடைய உனக்கு மணங்கமழும் மலைமல்லிகை நிறைந்த குன்றுகள் தோறும் தாமதமுண்டென்பதை அறிந்துகொள். கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய மயிலினம் உன்னைக் கூவி நல்வரவு சொல்லி இனிய பண்புதோன்ற அகவும். நீ ஒல்லும் வகையால்விரைந்து செல்வாயாக.

நனி—மிக. குடசம்—மலைமல்லிகை. காதலால்—நான் காதலிமேல் வைத்த காதலின் நிமித்தம்; என் மேலுனக்குள்ள காதலின் நிமித்தம். சிலேடை; விலங்கல்—மலை. அலங்கல்—தாமதம். அகவுதல்—சத்தமிடுதல். ஒல்லும் பான்மை—இயன்ற அளவு.

தசாரணத்தின் வளம் இதுவெனல்

23. முகைவிரி கைதை வேலி யுவவனம் வெண்மை சூழுந்
தொகைவிரி காக்கை சேக்கை தொடுத்திடுர் மரங்க ளார்க்குந்
தகைவிரி நாவற் சோலை சாமளக் கனியாற் றூங்குஞ்
சிகைவிரி யன்னஞ் சின்னுள் சேர்தசா ரணநீ சேர்வாய்.

விளக்கம்:

தசாரணமென்ற நாட்டின் பாங்கர், நீ செல்லும்பொழுது முகையில் விரிந்த கைதை மலரினுல் உபவனத்தின் விளிம்பாகிய கைதைவேலி வெண்ணிறங்கொண்டு விளங்கும். கூடு

கட்டுந் தொழிலே மேற்கொண்ட மிகுதியாகிய காகம் முதலிய பறவைகள் கிராமத்துப் பெருமரங்களில் இருந்து ஆரவாரிக்கும். நாவல் மரச் சோலைகள் பழுத்த, கரிய பழங்களாற் கரிய விளிம்படுத்திருக்கும். சில தினங்கள் தங்கிச் செல்ல விருக்கும் அன்னங்களும் அங்கே உண்டு.

முகை—மொட்டு. கைதை—தாழை. சேக்கை—கூடு; சாமளம்—கருமை. சிகை—சூடு. தகை—அழகு.

விதிசை நகரைச் சேர்வாயெனல்

24. திசைபுகழ் போகுந் தெய்வ விதிசைநன் னகரத் தாங்கண்
மிசைபடர்ந் துனது காதற் பேற்றினை முழுதுங் கொள்வாய்
வசைதவிர் சீர்த்தி வேத்தி ரவதியந் நகர்மு கத்தில்
நசைகுனி புருவ மாகும் நயந்திசைத் துண்பா யாண்டே.

விளக்கம்:

தசாரணவத்தின் தலைநகராகிய, திசையெல்லாம் புகழ் போக்கிய விதிசையென்ற பெயருடைய நல்ல நகரத்தை நீ அடைந்தால், உனது காதலின் முழுப்பயனையும் உடனே அடைந்தவனுவாய். குற்றமில்லாத புகழையுடைய வேத்திரவதியாறு அந்நகரின் முகத்தில் நெறித்த புருவம்போலத் தோன்றும். நீ அதன் கரைமருங்கில் முழங்கி அழகுபொலியப் பருகுவாய்.

மிசை—மேலே. படர்ந்து—சென்று. வசை—குற்றம். நசை—ஆசை ; விருப்பம். இசைத்து—முழங்கி ; இனிதாகப் பேசி. உண்பாய்—பருகுவாய்.

வேத்திரவதியின் நன்னீரை முகில் பருகுவது அந்நதியாகிய பெண்ணின் காதற்பயனை நுகர்வதுபோலும் என்க.

நீசை மலையிற் றங்கிச் செல்வாயெனல்

25. இளைத்தனை யாகி லாங்க ணிலங்கிடு நீசை வெற்பிற்
றழைத்தனை யிருத்தி ; மற்றுன் றண்மையாற் கடம்பு பூக்கும் ;
முழைத்தலம் கணிகை மாதர் முழுகிய வாசச் சுண்ண
வளத்தினை யுகுத்துச் செவ்வி வளநக ரிளமை காட்டும்.

விளக்கம்:

முகிலே! நீ இளைப்புற்றால் அந்த நீசை மலையில் உள்ளங் குளிரத் தங்குவாயாக. அங்கே உனது தண்மையாகிய தலையளியினாற் கடம்புகள் பூக்கும். அழகினையுடைய வளமிக்க அந்நகரம் மலை முழைஞ்சுகளிற் கணிகைமாதர் நீர் விளையாட்டில் உபயோகித்த வாசனைத் திரவியங்களை உமிழ்ந்து தனது கட்டுக்கடங்காத இளமையின் ஒழுக்கத்தை வெளிப்படுத்தும்.

தழைத்தனை—அன்பாலுள்ளங் குளிர்ந்து; முற்றெச்சம். முழைத்தலம்—சுனையிடங்கள். வாசச் சுண்ணம்—வாசனையுள்ள நானச்சாந்து. கணிகைமாதர்—விலைமாதர்.

வன நதியையுஞ் சோலையையுங் காணெனல்

26. அயர்வகன் றெழுந்த பின்னர் வனநதி யணவித் தோன்றும்
பயிர்வனக் குடசம் பூப்பப் பம்புநீர் பொழிந்து காதின்
உயர்மலர் சோர வேர்வை யொற்றிநாண் மலர்கள் கொய்வார்
முயல்விடு மதியம் போலும் முகநனி வருடிச் செல்வாய்.

விளக்கம்:

நீசை மலையில் இளைப்பாறிய பின் அடுத்து நினதுவழியில் வன நதி தோன்றும். அதன் கரையிலுள்ள சோலைகளில் மல்லிகை மொட்டுக்கள் விரியுமாறு புதுப்பெயலைப் பொழிந்து, காதுகளிலணிந்த தாமரைப் பூக்கள் வாடிச் சோருமாறு கன்னத்தில் வடியும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு அன்றலர்ந்த புது மலர்களைக் கொய்யும் மகளிரது கறை நீங்கிய மதியம்போலும் அழகிய முகங்களை அவர்களின் அயர்வு நீங்க அழுத்தமாக வருடிச் செல்வாய்.

அயர்வு—களைப்பு. அணவி—அடுத்து. பயிர்வனம்—பசிய சோலை. குடசம்—மல்லிகை. பம்பு—மிகுந்த. உயர் மலர்—தாமரைப்பூ. 'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை' ஆதலின் தாமரை மலர் உயர்மலரெனப்பட்டது. வியர்வை துடைக்கும்போது உண்டான வேதனையாலே காதிலணிந்த பூக்கள் வாடின.

நாண் மலர்—புது மலர். முயல்—கறை; களங்கம். நனி—மிகுதிப் பொருள்தரும் உரிச்சொல்.

உஞ்சைப் பதியைக் காண் எனல்

27. வடதிசைப் படரு மத்தம் வக்கிர மெனினுஞ் சுண்ணம்
படிநிலா முற்றந் தோய்ந்தே யுஞ்சையம் பதியைக் காண்பாய்
விடரகப் பாந்த ளேங்கு மின்னலை வியந்து மாதர்
மடவிழி யெடுத்து நோக்க வயப்பட்டு நிற்பை மன்னே.

விளக்கம்:

வடதிசை நோக்கிச் செல்லும் உனது வழி, வக்கிர முடையதாயினுஞ், சுண்ணந் தீட்டிய நிலா முற்றங்களிலே தோய்ந்து உச்சைனி நகரின் அழகைப் பார்த்துக்கொண்டு செல். அங்கே மலைவெடிப்புகளிலே குடிகொண்டு வாழும் பாம்புகளை ஏங்கச் செய்கின்ற உனது மின்னற்கொடியை வியந்து, நகரத்து மகளிர் இளமை எழில்பொலியும் கண்களை எடுத்து நோக்குவார்கள். நீ அவர்களின் பார்வையில் வசப் பட்டு மிகுதியாக உள்ளங் குழைந்து நிற்பாய்.

வக்கிரம்—மடங்கிச் செல்லுதல். வழியிலே மடங்கிச் செல்ல நேர்ந்தாலும் நகரின் அழகைப் பார்த்துக்கொண்டு செல் என்றது, உஞ்சைப் பதியின் சிறப்புத் தோன்ற நின்றது.

பாந்தள்—பாம்பு. விடரகம்—மலைவெடிப்பு. மன்—மிகுதிப் பொருளில் வந்தது. ஓ—அசை.

நிருவிந்தியை நுகர்ந்து செல்லெனல்

28. வெண்டிரை யார்க்க வார்க்கும் விகிரமே காஞ்சி காட்ட
மண்டலித் திழியும் வாரிச் சுரியலே யுந்தி காட்டப்
பெண்டெனப் பிறங்கு மாற்றின் பெருநல னுகர்ந்து செல்வாய்
ஒண்டொடி மகளிர் கூடற் கொருப்படுங் குறிப்பு மஃதே.

விளக்கம்:

வெண்மையான திரையொலிக்க, அத்திரையோடு சேர வட்டமிட்டொலிக்கும் புள்ளின் கூட்டங் காஞ்சியின் அழகைக் காட்ட, வட்டமாக வளைந்து வளைந்து இழியும் பெருக்கிடையே தோன்றும் நீர்ச்சுழி நாபியின் அழகைக் காட்ட, அவற்றினாலே பெண்டன்மை பொருந்தி விளங்கும் நிருவிந்தியின் காதல் நலத்தை நுகர்ந்து செல்வாய். மகளிர் கூடலை ஒருப்படு தற்குக் காட்டுங் குறிப்புகளும் அவையேயாகும்.

விகிரம்—புள்ளின் கூட்டம். காஞ்சி—மேகலை. மண்ட வித்தல்—வட்டமிடுதல். வாரி—நீர்ப்பெருக்கு. சுரியல்—நீர்ச்சுழி. உந்தி—நாபி ; கொப்பூழ். பெண்டு—பெண். பிறங்கும்—விளங்கும். பெருநலன்—இன்பம். ஒண்டொடி—ஒளிமிக்க வளையல். ஆறு—நிருவிந்தி நதி.

சிந்துவைத் தேற்றிச் செல்லெனல்

29. வறந்தசின் னீர தோட்டம் வார்குழல் வேணி யாகப்
புறந்தநன் மரத்து வீழும் பொன்னடைப் பசலை காட்டிச்
சிறந்தநின் பிரிவாற் றேம்புஞ் சிந்துவைத் தேற்றுஞ் சூழ்ச்சி
அறிந்தனை செல்வாய் காத லத்துணை நுண்மைத் தன்றே.

விளக்கம்:

வற்றிய, சிறிய நீரோட்டம், முடிக்கப்பெருது ஒரு புரியாகத் திரண்ட கூந்தலாய்த் தோன்றக், கரையிலுள்ள மரங்களினின்றும் வீழும் பழுத்த இலைகளாகிய பசலையைக் காட்டி உனது பிரிவினுல் வருந்துகின்ற சிந்துவின் துயரை நீக்குஞ் சூழ்ச்சிகளை அறிந்து செல்வாயாக. பிரிவாற்றியிருக்கும் மகளிரின் காதல் மிகவும் நுண்மைவாய்ந்ததாதலான்.

வறந்த—வற்றிய. புறந்த—புறத்த ; கரையிலுள்ள எதுகை நோக்கித் தகரம் மெலிந்தது. சிந்து—சிந்து நதி. பொன்னடை—பொன்போலும் நிறத்தையுடைய பழுத்த இலைகள். பொன் + அடை—பொன்னடை. அடை—இலை. பசலை—பிரிவாலுண்டாகும் நிறவேறுபாடு. சூழ்ச்சி—உபாயம்; அறிந்தனை ; முற்றெச்சம். நுண்மைத்து—மெல்லிய தன்மையுடையது.

உஞ்சைப் பதி துறக்கம் போன்றதெனல்

30. உவந்தன ராண்டின் மூத்தோ ருதயணன் காதை சொல்லும்
அவந்தியிற் றங்கிச் செய்யா ளருள்புரி விசாலை காண்பாய்
தவந்தரத் துறக்கந் துய்த்துச் சஞ்சித கன்ம மீண்டுச்
சிவந்தர நுகர்வார் போகத் திருநகர் போலு மன்றே.

விளக்கம்:

உதயணன் கதையில் மிகுந்த பயிற்சியுடைய முதியோர் நிறைந்திருக்கும் அவந்தி நகரிலே தங்கிய பின்பு, செல்வம் பெருகவேண்டித் திருமகள் விற்றிருக்கும் உஞ்சையம் பதியின்

பேரழகைக் காண்பாய். நல்வினைப் பயனாலே சுவர்க்க லோகங்களிற் பிறந்து போகந் துய்த்தவர்களுக்கு எஞ்சிய போகத்தை ஊட்டும் வினை பூமியிலிருப்பதால் அதனை அவர்கள் துய்த்தற்குச் சிவனது ஆணையினாலே பூமியிலமைத்த சுவர்க்கம் போன்றது அத்திரு நகரம்.

விசாலை—உஞ்சைப் பதி; உச்சைனி நகரம். செய்யாள்—திருமகள்.

சிப்பிரா நதியின் தென்றலை வருணித்தல்

31. போதவிழ் கமல வாசம் புணர்ந்தசிப் பிராவின் றென்றல்
சீதளங் கால மேனி சிலிர்த்திடுஞ் சிவந்த தாளின்
ஓதிமம் உவகை பொங்கி யொல்லென ஒலிக்கும்; அன்புக்
காதல ருரைபோ லின்பங் கலந்தவர் களைப்பு நீக்கும்.

விளக்கம்:

விரிந்த தாமரை மலர்களின் நறுமணங் கலந்த சிப்பிரா நதியிற் பிறந்த காற்றுக் குளிர்ச்சியைத் தருதலினாலே உடல் சிலிர்க்கும் சிவந்த காலினையுடைய அன்னங்கள் மகிழ்ச்சி பொங்கி இனிதாகக் கூவி ஒலிக்கும். இன்னும் அக்காற்றுப் போகம் வேண்டி நிற்கும் காதலர் மங்கையரிடம் இன்மொழி கூறுவதுபோல இனிதாக வீசி, முயங்கிக் களைத்த மாதரின் இளைப்பையும் போக்கும்.

போது—அலரும் பருவத்தையுடைய அரும்பு. சிப்பிரா—சிப்பிரா நதி. சீதளம்—குளிர்ச்சி. சிலிர்த்தல்—தளிர்த்தல். ஓதிமம்—அன்னம். ஒல்லென—ஒலிக்குறிப்பு. கலந்தவர்—கலவியுற்றவர்.

அவந்தியின் முதியோர்

32. மன்னவன் மகளைக் காதல் வற்சனிங் கெடுத்துச் சென்றான்;
பொன்னியல் தாலச் சோலை பொருந்திய விடமு மஃதே;
தன்னிய லழிந்த மத்தத் தடகரி திரிந்த தூங்காம்;
இன்னன கிளந்து மூத்தோ ரினியதம் விருந்தை யேற்பார்.

விளக்கம்:

'அவந்தி நாட்டரசனான பிரத்தியோத ராசன் மகளை அவள்மேற் காதல்கொண்ட வற்சராசனான உதயணன் இவ்விடத்திலே தூக்கிச் சென்றான். தால மரங்கள் நிறைந்த

பொன்மயமான உபவனம் இருந்த இடம் அங்கே யிருக்கின்றது. கட்டுத் தறியையும் முறித்துக்கொண்டு மதங்கொண்ட நளகிரி என்ற யானை திரிந்த இடம் உங்கே இருக்கின்றது' என்று இன்னோரன்ன பழைய கதைகளைச் சொல்லி அக்கிராமத்திலுள்ள முதியோர்கள் தம்மிடம் வந்த விருந்தினரோடு காலம் போக்குவர்.

மன்னவன்—அவந்தி நாட்டரசனாகிய பிரத்தியோதனன். மகள்—அவன் மகளாகிய வாசவதத்தை. வற்சன்—வற்சராசனாகிய உதயணன். மத்தம்—மதம். தடகரி—மலை போன்ற யானை. அது நளகிரி என்னும் பட்டத்து யானை. கிளந்து—சொல்லி.

அவந்தி மாநகர்

33. வாளயில் நயன மாதர் வார்குழல் நீவி யூட்டச்
சாளர வழியிற் செல்லுந் தண்ணகிற் புகையின் வாசங்
காளமா மேனியுற்றுக் களைப்பினை யொழிக்கும்; மஞ்ஞை
தாளது தூக்கித் தாந்தோந் தமியென நடனஞ் செய்யும்.

விளக்கம்:

கூரிய வேல்போலுங் கண்களையுடைய மகளிர் தமது நீண்ட கூந்தலை மெல்விரல்களினாலே கோதி ஊட்டும்போது பலகணிவழியாக வெளியே செல்லும் அகிற் புகையின் வாசனை உனது கரிய மேனியிற் படிந்து வழியிளைப்பை நீக்கும். வீட்டு மயில்கள் நட்புத்திறத்தால் உன்னைக் கண்டதும் அடிகளைத் தூக்கித் தாந் தோம் தமி என்று நடனஞ் செய்யும்.

வாளயில்—கூரியவேல். வார்குழல்—நீண்ட கூந்தல். நீவி—கோதி. சாளரம்—பலகணி. காளம்—கருமை. தாந் தோந் தமி—ஒலிக்குறிப்பு.

இதுவுமது

34. மதிநில வெறிக்கும் மேனி மங்கையர் தாளிற் பஞ்சி
பதிதரு சுவடும் வாசப் பன்மலர்த் ததைவுங் கொண்ட
விதிதரு மாடந் தோறும் வித்தகர் வினைகள் நோக்கிக்
கதிதரு வருத்தந் தீர்ப்பாய் காதலர்க்கினிய கொண்டால்!

விளக்கம்:

காதலின்பத்தை நுகரும் பேறுடையவர்களுக்கு இனிதாகத் தெரியும் கொண்டலே! சந்திரனின் நிலவென எறிக்கும் ஒளிமிக்க மங்கையர்கள் சீறடிக்கணிந்த செம்பஞ்சுக்

குழம்பு பதிந்த அடிச்சுவட்டையும், நறுமணங்கொண்ட பல்வேறு மலரினங்களின் நெருக்கத்தையுங்கொண்ட செல்வமிக்க மாடங்கள்தோறும் மனைக்கலை வல்லார் செய்த கைத்தொழிற் சிறப்புகளைப் பார்த்து வழியிளைப்பைத் தீர்த்துக்கொள்ளுதி.

பஞ்சி—செம்பஞ்சுக் குழம்பு. ததைவு—நெருக்கம். விதி—செல்வம். வித்தகர்—மனைக்கலைவல்லார். கதி—வழி.

மாகாளர் கேத்திரம் (கோயில்)

35. அண்ணலார் கண்டம் போல வழகிய காட்சித் தென்றே
கண்ணய ராது பூத கணங்களுங் காண மும்மைப்
பண்ணவன் பவானி சண்டி பணிந்திடும் பாதன் வைகும்
புண்ணியப் பதியுங் காண்பாய் பூவிலா ருன்னை நேர்வார்.

விளக்கம்:

தங்கள் தலைவரான நீலகண்டரின் கழுத்தைப்போலும் அழகிய கருநீலத் தோற்றத்தினை உடையாய் என்று பூதகணங்கள் உன்னைக் கண்ணிமையாது பார்க்க, மூவுலகுக்குங் குருவும் பவானி சண்டியென்னும் பெயருடைய உமையம்மையார் பணியும் திருவடிகளையுடையவருமாகிய மகேசுவரன் எழுந்தருளியிருக்கும் புண்ணிய தலத்தைச் சென்று காண்பாய். பூமியில் உனக்கு நிகராவார் யார்? மாகாளர் கேத்திரங் காணுந் தவம் உனக்கு இருத்தலினாலே சமமாவார் இல்லையென்றபடி.

அண்ணலார்—சிவன்; நீலகண்டன். மும்மை—மூவுலகம். பண்ணவன்—குரு. பவானி சண்டி என்பன உமையம்மையின் பெயர்கள். பூவில்—பூமியில். நேர்வர்—சமமாவர்.

கந்தவதி யாறு

36. விதுப்புறு வதன மாதர் மஞ்சனச் சாந்தும் வீற்றுக்
கதுப்புறு வசந்தப் பூவுங் காவியின் துணருங் கொண்டு
நுதுப்பறப் பாயுங் கந்த வதிநுகர் காற்றுப் பட்டு
மதுப்பொழி மதனச் சோலை வளப்பமுங் கண்டு செல்வாய்.

விளக்கம்:

நீர் விளையாடும் மகளிரது மஞ்சனப் பொடிகளாலும் அவர்கள் கூந்தலிலணிந்த மலர்களாலும் நறுமணமுற்றுக், குவளை மலர்களின் தாது பொருந்திக், கந்தவதி யாற்றின்

குளிர்ச்சியை நுகர்ந்து, வீசும் இனிய காற்றுப் படுதலினலே அசைந்து மதுவைப் பொழியும் விரும்பத்தக்க சோலை ஒன்று அங்கே உள்ளது. அதன் வளப்பத்தையுங் கண்டு செல்வாய்.

விதுப்பு—வேட்கை. விது—சந்திரன்; சந்திரன்போன்ற முகத்தையுடைய மகளிர். வதனம்—முகம். மஞ்சனச் சாந்து—குளிப்புக்குப் பூசும் சுண்ணம். வீறு—அழகு. கதுப்பு—கூந்தல். வசந்தம்—மணம். காவி—குவளை. துணர்—தாது. நுதுப்பு—தணிப்பு. மது—தேன். மதனச் சோலை—விரும்பத்தக்க சோலை.

மாகாளர் கோயிற் கணிகையர்

37. திருமணி மிடற்றுச் செல்வன் தெய்வசந் நிதியிற் போந்து
பருமணிச் சதங்கை யார்க்கப் பாணிசா மரைகள் தாங்க
இருமணித் தளிர்கள் தூக்கி யியல்நட மாடிச் சோர்ந்து
கருமணி குளிரக் காண்பர் சிறுதுளி கருணை செய்வாய்.

விளக்கம்:

அழகிய நீலகண்டத்தையுடைய மாகாளர் சந்நிதியிற் சென்று கால்களிற் சதங்கையொலிக்கக் கைகளிற் சாமரங்களை ஏந்தி அழகிய தளிர்போலும் மெல்லடிகளைத் தூக்கித் தேசிகக் கூத்தாடிச் சோர்வுற்ற கணிகைமாதர் கண்மணிகள் குளிர்ச்சி கொள்ள உனது வருகையை நோக்குவார்கள். அவர்களது மேனியிளைப்பு நீங்குமாறு அருள்செய்து சிறு துளிகளைத் தூவுவாய்.

திரு—அழகு. மணி—நீல மணி. மணிபோலும் மிடறு. மிடறு—கண்டம்; கழுத்து. செல்வன்—மாகாளர். சந்நிதி—முன்னிலை. பாணி—கைகள். மணி—அழகு. தளிர்கள்—தளிர்போன்ற பாதங்கள் இயல். நடம்—தேசிகக்கூத்து. கருமணி—கண்ணின் கருமணி.

மாகாளர் கோயிற் சேவை செய்யெனல்

38. செங்கதிர் படமுன் காளர் திருப்பதி சேர்வை யாகி
லங்குநீ யாறி மாலை யருச்சனை புரியச் சோதி
பொங்குமா மின்னற் றீபம் பொலிதரக் காட்டி வானம்
எங்குமத் தளம தாக விடிமுழக் கெடுப்பா யன்றே.

விளக்கம்:

சூரியன் மறையுமுன் மாகாளரது திருப்பதியை நீ சென்று சேர்வாயானல் அங்கே சிறிது ஆறியிருந்து சிவபெருமானது மாலைக்காலப் பூசைக்குச் சோதிவடிவாகிய மின்னல் விளக்கைக்

காட்டி ஆகாயம் முழுவதையும் மத்தளமாகக் கொண்டு இடியாகிய முழக்கத்தைச் செய்து பயன்பெறுவாய்.

செங்கதிர்—சூரியன். வழியிளைப்பை நீக்குதற்கும், மத்தளங் கொட்டுதற்கு வேண்டிய புதுப்பெலனை யடைதற்கும் ஆறியிருக்கவேண்டுமாதலின் செங்கதிர் படமுன் அங்கே சென்றுவிடுதி என்கின்றான்.

பொலிதர—கோயிலெங்குஞ்சோதி பொலிய.

மாகாளருக்குப் போர்வையாகெனல்

39. செஞ்சபை மலர்போற் பாவுஞ் செக்கர்வா னொளிநீ பெற்றுக்
குஞ்சித நடனத் தையன் புயவனங் குறுகிச் சூழ்ந்தாற்
குஞ்சர வுரிசெந் நீரிற் குலவுதல் காண்பை தேவி
அஞ்சுதல் நீக்கி நோக்கும் ஐயனு மாசை தீர்வன்.

விளக்கம்:

சிவந்த சபா மலர்போலப் பரந்துள்ள செக்கர் வானின் செவ்வொளியைப் பெற்று, மாகாளரது குஞ்சித நடனத்திலே அவ்வையனது புயங்களென்ற காட்டின் மேலே நீ சுற்றிப் படிவாயாகில் அவன் போர்த்துக்கொள்ளும் உதிரந் தோய்ந்த யானைத் தோல்போலக் காட்சி தருவாய். அக்காட்சியை உமா தேவியாரும் அச்சம் நீங்கிக் கண்கள் குளிரப் பார்ப்பாள். அவ்விறைவனும் யானையுரி போர்த்தலிற்கொண்ட தன் ஆசை நீங்கப் பெறுவான். நீயும் திருவருள் பெறுவாய்.

செஞ்சபை மலர்—சிவந்த சபா மலர். குஞ்சித நடனம்—வளைந்தாடும் நடனம். செக்கர் வானம்—மாலைக்காலத்துச் சிவந்த வானம். புயவனம்—கைகளாகிய காடு. கைகளின் மிகுதியாலும் மானைத் தாங்கியமையாலும், வனவேடரின் ஆயுதங்களுடைமையாலும் மாகாளரது திருக்கரங்கள் வனமென உருவகிக்கப்பட்டன.

குஞ்சர வுரி—யானைத் தோல். செந்நீர்—இரத்தம். நீ செக்கர் வானின் ஒளிபெற்றுச் செந்நிறத் தோற்றத்தோடு செல்ல அஞ்சிப் பார்த்த தேவியார் இறைவனது புயங்களைச் சூழ்ந்து நீ படிந்தவளவில் யானைத் தோல் என்று கருதி அச்சந்

தீர்ந்து நோக்கும் என்க. நோக்கும் எனவே அந்நோக்கத்தாற் பயனடைதலும் பெறப்படும். ஐயன்—இறைவனுகிய மாகாளர்.

தூர்த்த நாயகரைத் தேடிச் செல்லும் மகளிருக்கு வழிகாட்டெனல்

40. காதலர்த் தேடி யில்லங் கனையிருட் செல்லும் மாதர்
வீதியில் விலங்கிச் செல்வர்; மெய்ந் நெறி விளர்த்தல் வேண்டி
ஓதிடு முரைகன் மீது தமனிய வோட்டம் போலச்
சோதிகால் மின்னுச் செய்வாய்; சோபன முரைப்பர் மாதோ.

விளக்கம்:

தாம் விரும்பிய நாயகரைத் தேடி அவரில்லத்திற்குச் செறிந்த இருளிற் செல்லும் மகளிர் வழியில் வளைந்து வளைந்து செல்வர். அவர்களுக்கு நேரான வழியைக் காட்டுதற்காக உரைகல்லிற்றீட்டிய தங்கக் கீறுகள்போல ஒளிமிக்க மின்னலைச் செய்வாய். மின்னலொளியால் வழிதெரிந்துகொள்ளும் அம் மகளிர் உனக்குப் பல்லாண்டு சொல்லி வாழ்த்துவர்.

கனையிருள்—செறிந்த இருள். விலங்கி—வளைந்து. வழி தெரியாமையால் வளைந்து செல்வர். நெறி—வழி. விளர்த்தல்—வெளுத்தல். இருண்டு கிடக்கும் வழியை மின்னலால் வெளிக்கச் செய்யுமென்க.

உரைகல்—பொன்னை உரைத்து மாற்றறியும் கல். இக்கல் கருமை நிறமுடையது. இதிலே பொன்னை உரைக்கும்போது தோன்றும் பொற்கீறுகள்போல அக்கனையிருளில் மின்னல் தோன்றுமென்க. மகளிர் தமக்கு வழிகாட்டிய நன்றியை எண்ணிச் சோபனமுரைப்பர்.

துயிலிடங் காட்டல்

41. புறவுகண் ணயரு மாடப் புறத்திர வெல்லா முன்னோ
டுறவுகொள் மின்னற் செல்வி யுயவறப் பள்ளி கொள்வாய்
எறிகதி ரருணன் றோன்ற வெஞ்சிய நெறியிற் செல்வாய்
செறிதரு நண்பர் சேவை செய்தலிற் றுழா ரன்றே.

விளக்கம்:

புறுக்கள் துயிலுகின்ற உயர்நிலை மாடங்களின் புறத்திலே இராப்பொழுது முழுதும் உன்னோடு அன்பு பூண்ட காதலியாகிய மின்னற் செல்வியுடன் அவளது வருத்தந் தீரப் பள்ளி கொள்

வாய். எறிக்கின்ற கிரணங்களையுடைய ஞாயிறு தோன்றும் வைகறையிலே துயிலுணர்ந்து இன்னுங் கடத்தற்கிருக்கின்ற எஞ்சிய வழியிலே செல்வாய். அன்புமிக்க நண்பர் நண்பருக்குத் தொண்டுசெய்வதில் ஒருபோதும் தாமதிக்கார், ஆதலினாலே நீயும் தாமதிக்கமாட்டாய்.

புறவு—புறு. கண்ணயருதல்—துயிலுதல். 'இரவெல்லாம் மாகாளரது கோயிலில் உன்னோடு மின்னிக்களைத்த மின்னற் கொடி' என்ற உரையும் கொள்க.

உயவு—வருத்தம். நெறி—வழி. அருணன்—சூரியன். சேவை—தொண்டு. தாழார்—தாமதஞ் செய்யார்.

காலைக் கதிரவனை மறையாதே எனல்

42. புலந்தவர் விழியி னீரைப் போக்குநற் புலரி யீதே
கலந்திடக் கண்ணீர் சோருங் கமலினி யூடல் தீர்ப்பான்
வலந்திக ழலரிச் செம்மல் வான்கர மெடுத்து நீட்டும்
விலங்கிநீ மறைத்தல் செய்யாய் வெகுண்டிடு முள்ள
மன்றே.

விளக்கம்:

(நீ எழுந்து செல்லும் வைகறையிலே) புலவியினின்றும் நீங்கிக் கலவியை விரும்பிக் கண்ணீர் சொரிகின்ற தாமரை மலராகிய தனது நாயகியின் ஊடலை நீக்கும்பொருட்டு வெற்றியொடு விளங்கும் ஞாயிறாகிய தலைமகன் தனது பெரிய கரங்களை எடுத்து நீட்டுவான். அவனுக்கு இடையே நீ குறுக்கிட்டு மறையாதே. மறைப்பாயாயின் அவன் உள்ளத்தில் அளவற்ற கோபமுண்டாகி உன்னைக் காய்வான். தலைமகன் புலவியுற்ற தலைமகளின் கண்ணீரைப் போக்கி ஊடல் தீர்க்கும்பொழுது வைகறையாதலால்.

புலந்தவர்—ஊடியவர். புலரி—வைகறை. கண்ணீர்—பனித்துளியாகிய கண்ணீர். கமலினி—தாமரை நாயகி. ஊடல்—புலவி. வலம்—வெற்றி. விலங்கி—குறுக்கிட்டு. வெகுளல்—கோபித்தல்.

கம்பீரை யாறு

43. ஆன்றவ ருள்ளம்போல வாழ்ந்தகம் பீரை யாறு
சான்றநின் காளச் சாயல் தன்வயி னீர்த்து நெய்த
லேன்றதன் கயற்கண் காட்டி யியல்புற நோக்கு மன்பி
னீன்றவ ரனையாய் ! நீக்கி யேகுதல் நீர்மை யன்றால்.

விளக்கம்:

பெரியோருள்ளம்போல ஆழமிக்க கம்பீரை யாறு உனது கருமை நிறைந்த சாயலைத் தன்மாட்டு இழுத்துக்கொண்டு வெண்ணெய்தல்போன்ற தன் கயல்களாகிய கண்களைக் காட்டி மனவிகாரமில்லாத இயல்பு நோக்கால் நோக்குவாள். அன்பினுல் அன்னை, தந்தையரை ஒக்கும் மேகமே! அவள் பார்வையை நீக்கிச் செல்லுதல் ஒப்புரவாகாது.

நின் காளம் சான்ற சாயல் என இயைக்க.

காளம்—கருமை. சாலுதல்—நிரம்புதல். ஈர்த்தல்—இழுத்தல். 'இயல்புற நோக்கும்' என்றதனுல் நெய்தல் வெண்ணெய் தலைக்குறிக்கும். நெய்தல்—குமுத மலர். நீர்மை ஒப்புரவு; நாகரிகம்.

கம்பீரையை நுகர்ந்து செல்லெனல்

44. நீலநீ ராடை மெல்ல நெகிழ்கரை யிடையிற் சோரக்
கோலமார் சூரற் கையாற் கொள்ளுதல் கண்டு காதற்
ருேழநின் செலவு சாலத் தாழ்ந்திடும் தூங்கி நிற்பாய்
ஏலுமோ வின்பங் கண்டார்க் கேந்திழை யிடைகண் டேகல்.

விளக்கம்:

அந்த நதியாகிய பெண், தான் அணிந்துள்ள நீல நீரென்னுஞ் சேலை, மெல்ல நெகிழ்கின்ற கரையாகிய இடையினின்றும் நழுவ, அதனை அழகுற வளர்ந்த பிரப்பங் கொடியாகிய கைகளாற் ருங்குவாள். அப்பொழுது அன்புடைய நண்பனே! உனது விரைந்த செலவு சிறிது தாமதமாகும். நீயும் அவளை அந்த நிலையில் விட்டுச் செல்லமாட்டாது அயர்வுற்று நிற்பாய். இன்பத்தை அநுபவித்து உணர்ந்தவர்களுக்கு மகளிரின் மெலிவு கண்டும் விட்டுப் பிரிதல் இயலுமோ? இயலாதென்றவாறு.

சூரல்—பிரம்பு. கரையிலே உயர வளர்ந்து, மடிந்து நீரைத் தொடும் பிரப்பங் கொடிகள் நீராகிய சேலையை வழுவாது தாங்கும் கைகள்போலத் தோன்றும்.

கோலம்—அழகு. ஏந்திழை—பெண்.

காற்றுத் தேவகிரிக்குக் கொண்டு செல்லுமெனல்

45. புதுப்பெயல் பொழியப், பூமிப் புதுமணப் புணர்வு கொண்டு,
மதக்களி ருர்ந்து பொங்கி மகிழ்வுற, வனத்திற் காய்த்துப்
பதப்படப் பழுத்த வத்திப் பழமணம் பரக்க வீசிக்
கதித்தெழு காற்றுத் தேவ கிரிக்குனைக் கதுவிச் செல்லும்.

விளக்கம்:

கார்காலத்து முதல் மழையை நீ பெய்ததும், நிலத்திற் ரோன்றிய புது மணங் கலக்கப் பெற்று, அம்மணங் கலக்கப் பெறுதலினாலே மதயானைகள் விரும்பியுட்கொண்டு துதிக்கைகளை உயர்த்திப் பிளிறி மகிழ்ச்சியடையக், காடுகளிற் காய்த்துப் பதமுறப் பழுத்த அத்திப் பழங்களின் இனிய மணம் பரக்க வீசி, ஒலித்தெழுகின்ற காற்றுத் தேவகிரிக்கு உன்னைப்பற்றி யணைத்துச் செல்லும்.

புதுப்பெயல்—முதல் மழை. முதல் மழை பெய்ததும் பூமியில் மண்மணங் கமழும். அம்மணங் கலந்து வீசுங் காற்றை யானைகள் விரும்பி நுகரும்.

வனம்—காடு. கதித்து—ஒலித்து. கதுவுதல்—பற்றி அணைத்தல்.

முருகவேளை வழிபடுக எனல்

46. கந்தவே ளுறையும் வெற்பிற் கடிமலர்க் கொண்ட லாகி
அந்தர கங்கை நீரான் மஞ்சன மாட்டி நிற்பாய்
இந்திரன் முதலாந் தேவர் யாரையுங் காக்க நெற்றிச்
செந்தழற் பிறந்தான் ஐயன் திறமெவர் செப்ப வல்லார்.

விளக்கம்:

குமரக் கடவுள் விரும்பியுறையும் தேவகிரியிலே நீ புட்ப மேகமாக மாறி ஆகாய கங்கையின் நீரினாலே அக்குமரவேளை நீராட்டி மலர்களைச் சொரிந்து அருச்சிப்பாய். இந்திரன் முதலான தேவர்களெல்லோரையும் காக்கவேண்டிச் சிவ பெருமானது நெற்றியிலுள்ள சிவந்த அக்கினிக் கண்ணிலே பிறந்த அப்பிரானது பெருமையைச் சொல்லவல்லவர் யாவர்? ஒருவருமில்லை என்றவாறு.

கடி—வாசனை. மலர்க்கொண்டல்—புட்ப மேகம். மலர்க் கொண்டலாதலினாலே அஞ்சன மாட்டுதலுடனே அருச்சனை புரிதலுங்கொள்க.

முருகவேளின் மயிலை ஆடச் செய்யெனல்

47. மைந்தனிற் கொண்டவன்பால் மலைமக ளுதிர்ந்த நீலச்
சுந்தரக் கலாபங் காதிற் சூடுவாள்; தூயோன் சென்னி
இந்துவி னொளியாற் ரேகை யிலங்கிடும் மஞ்ஞை யாட
அந்தரத் திருந்து மின்னி யாங்கெதி ரொலிக்க வார்ப்பாய்.

விளக்கம்:

நின்மலனாகிய இறைவனது திருமுடியிலிருக்கும் இளம் பிறையின் ஒளியினாலே தோகையிலுள்ள கண்கள் பிறைக்கீற்று வடிவாக விளங்கும் அக்குமரனது மயில் ஆரவாரித்துக் கூத்தாட நீ மேலே இருந்து மின்னி அத் தேவகிரியிலே எதிரொலியுண்டாகுமாறு முழங்குவாய். அப்போது அக் குமரனிடங் கொண்ட பேரன்பினாலே ஆடும் மயிலினின்றும் உதிருகின்ற நீலத் தோகையை உமையம்மையார் எடுத்துத் தனது காதிலணிந்து கொள்வாள்.

அம்மையாருக்கு மைந்தனிலுள்ள அன்பு மைந்தனின் மயிலிடத்துஞ் செல்லுதலால் உதிர்ந்த தோகையை அன்போடு எடுத்து அணிந்து மகிழ்ந்தார். பிறைக்கீற்றின் ஒளிவட்டம் தோகையின் கண்களிற் படத் தோகை முழுவதும் ஒளிவட்டம் தோன்றும்.

இந்து—பிறை.

சித்தர் விலகிச் சேறல். சருமவதி நதி

48. சரவணத் துதித்த செம்மல் தாளிணை பரவுஞ் சித்தர்
இருவரும் வீணைத் தந்தி யிளகுமென் றஞ்சி நீங்கும்
சிறிதிடஞ் செல்ல வேள்விச் சிறப்பினா லிரந்தி தேவன்
மருவிய கீர்த்தி மண்ணி லாறென வயங்கும் போற்றாய்.

விளக்கம்:

சரவண வாவிற்றோன்றிய குமரக் கடவுளது திருவடிகளைத் துதிக்குஞ் சித்தர்கள் இருவரும் தமது வீணை நரம்புகள் இளகுமென்ற அச்சத்தால் நீ செல்லும் வழியை விட்டு நீங்கி வேறு வழியாகச் செல்வார்கள். அவ்விடத்தினின்றுஞ் சிறிது தூரஞ் செல்ல இரந்திதேவன் செய்த பசு வேள்விச் சிறப்பினால் அவனுக்குப் பொருந்திய புகழானது பூமியிற் சருமவதி என்னும் ஆறாக விளங்கும். அவ்விடத்தில் நீ மேலே நின்று வணங்குவாய்.

சித்தர் இருவர்—குமரக் கடவுளை வீணையிற் பாடித் துதிக்கும் கிம்புரு நாரதர்; மழைத்துளி பட்டுத் தந்திகள் இளகுமென்ற அச்சத்தால் வேற்று வழியே செல்வர்.

இரந்திதேவன்—தசபுர மகாராசன். இவன் கோமேத யாகஞ்செய்து புகழ்பெற்றவன். அந்த யாகத்தில் ஓடிய இரத்தம் ஆறாகப் பூமியிற் பாய்ந்து சருமவதியென்ற பெயரைப் பெற்றதென்ப.

சருமவதியில் நீருண்ணும் தோற்றம்

49. மாயவன் நிறங்கொள் மஞ்சே! மாண்புசால் நதியின் பாங்கர்த்
தோயம தருந்துந் தோற்றஞ் சுந்தரத் தேவர் கண்டு
பாயுநீர் முத்த மாலைப் பதித்திடு நீலக் கல்லே
ஏயும்பூ மடந்தைக் கென்று நோக்குவ ரிடைவி டாதே.

விளக்கம்:

மாயோனது நீல நிறங்கொண்ட மேகமே! பெருமை மிக்க அந்நதியின் பக்கத்தே குனிந்து நீர் பருகும் உனது தோற்றத்தை விண்ணிலே உலாவுந் தேவர்கள் கண்டு, நில மகளுக்கு அணிகலனாக ஓடுகின்ற, தெளிந்த சருமவதியின் நீராகிய முத்துமாலையின் நடுவே பதித்த நீலக் கல்லுப் போல்வது இம்மேகமென்று சொல்லி இடைவிடாது நோக்குவர்.

மாயவன்—திருமால். மாண்பு—பெருமை. தோயம்—நீர். பாங்கர்—பக்கம். ஏயும்—ஒப்பாகும்.

தசபுர நகரம்

50. அஞ்சனப் புருவ வில்லு ளமைந்தயில் நோக்கஞ் சான்று
கஞ்சமா ரிமைக ளேறக் கருமணிப் பொலிவு காட்டி
விஞ்சுவெண் டோட்டுக் குந்த மல்லிகை வீழும் வண்டிற்
றஞ்சமற் றசையு நாட்டத் தசபுர மகளிர்க் காண்டி.

விளக்கம்:

அஞ்சனந் தீட்டிய நீண்ட புருவமாகிய வில்லினுள்ளே கிடந்து, வேல்போலும் பார்வை நிறைந்து, தாமரை இதழ் போன்ற இமைகளை மேலே நிமிர்த்துவதாற் கருமணியின் பொலிவைக் காட்டி, மிகுந்த வெண்மையான இதழ்களை உடைய குந்த மல்லிகையிலே வீழும் வண்டைப்போலத் தஞ்சமற்றசையுங் கண்களையுடைய தசபுர நகரத்து மகளிர் காணுமாறு செல்வாய்.

அஞ்சனம்—கண்ணுக்குத் தீட்டும் மை. அயில் நோக்கம்—கூரிய வேல்போன்று ஆடவரை வருத்தும் பார்வை. சான்று—நிரம்பி. கஞ்சமார் இமை—தாமரை இதழ் போன்ற இமை. இமைகளை மேலே நிமிர்த்தி நோக்கும்போது கண்ணின் கருமணி பொலிந்து தோன்றும்.

மல்லிகை காற்றிலசைய வண்டுகள் பற்றுக்கோடில்லாது அசையும். அதுபோல அசையும் பார்வை என்றவாறு.

குருக்கேத்திரம்

51\. வளம்பயில் பிரமா வர்த்த மகிழ்வுறத் தண்மை காட்டித்
தளம்பயில் கமல மீது தாரைநீ பொழிதல் போலக்
களம்பயில் தறுகண் வீரர் கவந்தமாக் குன்ற மாக
வளம்பயில் பார்த்தன் வாளி யுய்த்தசெங் களமுங்
காண்டி.

விளக்கம்:

வளப்பம் மிக்க பிரமா வர்த்தமென்ற தேசத்தைக் குளிர்ச்சியால் மகிழச்செய்து, தாமரை மலர்கள்மீது நீர்த் தாரைகளை நீ பொழிவதுபோலப் பல போர்க்களங்களிற் பயின்ற தறுகண் வீரரின் கவந்தங்கள் பெரிய குன்றமாகக் குவிய ஊக்கமிக்க அருச்சுனன், அவர்களின் தலைகளிலே அம்புகளைச் சொரிந்த குருக்கேத்திரத்தையும் காண்பாயாக.

தளம்—பூவிதழ். தாரை—நீர்த்தாரை. கவந்தம்—தலையில்லாத உடம்புகள். வளம்—ஊக்கம். பார்த்தன்—அருச்சுனன். வாளி—அம்பு. செங்களம்—குருக்கேத்திரம்.

சரசோதி நதி

52\. நட்பினாற் சமரை நீத்துத் தீர்த்தயாத் திரையை நாடுங்
கொட்பினால் விழியின் சாயல் குலவிடு மதுவுண் ணாது
பெட்புறு வாணித் தெண்ணீர் பருகுவன் முசலி நீயும்
புட்கரங் கொள்வை யாகிற் புந்தியிற் புனிதங் காண்பாய்.

விளக்கம்:

பாண்டவரிடத்தும் நூற்றுவரிடத்தும் சமமாகக்கொண்ட நட்பினாலே பாரத யுத்தத்தை விரும்பாது நீக்கித் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ளும் கொள்கையனாகித் தனது மனையாளது விழியின் சாயல் படிந்த இனிய மதுவுண்ணு தலையுந் துறந்து, அழகுமிக்க சரசோதி நதியின் தெளிந்த நீரைப் பலராமன் பருகினான். நீயும் அந்நதியின் நீரைப் பருகுவாயானால் மனத்தூய்மையடைவாய்.

சமர்—போர். தீர்த்த யாத்திரை—புண்ணிய நதிகளில் நீராடுதற்காகச் செல்வது. கொட்பு—கொள்கை. பெட்பு—அழகு. வாணி—சரசோதி நதி. முசலி—பலராமன். புட்கரம்—தண்ணீர்; சரசோதி நதியின் நீரைக் குறித்தது.

பலராமன் மனைவி இரேவதி. கற்பிலும் அழகிலும் சிறந்தவள். பலராமன் தன் பத்தினியோடு சேர்ந்து மதுவருந்தி மகிழும் வழக்கமுடையவன். அவள் மதுவை வார்க்கும்போது அவளுடைய கண்களின் சாயல் மதுவிலே விழுவதைப் பார்த்துப் பலராமன் பெரிதும் மகிழ்வான். அதனாலே அவன் மதுவருந்துவதை ஒருபோதும் தவறவிடுவதில்லை. இத்தகையானுக்கு நேர்ந்த சாபமும் ஒன்று உண்டு. பலராமன் ஒருகால் நைமிசாரணியத்துக்குப் போனபோது சூத முனிவர் அவனை உபசரியாதபடியாற் குசப்புல்லினால் அந்த முனிவரைக் கொன்றான். கொன்ற பாவந் தீரத் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டிய நியதியும் பெற்றான். எனவே தீர்த்த யாத்திரையைச் சாட்டாக வைத்துப் பாரத யுத்தத்தை மேற்கொள்ளாது சென்று சரசோதி நதியின் புனித நீரைப் பருகினான் என்க. அதுபோல நீயும் அந்த நன்னீரைப் பருகினால் வெளியே கருநிறமுற்றாலும் உள்ளே தெளிவு பெறுவாய்.

கங்கை நதி

53. மலையர சுதித்துப் போந்து, மாகன கலத்தி ழிந்து
நிலைபெறு துறக்கஞ் சேர நீள்படி சாக ரர்க்காய்
அலைபுரள் கங்கை மாதை யணைந்திடா யுமையாள் சீறச்
சலநுரை நகைசெய் தண்ணல் சடைமதி பற்றி யேறும்.

விளக்கம்:

மலைகளுக்கரசனான இமயத்திற் பிறந்து, பெரிய கனகசைல மலைக்குப் பக்கத்தே வீழ்ச்சியடைந்து, நிலைபெற்ற துறக்கவின்பத்தைச் சகரபுத்திரர் அடைதற்குப் படிபோலுதவி, அலைபுரண்டோடும் கங்கை நதியாகிய பெண்ணை அணைத்துச் செல்வாய். அக்கங்கையானது உமையம்மையார் சீற்றங்கொண்டு நோக்க அவ்வம்மையாரைப் பார்த்து நுரையாகிய நகைசெய்து இறைவனது சடையிலுள்ள பிறைச்சந்திரனை அலைக்கைகளாற் பற்றி ஏறும் பெருமை வாய்ந்தது.

மலையரசு—இமயமலை. மாகனகலம்—கனகலம். இது அரித்துவாரத்துக்குக் கிட்ட உள்ள ஒரு தீர்த்தம், இங்கே கங்கை மேலிருந்து கீழே வீழ்கின்றது.

துறக்கம்—சுவர்க்கம். சாகரர்—சகரனது புத்திரர் அறுபதினாயிரவர் சாகரர் எனப்படுவர். இவர்கள் கபிலமுனிவரது சாபத்தாற் சுவர்க்கமடைந்திலர். அதை இவர்களது வழித்

தோன்றலாகிய பகீரதன் வசிட்டமுனிவர் வாயிலாக அறிந்து தவஞ்செய்து கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து இவர்களது இறந்த எலும்பின்மீது பாயச்செய்து எல்லோரையுஞ் சுவர்க்கம் புகுவித்தான் என்பது வரலாறு. இச் சாகரரைச் சுவர்க்கமேற்றிய படிபோன்றது கங்கை என்க.

இமயமலையில் மேகம் படியுந் தோற்றம்

54. வெண்பனி படர்ந் துயர்ந்து விரைகிளர் புனுகு மான்கள்
பண்பொடு பயிலும் பாறைப் பகீரதி பிறந்த குன்றிற்
கண்படை கூரத் தங்குங் காட்சிமுக் கண்ணன் வெள்ளைத்
திண்டிற லேறு கொம்பாற் றிரித்தமண் குன்று போலும்.

விளக்கம்:

வெண்மையான பனி படர்ந்துள்ளதும், உயர்ந்ததும், புனுகு மான்கள் நன்மையோடு பயிலும் பாறைகளையுடையதும், பகீரதி யாறு பிறந்ததும் ஆகிய இமயமலையில் நீ உனது களைப்பு நீங்கத் துயில்கொள்ளும் காட்சியானது முக்கண்ணனாகிய சிவனது வெண்மையான வலிமிக்க எருது தனது கொம்பினாற் பெயர்த்துவிட்ட மண்குன்றுபோல விளங்குவாய்.

ஏறு இமயமலைக்கும் மேகம் மண்குன்றுக்கும் உவமம்.

விரை—நறுமணம். பண்பு—நன்மை.

பகீரதனாற் கொண்டு வரப்பட்டமையாற் கங்கை பகீரதியெனவும் பெயர்பெற்றது.

கண்படை கூர்தல்—துயிலுதல்.

கங்கை நீர் பருகும் மேகத்தின் தோற்றம்

55. விண்ணிடைப் பின்னங் காலில் வேழநிற் பதுபோல் நீயும்
புண்ணியப் படிகத் தெண்ணீர் பொற்கையாற் பருகி நிற்பாய்
நண்ணிய வுனது சாயல் நறும்புன லகத்துக் கண்டோர்
மண்ணிடை யமுனை வேறோர் மருங்கினு மருவிற் றென்பார்.

விளக்கம்:

விண்ணிலே திக்குயானை பின்னங்காலில் நிற்பதுபோல நீயும் மேலே நின்று கங்கையின் புண்ணியப் பயனுடைய படிகம்போன்ற தெளிந்த நீரை மின்னலென்னும் பொற்

கைகளால் அள்ளிப் பருகுவாய். பருகும்போது கங்கையிற் படிந்த உனது சாயலைக் கண்ட மலைவாணர்கள் பிரயாகை யிலன்றி மற்றுமோரிடத்திலும் யமுனை நதி கங்கையிற் கலக் கின்றது என்று சொல்வார்கள்.

வேழம்—திக்குயானையைக் குறித்தது. மருங்கு—பக்கம். இங்கே மற்றோர் இடத்தைக் குறித்தது. மருவுதல்—கலத்தல். யமுனை—கங்கையோடு கலக்கும் ஒரு நதி. அது கருமை நிறமுடையது. பிரயாகை என்னுமிடத்தில் அது கங்கையோடு கலக்கும். அக்கலக்குமிடத்திற் றோன்றும் அழகு உனது கருநிறச் சாயல் படிந்த இடத்திலும் உண்டாதலால் 'யமுனை வேறோர் மருங்கினும் மருவிற்று' என்றார்கள்.

காட்டுத் தீயை ஆற்றவேண்டுமெனல்

56. மொத்திடுந் தென்றல் கால முதிர்சினைத் தேவ தாரு
வுய்த்திடு கானத் தீயங் குலவிய கவரி தீத்தாற்
பத்தியாற் பத்து நூறு பெயல்பொழிந் தாற்ற வேண்டும்
உத்தமர் செல்வ மாபத் துறுமவர்க் குதவு மன்றே.

விளக்கம்:

மோதியடிக்கின்ற பெருங்காற்று வீசும்போது தேவதாரு மரங்களின் முதிர்ந்த கிளைகள் ஒன்றோடொன்று உரோஞ்சு வதால் உண்டான காட்டுத் தீ அங்கே கூட்டமாகத் திரியுங் கவரிமான்களின் உரோமத்தைப் பொறிகளால் எரிக்குமாயின் உனது கருணையால் உடனே ஆயிரம் பெயல்களைச் சொரிந்து அத்தீயை முற்றாக நீ அணைத்துவிடவேண்டும். நல்லோர் மாட்டுள்ள செல்வம் ஆபத்துக்குள்ளானவர்களுக்கு உதவும் இயல்புடையதாதலால்.

முதிர்தல்—முற்றுதல். சினை—கிளை.

கல் மழை பெய்யெனல்

57. விலங்கியுன் மார்க்கஞ் சாடி வேகமுஞ் சினமும் பொங்கிக்
கலங்கிவீ றழிந்து கொன்னே காய்ந்திடு சரபப் புள்ளுங்
குலைந்திடக் கல்லின் மாரி கொட்டுவாய் கோல மஞ்சே
பலன்தரா வினையை முன்னிப் பரிபவ மடையார் யாரே.

விளக்கம்:

அழகிய மேகமே! அங்கே கோபத்தால் வேகமாகத் துள்ளும் சரபப் பறவைகள் தமது வழியிலிருந்து விலகி உன்னைத் திடீ ரெனத் தாக்கித் தமக்கே தீங்கு விளைவித்துக்கொள்ளும்.

அவைகளைக் கன்மாரி பொழிந்து சிதற அடித்து விடு. பயனற்ற வேலையிலீடுபடுவோர் அவமானத்துக் காளாகாதிருப்பார் களோ?

விலங்கி—குறுக்கிட்டு. மார்க்கம்—வழி. கொன்னே—வீணே. கல்லின் மாரி—கல் மழை. பரிபவம்—இழிவு; அவமானம்.

சிலைச்சுவடு வலம் வருவாயெனல்

58. பிறையணி வேணி பாதம் பிறங்கிடு வரையின் சாரல்
நிறையுமுள் ளன்பு கொண்டு நித்தலுஞ் சித்தர் சூழ்வர்;
செறுபவங் கெடுத்த தொண்டர் சிவகணத் திருப்பர் காணின்;
முறைமுறை வலஞ்செய் தேத்து முக்கணு னருளுங் கூடும்.

விளக்கம்:

பாதிமதியணிந்த சடையையுடைய சிவபெருமானின் பாதச்சுவடு தெளிவாகப் பொறிக்கப்பட்ட சிலையையுடைய மலையின் பக்கத்தில் நிறைந்த மெய்யன்போடு நாள்தோறுஞ் சித்தர்கள் வலம்வந்து வணங்குவர். அச்சிலையைக் கண்டவளவிலே பற்றித்தொடர்ந்த பாவங்களினின்றும் நீங்கிய சிவதொண்டர்கள் சிவகணங்களுடன் சேர்வர். ஆதலால் நீயும் அச்சிலையை முறைமுறையாக வலம்வந்து துதிப்பாய். முக்கண்ணனது திருவருள் கைகூடும்.

செறுதல்—வருத்துதல்.

சிவனது சங்கீத விழாவைச் சிறப்பிப்பாயெனல்

59. வேணுவில் வருடி நாதம் விளங்கிசை தென்றல் கூட்டப்
பாணியிற் றெய்வ மாதர் முப்புர விசயம் பாடச்
சேணிடை விளங்குன் ஞெசை செறிமலை யுற்றுச் சேர
வேணியர்க் கெடுத்த கீத விழாவினி தியலு மன்றே.

விளக்கம்:

இனியதென்றல் மூங்கில்களின் உட்புகுந்து வருடி நாத சுருதியை எழுப்பி மேலான இசையைப் பிறப்பிக்கத் தாளத்துடனே கின்னர மகளிர் திரிபுர விசயம் பாட, விண்ணிலே

முழங்கும் உனது முழக்கஞ் செறிந்த மலைச்சாரல்களிற் பட்டு எதிரொலியாய் மீண்டொலிக்கச் சடாமுடியையுடைய சிவனுக்கு எடுத்த சங்கீத விழா இனிதாக நிறைவேறும்.

வேணு—மூங்கில். பாணி—தாளம். சேண்—ஆகாயம். செறிதல்—நெருங்குதல். வேணி—சடைமுடி.

தென்றல் வேணுவில் வருடி நாதம் விளங்கு இசை கூட்ட எனக் கூட்டுக. முழக்கத்தின் எதிரொலி இவ்விழாவிற்கு மிருதங்கமாகும்.

இமயத்துப் புழைவழி

60. இமையநீ கடத்தி யேகி யெகினமும் பரசு ராமற்
கமையுமெய்ப் புகழும் போகும் விடரகத் திடங்க ரூடே
சிமையமால் வரையி னோங்கிச் சிறுகுற ளாய மாயோன்
குமையமா பலிமுன் றூக்கும் பதமெனக் குடங்கிச் செல்வாய்

விளக்கம்:

நீ இமையமலைச் சாரலைக் கடந்து அப்பாற் சென்று, அன்னங்களும் பரசுராமனுக்கு அமைந்ததொரு பெரும் புகழுஞ் செல்கின்ற கிரவுஞ்ச மலையின் சிறுதுளையாகிய சிறுவழியினூடே செல்லும்போது, வாமனனாகிய திருமால் உயர்ந்த சிகரத்தையுடைய நெடியமலைபோல நெடுமாலாகி, அவ்வடிவு கண்டு மாபலிவேந்தன் உள்ளழிய, முன்னொருபோது அவனை மிதித்தற்குத் தூக்கிய கரிய திருவடிபோல உடம்பை வளைத்துக் கொண்டு செல்வாயாக.

எகினம்—அன்னம். கிரவுஞ்ச மலையைக் குமரக்கடவுள் துளைத்தாரென்று அறிந்ததுங் கைலையிலுறையுஞ் சிவனிடத்துத் தனுர் வேதம் பயின்ற பரசுராமன் தானும் அவ்வாறு செய்வேனென்று அம்பு தொடுத்தான். அவ்வம்பு துளைத்த பிளப்பே இச்சிறு வழியாகும். இச்செயல் பரசுராமனுக்குப் பெரும் பேராதலாற் பரசுராமனின் புகழ்போகும் விடரகத்திடங்கர் என வருணிக்கப்பட்டது. மானசவாவிக்குப் போகும் அன்னங்களும் இக்கணவாயூடே செல்லும்.

விடரகம்—மலை வெடிப்பு. இடங்கர்—சிறு வழி. சிமையம்—மலையுச்சி. குறள்—குறுகிய வடிவம்; திருமால் மாபலி யரசனிடம் மூன்றடிமண் இரந்து பெற்றபோது எடுத்த வாமனவடிவம். மாயோன்—திருமால். குமைய—நெஞ்சழிய. குடங்கி—வளைந்து.

கைலயங்கிரி

61. ஐயிரு முகத்தோன் தூக்க வசைந்தது மந்த ரத்து
மைவிழி மாதர்க் காடி யானதும் வான மெங்குந்
துய்யநற் குமுதம் போலச் சுடர்வது மான கைலை
ஐயனின் நகைபோல் நிற்கும் அமைவிருந் தாகிச் செல்
வாய்.

விளக்கம்:

(கிரவுஞ்சத்தைக் கடந்து வடக்கே சென்று) பத்துத் தலையிராவணண் தூக்க அதிர்ந்ததும் அந்தரவாசிகளான கரியகண்ணழகுள்ள தேவகன்னியருக்குக் கண்ணுடிபோன்றதும், குமுதமலர்போன்ற தூயவெண்மையான சிகரங்களால் விண்ணெங்கும் பரந்து நிற்பதும் முதற்கடவுளாகிய சிவனுக்கு இருக்கையானதுமாகிய கைலயங்கிரிக்கு இனிய விருந்தினனுக இருப்பாய்.

ஐயிரு முகத்தோன்—இராவணன். ஆடி—கண்ணுடி. குவடு—உச்சி. ஐயன்—தலைவன். வெள்ளிவெற்பு—கைலைமலை. வெற்பு—மலை. ஐயனின் நகை—சிவபெருமானின் பெருஞ் சிரிப்பு. கைலை மலை இறைவனின் சிரிப்புப்போல வெண்மை நிறமும் போரொளியுங்கொண்டது:

கைலையில் நினது தோற்றம் இதுவெனல்

62. அஞ்சனத் துகள்போல் மேனி யழகுடை மேகமேநீ
குஞ்சரந் தந்த கோடு குறைத்தென வெளுத்த குன்றிற்
சஞ்சரித் திடுங்கால் மேழி தரித்தவன்க றுத்த வங்கி
கந்தரத் தணிந்தா லன்ன கவின்கொடு மிளிர்வை
மன்னே.

விளக்கம்:

கரிய மைப்பொடியை விண்ணிலே தூவினுற்போலக் கறுத்துநிற்கும் கார்மேகமே! நீ புதிதாக வெட்டப்பட்ட யானைத் தந்தம்போன்ற வெள்ளிய அம்மலையிற்றங்கும்போது, கலப்பையைச் சிறந்த படையாகக்கொண்ட பலராமன் கரிய ஆடையைத் தோளிலணிந்தாற் போல்வதோர் அழகு பெற்று விளங்குவாய்.

அஞ்சனம்—கரியமை. துகள்—பொடி. அங்கி—ஆடை. கந்தரம்—தோள்.

உமைக்குப் படியாக உதவுவாயெனல்

63. ஆடல்தேர் கைலைக் குன்றி லம்மையங் குலவுங் காலைக்
கோடரா வளையல் நீக்கிக் கைகொடுத் தணைக்குஞ் சம்பு
நீடுநீர் கட்டி செய்து நெறிதனிற் படியாய் நிற்றி
கோடுயர் சிலம்பின் சாரல் குறுகுவா ளேறிச் செல்லும்.

விளக்கம்:

முப்புரமெரித்தலாகிய திருவிளையாட்டைச் சிவபிரான் செய்தருளிய கைலை மலையில் உமையம்மையார் விளையாட்டாக உலாவரும்போது அவ்விறைவன் தன் கையிலணிந்துள்ள பாம்பு வளையங்களைக் கழற்றி விட்டுக் கைகொடுத்து அணைப்பான். மழை மேகமே! அப்போது நீ சென்று அவள் செல்லுஞ் சாரலிற் படிபோல உன்னுள்ளே நிறையும் நீரைக் கட்டியாக உறையச் செய்துகொண்டு வளைந்து கிடப்பாய். உயர்ந்த முடிகளையுடைய அம்மலைச்சாரலில் உலாவும் அம்மையார் அப்படிகளில் ஏறிச் செல்லுவாள்.

கோடரா—வளையும் பாம்பு. சம்பு—சிவன்.

மஞ்சனக் கருவிபோல்வாயெனல்

64. சேணிடைத் தேவ மாதர் திருமணிக் கடகக் கோடு
வீணிலே யுறுத்து மைய! விரிபெயல் தூறி நிற்பாய்
காணிய மங்கை நல்லார் மஞ்சனக் கருவி யென்று
பேணுவர் பிரிய வேண்டின் முழங்குக பெரிது மஞ்சும்.

விளக்கம்:

ஐயனே! அங்கே தேவமாதரணிந்த வளையல்களின் முனைகளுன்னை நீ குற்றம் புரியாவிடினும் வலிந்து உறுத்திக் கொண்டிருக்கும். அதனாலே நீ நீரைப் பொழிந்துகொண்டிருப்பாய். அதைக் கண்ட அவர்கள் உன்னைத் துளிபொழியும் மஞ்சனயந்திரமாக எண்ணுவார்கள். அவர்கள் உன்னை விட்டு விட விரும்பாது நீர்விளையாட்டையே தொழிலாகக் கொள்வாராயின் அவரிற் பிரிந்து செல்லவேண்டிய நீ கடூரமாக முழங்குவாய். உடனே அஞ்சி நீங்கிவிடுவார்கள்.

சேண்—ஆகாயம். திரு—அழகு. மணி—இரத்தினம். கோடு—முனை. உறுத்தல்—நெரித்தல்.

கைலையில் ஆடல் பல செய்வாயெனல்

65. பொற்புறு கமலம் பூக்கும் மானசப் பொய்கை யுண்பாய்
முற்படாம் போல வைரா வதமுண மூடி நிற்பாய்
கற்பகத் தளிரைத் தானை கடுப்பவே யசைத்து வெள்ளி
வெற்பிடை விரும்பு மாற்ருல் விதம்வித மாடல் செய்வாய்.

விளக்கம்:

மேகமே! பொற்ருமரை மலரும் மானசவாவியின் நீரைப் பருகியும், அங்கு நீர் அருந்தும் ஐராவதத்துக்கு அந்நேரம் முகபடாம்போல மறைவுகொடுத்தும், சேலைகளை அசைப்பது போல அங்குள்ள கற்பக தருக்களின் துளிர்களை அசைத்தும், இன்னேரன்ன பல விளையாடல்களைப் புரிந்து கைலை மலையில் உன் எண்ணம்போல இன்பம் அனுபவிப்பாயாக.

படாம்—திரைச் சீலை. தானை—சேலை. கடுப்ப—ஒப்ப. ஐராவதம்—இந்திரனின் பட்டத்து யானை. வெள்ளி வெற்பு —கைலை மலை.

அளகாபுரி

66. வண்டுகில் சோரக் காந்தன் மடித்துயில் வனிதை போலத்
தெண்டிரைக் கங்கைசோரச் சிலைத்துயில் அளகை காண்பாய்
விண்டொடு மாட மாதர் விரிகுழ லாரம் போலத்
தண்டுளி பயிலும் மேகந் தாங்கிடு, மறிதி நன்றே.

விளக்கம்:

உடுத்த துகில் சோரக் காதலன் மடியிற் கிடக்கும் பெண் போலக் குளிர்ந்த திரையோடு கூடிய கங்கையாகிய சேலை சோரக் கைலையாகிய காதலன் மடியிற் கிடக்கின்றது அளகாபுரி. அங்கே விண்ணளாவிய மாடங்கள் மகளிரது விரிந்த கருங்கூந்தலில் அணியப்பட்ட முத்துவடங்கள்போலத் தண்ணிய துளிகள் விரவிய கார்மேகங்களைத் தாங்கியிருக்கும். அதைப் பார்த்ததும் அளகாபுரி இதுவென்று நன்ருக அறிந்து கொள்வாய்.

துகில்—ஆடை. சிலை—மலை.

நன்றே அறிதி என மாற்றுக.

உத்தர மேகம்

அளகை மாடம் மேகத்தை ஒக்குமெனல்

67. மின்னியன் றமைவை; மாதர் விளங்குவர்; வில்லி னேவந்
துன்னிடும்; மதுர கீதந் தொடருநீ துடியி லார்ப்பாய்;
உன்னிடம் நீலத் தோயம்; மணித்தல முடைய தும்பர்;
விண்ணிறை யளகை மாடம் மேகமே யுன்னை மானும்.

விளக்கம்:

மேகமே! அவ்வளகாபுரியின் மஞ்சு கொஞ்சும் மாளிகைகள் உன்னை ஒக்கும். எவ்வாறெனின்? நீ மின்னலோடு தோன்றுவை. அம்மாளிகைகளில் அழகிய பெண்கள் விளங்குவர். உன்னிடத்து இந்திரவில்லுத் தோன்றும். அந்த வில்லுப்போல அங்கே பலநிற ஓவியங்கள் தோன்றும். அங்கே இனிய கீதவொலிகளுண்டு. நீ இனிதாக மெல்லென முழங்குவாய். அங்கே துடிகொட்டுவர். நீ அத்துடிபோல இடிமுழக்கஞ் செய்வாய். உன்னிடத்தில் நீல நீருண்டு. அங்கே மாணிக்க மணித்தளமுண்டு.

ஓவம்—சித்திரங்கள். துடியில்—துடியைப்போல. தோயம்—நீர். மணித்தளம்—மாணிக்க மணித்தளம். உம்பர்—மேல்மாடங்கள். மானும்—நிகர்க்கும்.

அளகை மாதர் அழகு

68. அழகம ரளகை மாத ரங்கையிற் கமலந் தாங்கும்;
அளகமன் றலருங் குந்த; மனிச்சங்கா துலோத்தி ரத்தின்
மலர்விரி பொடியால் மின்னு மானனஞ்; சுருள்செங் காந்தள்
குளக! நின் வரவால் மல்கும் கடம்புசீ மந்தஞ் சேர்ப்பார்.

விளக்கம்:

இளமையுடைய மேகமே! அழகு விளங்கும் அவ்வளகாபுரியிற் பெண்கள் விளையாட்டுக்காகக் கையிற்றாமரை மலரைத் தாங்கியிருப்பர். கூந்தலில் அன்றலர்ந்த குந்த மல்லிகையை முடித்திருப்பர். காதுகளில் அனிச்ச மலரை அணிந்திருப்பர். முகம் உலோத்திர மலரின் மகரந்தப் பொடியினுல் வெளுத்து அழகுடன் விளங்கும். குழலிற்புதிதாக மலர்ந்த செங்காந்தள் சூடியிருப்பர். உனது வரவால் மலர்ந்த கடப்ப மலரைச் சீமந்தரேகையிற் சூடியிருப்பர்.

அளகம் அன்றலருங் குந்தஞ் சேர்ப்பார். அனிச்சம் காது சேர்ப்பார். உலோத்திரத்தின் மலர்விரி பொடியால் ஆனனம் மின்னும்; சுருள் செங்காந்தள் சேர்ப்பார். கடம்பு சீமந்தஞ் சேர்ப்பார் என வினைமுடிபுகள் செய்க.

அளகம்—கூந்தல். ஆனனம்—முகம். குளகன்—இளமையுடையோன்.

அளகையின் இயற்கையழகு என்று மொருபடித்தெனல்

69. மரமெலா மலரு மென்றும் மதுகரம் மயங்கி யார்ப்ப
விரைபொலி நளின மென்றும் விரிந்திட வளையு மன்னம்
அரிகிளர் பீலித் தோகை யகவிடும் மனையி லென்றுங்
கரியிருள் மாயநாளுங் கான்றிடு நிலவு மன்னே.

விளக்கம்:

மரங்கள் (பருவத்தாலன்றி) என்றும் மலர் தூக்கி நிற்பதால் மயங்கிய வண்டினம் எப்பொழுதும் இசை பாடிக் கொண்டிருக்கும். தாமரைத் தடாகங்களில் வாசனை மலிந்த தாமரை மலர்கள் எப்போதும் பூத்தவண்ணமிருத்தலால் அன்னப் பறவைகள் அவற்றை வட்டமிட்டுக்கொண்டே இருக்கும். வீட்டுமயில்கள் எப்பொழுதும் அகவிக்கொண்டேயிருக்கும். கரிய இருள் நீங்க எப்பொழுதும் சந்திரன் நிலவைக் காலும்.

மதுகரம்—வண்டு. விரை—வாசனை. நளினம்—தாமரை. அரி—கண்வரி. பீலி—மயிலிறகு. தோகை—மயில். அகவுதல்—மயிலின் ஓசை.

அளகை மக்கள் துன்பமறியாரெனல்

70. கண்ணினீர் மகிழ்வா லன்றிக் கசிந்திடா ரியக்கர் காமன்
பண்ணிய கணையா லன்றிப் பருவர லறியார் நாளும்
நண்ணிய வூடலன்றி நலித்திடு பிரிவே யில்லைப்
பண்ணிய நகரின் மூப்புப் புல்லுத லரிது மாதோ.

விளக்கம்:

அளகாபுரியிலுள்ள இயக்கர் மகிழ்ச்சியினால் விட்ட ஆனந்தக் கண்ணீரன்றி வேறு கண்ணீரறிய மாட்டார்கள். காமன் தொடுத்துவிடும் மலர்க்கணைகளால் உண்டாகும்

வருத்தமன்றி வேறு வருத்தமறிய மாட்டார்கள். ஊடலினு லுண்டாகும் பிரிவன்றி வேறு பிரிவில்லை. இன்னும் அப் புண்ணிய நகரில் மூப்புண்டாதலும் இல்லை.

காமன்—மன்மதன். கணை—அம்பு. பருவரல்—துன்பம். நலித்தல்—வருத்துதல்.

மகளிர் தேறலருந்துதல்

71. நிலாமணி மாடந் தோறுந் தாரகை நிழற்றுஞ் சாயல்
குலாவிய அலங்கல் மானுங் குந்தளஞ் சுமந்த கோலக்
கலாநிதி வதன மாதர் கற்பகந் தந்த தேறல்
உலாவிய கணவ ரோடு முண்பருன் னசனி கேட்டே.

விளக்கம்:

சந்திர காந்தக்கல் பதித்த நிலாமுற்றங்களில் நட்சத்திரங் களின் சாயல் படிதல், பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டது போலும்; அவ்விடத்து நீண்ட கூந்தலைச் சுமந்த, அழகிய சந்திர வதனத்தை உடைய பெண்கள் கற்பகதருவினுலே தரப்பட்ட இரதிபலம் என்ற மதுவைப், பொழுதுபோக்காக உலாவிவருங் கணவரோடும் உனது முழக்கங் கேட்டவளவில் மகிழ்வாக அருந்துவர்.

உலாவிய—பொழுதுபோக்காக உலாவிவருகின்ற. நிலா மணி—சந்திரகாந்தக்கல். தாரகை—நட்சத்திரம். அலங்கல்—பூமாலை. குந்தளம்—கூந்தல். கலாநிதி—சந்திரன். கற்பகந் தந்ததேறல்—கற்பக மரம் நினைத்தவுடன் கொடுத்த இரதிபலம் என்னும் மது. அசனி—முழக்கம்.

மகளிர் வண்டலாடல்

72. வானமர் கங்கைக் காற்று வந்துவந் தார்வ மூட்டத்
தேனமர் பூமந் தாரஞ் செறிநிழற் றண்மை செய்ய
மானமர் நயன மாதர் வண்கரை மணலின் பாங்கர்க்
கானமர் வண்ட லாடிக் கைத்தலம் விதிர்ப் பரன்றே.

விளக்கம்:

பெருமைமிக்க கங்கையிற் பிறந்த இனிய காற்று இடை யிடையே வந்து ஊக்கமுண்டாக்கத் தேன் பொருந்திய பூக்களை யுடைய மந்தார மரம் தனது செறிந்த நிழலாற் குளிர்ச்சி

யுண்டாக்க மானின் தன்மையமைந்த மருண்ட நோக்கமுள்ள அந்நகரத்து இயக்க கன்னியர் அழகிய கரையிலுள்ள மண லிடத்தில் மணிகளைச் செறித்து விளையாடுதலாகிய வண்டலை யாடிக் கைகள் நடுங்கப்பெறுவார்கள்.

வான்—பெருமை. கான்—செறிவு. வண்டல்—மணல் விளையாட்டு. விதிர்த்தல்—நடுங்குதல்.

மணியை மணலில் மறைத்துத் தேடச் செய்தலாகிய இவ் விளையாட்டு வண்டல், குப்தமணி, தைசிககேளி என்றுங் கூறப் படும்.

மகளிர் தீபமவித்தல்

73. கொவ்வையைப் பழித்த செவ்வாய்க் கோமள மாத ரொல்கும்
வெவ்விய கலவிப் போரில் வெண்டுகில் நெகிழ்தல் கண்டு
செவ்விய தலைவ ரீர்க்கச் சந்தனத் தேய்வை யெற்றித்
திவ்விய மணியின் தீபந் தணித்துளந் திகைத்து நிற்பர்.

விளக்கம்:

கொவ்வைக் கனியைப் பழித்த, சிவந்த வாயையுடைய அழகிய பெண்களின் மெலிவைத் தரும் போகவின்பத்திலே வெண்பட்டாடை நெகிழ்தலைக் கண்ட தலைவர்கள் அவற்றை உவகையினாலே விரைந்திழுப்பர். அப்போது அம்மங்கையர் தமது கையிலுள்ள சந்தனக் குழம்பைத் தெளித்து அழகிய விளக்கைத் தணித்து நாணத்தால் உள்ளந் திகைத்து நிற்பார் கள்.

கொவ்வை—கொவ்வைப் பழம். கோமளம்—அழகு. வெவ்விய—விரும்பிய. ஒல்கும்—தளரும். திகைத்து— நாணத்தாற் செய்வதறியாது கலங்கி. செவ்விய—அழகிய. மணி—அழகு.

மாடங்களில் மேகத்தின் செய்கை

74. ஒழிப்பற வீசுங் காற்றா லுன்னைநேர் முகிலின் கூட்டம்
வெளிப்புற நிவந்த வேழின் மேலெழு மாட மேறிக்
களிப்புறக் கண்ணைக் கொள்ளும் ஓவியக் கவினை மாய்த்துப்
பழிப்புறு மடவார்க் கஞ்சிப் பலகணி நுழைந்து செல்லும்.

விளக்கம்:

ஒய்தலில்லாது வீசுங் காற்றால் உன்னையொத்த முகிற் கூட்டங்கள் ஆகாயம்வரையும் உயர்ந்த ஏழு நிலை மாடங்களின் மேலே கட்டப்பட்ட உச்சி மாடங்களிற் புகுந்து கண்களை மகிழ்விக்கும் ஓவியங்களின் அழகை மழைத்துளியால் மாய்த்து அங்குள்ள பழிப்பில்லாத மகளிருக்குப் பயந்து பலகணி வழியாக நுழைந்து வெளியே செல்லும்.

ஒழிப்பு—ஓய்வு. நிவந்த—உயர்ந்த. ஏழின்மேல் எழு மாடம்—ஏழு மாடங்களின் மேலேயமைந்த வேயா மாடம்; நிலாமுற்றம். பலகணி—சாளரம்.

பெண்களுறையும் அந்தப் புரத்துக்குச் சென்றதும், தகாதன செய்ததும் முகில்களுக்கு அச்சத்தை உண்டாக்கிற்று.

அளகையில் இராப்பொழுது

75. நள்ளிரு ளாண்டுச் செல்லாய்: நளினங்கள் கூம்பத் திங்கள்
வெள்ளிய வமுதை மாட வெளிப்புறஞ் சொரியும்; ஆங்கே
எள்ளலில் மணிக ளெல்லாம் இனியநீ ருகுக்கும் மாதர்
விள்ளருங் கலவி நீங்கி மெய்யுறு வருத்தந் தீர்வர்.

விளக்கம்:

நள்ளிரவிலே அந்நகரத்தின் நடுவே செல்லாதே. அப்பொழுது தாமரை மலர்கள் கூம்புமாறு வெண்மையான அமுததாரைகளைச் சந்திரன் மாடங்களின் வெளிப்புறத்திலே சொரியும். அங்கே இகழ்ச்சியை என்றுமறியாத சந்திரகாந்த மணிகளெல்லாம் இனிய, குளிர்ந்த நீர்த்துளிகளைச் சிந்தும். மகளிர் கலவியினின்றும் நீங்கி அந்த நீர்த்துளிகளால் மெய் வருத்தந் தீர்வர்.

அமுது—அமுதம்போன்ற நிலா. மணி—நிலாமணி; சந்திரகாந்தக்கல்.

செல்வர்கள் வைப்பிரசவனத்தில் உலாவுதல்

76. சென்றொழி யாத செல்வத் திருவுடைப் போக மாக்கள்
மன்றலில் தேவ மாதர் மருங்குற, வளகைச் செம்மல்
குன்றலி லாத கீர்த்தி கின்னரர் குரலிற் பாட,
அன்றலர் மலரின் வைப்பி ரசவன மடைவ ரன்றே.

விளக்கம்:

குறையாத செல்வத்தைக் கொண்ட போகிகள் மணஞ் செய்யாத அப்சரக் கணிகையர் பக்கங்களிலே ஆடி வரவும், இனிய குரலையுடைய கின்னரர் குபேரனுடைய புகழைப் பாடி வரவும், அன்றலர்ந்த மலர்களையுடைய வைப்பிரசமென்னும் உபவனத்தை நாடிச் செல்வார்கள்.

மன்றல்—வதுவை. மருங்கு—பக்கம். குரல்—மிடற்றொலி; யாழ்நரம்புமாம்.

அளகாபுரிப் பரத்தையர்

77. வாரிருங் கூந்த லேந்தும் வாசமந் தாரப் பூவும்
வேரியங் கமலத் தோடும் வெம்முலை குலைத்த முத்துங்
காரிருள் விடரை நாடிக் கணிகையர் நடக்கச் சிந்திப்
பாரிடங் கிடத்தல் காண்பாய் பகலவ னுதிக்குங் காலை.

விளக்கம்:

மேகமே! அவ்வளகாபுரியில், நீண்ட, கரிய கூந்தலிலணிந்த வாசனையுடைய மந்தார மலர்களுந் தேனொழுகும் பொற்றாமரைப் பூவாகிய தோடுகளும் விருப்பத்தை உண்டாக்கும் தனங்கள் குலைத்த முத்துக்களுங் கரிய இருளில் தூர்த்தரைத் தேடிக் கணிகைமாதர் செல்லும்போது சிந்திக் கிடத்தலைப் பகலவன் உதிக்குங் காலைப்பொழுதிற் காண்பாய். விரைந்த செலவினால் மலர்களுந் தோடுகளும் முத்துக்களுஞ் சிந்தின.

வார்—நீண்ட. இரும்—கரிய. வாரிருங் கூந்தல்—நீண்ட, கரிய கூந்தல். வேரி—தேன். முத்து—முத்துவடம். விடர்—தூர்த்தர்.

சிந்திக் கிடக்கும் இவைகள் முதல் நாளிரவு கணிகைமாதர் சென்ற வழியைக் காலையிற் காட்டுவன என்க.

கற்பக தரு

78. சொற்பதங் கடந்த காட்சிச் சோவர ணளகை மாதர்
பொற்புறப் புனையுங் கோலப் பூந்துகில் நறவஞ் சுண்ணம்
பற்பல மலர்கள் பாதப் பஞ்சியோ டணிகள் நல்குங்
கற்பக தருக்க ளாண்டுக் கவின்பெற நிற்குங் காண்டி.

விளக்கம்:

சொல்லின் எல்லையைக் கடந்த பேரழகையும் மதிலரணையுமுடைய அளகாபுரியின் மகளிர் அழகுறப் புனையும் பூத்தொழிலமைந்த சேலைகளும், மதுவும், சுண்ணங்களும், பல்வேறு மலர்களும், செம்பஞ்சுக் குழம்பும், அணிகலன்களும் ஆகிய இவற்றை நினைத்தவுடன் கொடுக்கும் கற்பக தருக்கள் அங்கே அழகுடன் நிற்கும். அவற்றையுங் காண்பாய்.

சோவரண்—மதிலரண். புனைதல்—உடுத்தல். கோலம்—அழகு. சுண்ணம்—பொடி. நறவம்—மது.

அளகை வீரரும் யானை, குதிரைகளும்

79. பச்சிலை நிகர்த்த பானுப் பரிநிகர் பரிகள் மன்னும்;
நற்சிலை நிகர்த்த மத்த நாகநீர் பொழியு நிற்போல்;
அச்சுறு சமரி லீரைந் தானனன் விழுப்புண் பட்டு
மெச்சிடு தறுகண் மீளி வீரரைக் கொண்ட தவ்வூர்.

விளக்கம்:

பச்சிலைபோன்ற நிறமுடையனவுஞ் சூரியனது குதிரையை அழகாலும் வலியாலும் வேகத்தாலும் பெரிதும் ஒத்தனவுமான குதிரைகள் அங்கே மிகுதியாக உண்டு. மலையை ஒத்த மதயானைகள் நீ மழை பொழிவதுபோல மதநீரைச் சொரியும். அச்சந்தரும் போரிற் பத்துத்தலையிராவணனோடு எதிர்நின்று சமர்செய்து வீரத்தை விளக்குஞ் சீரிய புண்பட்டு உலகம் புகழவாழ்ந்த, அஞ்சாத, பெருமைமிக்க தறுகண்வீரரைக் கொண்டது அவ்வளகாபுரி.

பச்சிலை நிகர்த்த பரிகள் என்றும், பானுப்பரிநிகர் பரிகள் என்றும் கூட்டுக.

பானு—சூரியன். சிலை—மலை. நாகம்—யானை. மத்த—மதங்கொண்ட. சமர்—யுத்தம். ஈரைந்தானனன்—பத்துத்தலையிராவணன். ஆனனம்—முகம். விழுப்புண்—புறங்காட்டாது எதிர்நிற்றலால் முகத்திலும் மார்பிலும் படும் புண். மீளி—பெருமை.

மன்மதன் போர்க்கஞ்சுதல்

80. இருநிதிக் கிழவன் தோழன் இருக்கைமற் றீதென் றெண்ணி
வெருவருங் காமன் வண்டாய் வெறிமலர்க் கணைகள் ஏவான்
திருவளர் புருவ வில்லிற் றீட்டிய நயனம் பூட்டி
ஒருதனி மடவார் மைந்த ருள்ளகந் துளைப்ப ரன்றே.

233—D

விளக்கம்:

குபேரனுக்குத் தோழனுன சிவபிரானது தலமென்று நினைத்து மன்மதன் அச்சத்தினுல் வண்டுகளுண்ணும் தேன் மிக்க மலர்க்கணைகளை மைந்தர் மாட்டு ஏவான். அழகு வளரும் புருவமாகிய வில்லில் மை தீட்டிய கண்களாகிய அம்பு களைப் பூட்டி ஒப்பற்ற மகளிர் பல காதற் குறிப்புக்களையுங் காட்டி அந்த வேலையைச் செய்து முடிப்பர்.

இருநிதிக் கிழவன்—குபேரன். தோழன்—சிவன். வெறி —தேன். தீட்டிய—மையெழுதிய; கூராக்கிய; சிலேடை. பூட்டி என்றதனுல் நயனம் அம்பாயிற்று. உள்ளகந் துளைத்தல் —காதற் குறிப்புக்களைப் பிறப்பித்தல்.

வீட்டடையாளம்

81. ஆண்டுள வளகை வேந்த னரண்மனை வடபாற் காண்பாய்
சேண்டரு சாப மானுஞ் சித்திர வாயின் மாடம்
மாண்டகு துணைவி யன்பால் வளர்த்ததோர் குழவி போலக்
காண்டகு சீர்மந் தாரம் கவின்மலர் பொதுளி நிற்கும்.

விளக்கம்:

அங்கே அளகேசனரண்மனைக்கு வடக்கே எங்களில்ல முண்டு. விண்ணிலே தோன்றும் இந்திரவில்லுப்போலுஞ் சித்திரத் தொழிலமைந்த வாயிலையுடையது அவ்வில்லம். அங்கே குணங்களால் மாட்சிமைப்பட்ட எனது காதலி அன் போடு வளர்த்த பிள்ளைபோலக் கண்ணுக்கினிய அழகினை யுடைய மந்தாரதரு அழகிய மலர்களை நிறைத்து நிற்கும்.

சேண்டரு—ஆகாயத்திலுண்டாகும். சாபம்—இந்திரவில். மாண்டகு—குணங்களால் மாட்சிமைப்பட்ட; பிரிவால் வருந்தி உயிர் விடுதற்குரிய சிலேடை. பொதுளி—நிறைந்து.

வீட்டிலுள்ள வாவி

82. மரகத மணியிற் செய்த படித்துறை மலியும் வாவி
உருகெழு வயிரத் தாளி லுயர்ந்தபொற் கமலம் பூக்கும்
மருவுநின் வரவு நோக்கி மானச மடுவை நீத்துக்
குருகினம் உவகை பொங்கிக் குலவிடு மதுவுங் காண்டி.

விளக்கம்:

எமது இல்லத்திலுள்ள வாவி மரகதக் கல்லினுற் செய்த படித்துறைகளை உடையது. அவ்வாவியில் நிறம் பொருந்திய வைடூரியத்தின் அழகொழுகுந் தண்டிலே பொற்ருமரைகள் பூக்கும். கிட்டிச் செல்கின்ற உனது வரவைக் கண்டும் மானசவாவிக்குப் போகாது மகிழ்ந்துறையும் அன்னங்களையும் அங்கே காண்பாய்.

உரு—நிறம். கெழு—பொருந்திய. மடு—வாவி. குருகு—அன்னம்.

செய்குன்று

83. மற்றதன் பக்கல் நீல மாமணிக் குன்று, மாங்கட்
சுற்றிய வயங்குந் தங்கச் சுடர்தரு மரம்பை தாமும்,
பெற்றிடும் நங்கை யாடும், பிறங்குமின் ளுேடு நின்னை
யுற்றபோ தச்ச மேவ வுன்னினே னதனைத் தோழ.

விளக்கம்:

அவ்வாவியின் கரையில் இந்திர நீலக் கல்லாலமைந்த செய்குன்றும், அதனைச் சுற்றித் தங்க விளிம்படுத்தாற்போன்ற பொன்வாழைகளும் விளங்கும். நல்வினைப்பயனுல் நான் இல்லக்கிழத்தியாகப் பெற்ற காதலி அங்கே சென்று ஆட விரும்புவாள். மின்னற்கொடியோடு விளங்குமுன்னைக் கண்டதும் அச்சத்தோடு அந்தக் குன்றையே மனதில் எண்ணினேன்.

அரம்பை—வாழை. அதன் பக்கல், குன்றும், அரம்பையும் வயங்கும் எனக் கூட்டுக.

நீ அக்குன்றையும் நின்னைச் சூழும் மின்னல் பொன்வாழைகளையும் ஒத்திருப்பதால் உன்னைக் கண்டதும் அக்குன்றையே நினைத்தேன், அது என் காதலி விரும்பி விளையாடும் குன்ருதலால்.

அசோகமும் மகிழும்

84. மயல்தருங் குன்றின் பாங்கர் மாதவிச் சோலை மன்னும்
அயல்வரத் தழைத்து நீண்ட அசோகமு மகிழு முண்டு
கயல்தரு கண்ணி வாமக் கவினடி படவுந் தேறல்
மயல்கொளு மென்போல் வேட்டும் மற்றவை பூக்குங் காண்டி.

விளக்கம்:

பேரொளியாலும் வினைத்திறத்தாலும் கண்டோரை மயங்கவைக்கும் அந்த விளையாட்டு மலையின் (கிரீடாசைலம்) பக்கத்தில் மாதவிச்சோலை ஒன்றுண்டு. அச்சோலையின் அயலிற் றழைத்து நீண்ட அசோகமும் மகிழும் நிற்கும். அவ்விரண்டும் முறையே என் காதலியின் இடப்பாதந் தீண்டுதலாலும், அவள் அருந்தும்போது உமிழும் மதுவைப் பெறுதலாலும் பூக்கும். எல்லாவற்றையும் சென்று காண்பாயாக.

மயல்—மயக்கம். கவின்—அழகு. வாமம்—இடம். தேறல்—மது. அவை—அசோகமும் மகிழும். நிரனிறையாகப் பொருள்கொள்க. வேட்டும்—விரும்பியும்.

அழகிய மாதர் தம் இடப்பாதத்தால் உதைக்க அசோக மரம் மலரும் என்பதும், மதுவை உமிழ்ந்து கொப்பழிக்க மகிழ மரம் மலருமென்பதும் கவிமரபு.

ஊடலில் அவளது பாதபரிசத்தையுங், கூடலில் அவள் உண்ணும் மதுவின் மிகுதியையும் விரும்புகின்றவனுதலால் தன்னை 'மயல்கொளும் என்போல்' என அவற்றுக்கு உவமிக்கிருன்.

மயல்கொளும் என்போல்—அவளது பாதபரிசத்தையும், எச்சில் மதுவையும் விரும்பும் என்னைப்போல.

நிவாசதண்டில் மயிலிருந்து ஆடுதல்

85. இத்திறத் தருக்கள் நாப்ப ணிளமைசால் வெதிரை யொக்கும்
மைத்திற மணியிற் பீடம் மற்றதிற் படிக வட்டஞ்
சித்திரப் பொன்னங் கோடு திகழ்மணித் தவிசின் மஞ்ஞை
பத்தினி தாளம் போடப் பதமெடுத் தாடுங் காண்டி.

விளக்கம்:

அந்த இருமரங்களின் மத்தியில் இளம் மூங்கிலின் நிறம் போன்ற நிறமுள்ள மாணிக்க மணியினுலமைந்த பீடமும் அதன் மேலே படிகத்தினுற் பலகைவட்டமும் சித்திரவேலைப் பாடமைந்த பொன்னின் தண்டும் (நிவாசதண்டு) விளங்குவதொரு மயிலின் இருக்கை உண்டு. அதிலே எங்கள் வீட்டு மயில் எனது பத்தினி கையிலணிந்த கிண்கிணி வளையலாற் றுளம்போடப் பாதங்களைத் தூக்கிக் கூத்தாடிக்கொண்டு நிற்கும்.

நாப்பண்—நடு. வெதிர்—ஒரு சாதி மூங்கில். பீடம்—அடித்தலம். வட்டம்—ஆகுபெயராற் பலகையை உணர்த்திற்று. கோடு—தண்டு. இத்தண்டில் இருந்து ஆடும் என்க.

இயக்கன் வீடு

86\. குறியிவை யுளத்துக் கோடி; குணமலி சதுர! வாயிற்
செறிபுற மிரண்டுஞ் சங்க பதுமசித் திரங்கள் சேரும்
அறிதியென் பிரிவால் ஐய! அழகிழந் தில்லங் காணும்
எறிகதிர்ப் பரிதி நீங்கி லியல்வதே முளரி கூம்பல்.

விளக்கம்:

குணங்களால் மாட்சிமைப்பட்ட வித்தகனே! இவ்வடையாளங்களை மனதிற்கொள்வாயாக. இல்லத்தின் வாயிலிற் செறிந்த இருபுறமுஞ் சங்கமும் பதுமமுமாகிய சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஐயனே! எனது பிரிவினாலே அவ்வில்லம் இப்போது பொலிவு கெட்டிருத்தலையுங் கண்டு அறிவாய். எறிக்கின்ற கிரணங்களையுடைய சூரியன் மறைந்தாற் றாமரை கூம்பிவிடுதல் இயல்பல்லவோ?

குறி—அடையாளம். சதுர—வித்தகனே. முளரி—தாமரை. கோடி—கொள்வாய்.

வீட்டினுட் புகும் விதம்

87\. கடிமனைப் புகுதல் வேண்டிற் களபநல் லுருவங் கொண்டே
வடியுறு மணிசெய் குன்றில் வைகிமின் மினிபோல் மின்னித்
தடியுறு நயனம் பூப்பச் சாளரம் நுழைந்து காண்பாய்
படியுறு முயிர்கள் வாழப் பருவத்தி லுதவுங் கொண்டால்.

விளக்கம்:

எமது காவலமைந்த இல்லத்தினுள்ளே நீ சென்று பார்க்க விரும்பினால் யானைக் கன்றின் உருவங்கொண்டு அழுத்தஞ் செய்த அம்மணிக்குன்றில் தங்கியிருந்து, மின்மினிபோல மின்னி, அம்மின்னலாகிய கண்கள் பூரிப்படையச் சாளரத்தினூடாக மெல்ல நுழைந்து காண்பாய்.

பூமியிலுள்ள உயிர்கள் இனிது வாழப் பருவந் தவறாது மழைவளத்தைக் கொடுக்கும் முகிலே! கொண்டால்! வைகி மின்னி நுழைந்து காண்பாய் என முடிக்க.

கடி—காவல். களபம்—இளயானைக் கன்று. வைகி—தங்கி. தடி—மின்னல். சாளரம்—பலகணி. படி—பூமி. வடி—அழுத்தஞ்செய்த.

பருவந் தவறாது மழைவளமுதவிப் பல்வகை உயிர்களையும் வாழச்செய்யும் நீ இப்பருவத்தில் என்னையும் வாழச்செய்வாய் என்பது குறிப்பு.

இயக்கன் மனைவியின் இலக்கணம்

88. மெல்லியள்; பசலை கண்ட மேனியள்; மானின் நோக்கி;
துல்லியங் கோடு தூக்கித் துவண்டசிற் றிடையள்; காதல்
சொல்லிடு மதரங் கொவ்வை; சுடரெறி பற்கள் முத்தம்
அல்லியங் கமலத் தைய னாசையா லவளைத் தந்தான்.

விளக்கம்:

எனது காதலி மெல்லியல்புடையவள். பசலை பூத்த மேனி நிறத்தையுடையவள். மான்போலும் மருண்ட பார்வையுடையவள். சமமான தனங்களைச் சுமந்து துவளுகின்ற சிறிய இடையை உடையவள். அவளது அன்பு வார்த்தைகளைப் பேசுகின்ற அதரங்கள் பழுத்த கொவ்வை கனிபோன்றன. ஒளி விடும் பற்கள் முத்துப் போலும்; பிரமதேவன் மிக்க ஆவலோடும் இவளைப் படைத்து எனக்குத் தந்தான்.

பசலை—பிரிவாலுண்டான நிறவேறுபாடு. துல்லியம்—சமம். கோடு—முலைகள்; ஆகுபெயர். துவளுதல்—தளர்தல். ஆசையால்—என்னாசையின் அளவாக; அல்லது முதலிற் றிருத்தம் பொருத்தமாகப் படைக்க விரும்பிய தன்னாசையின் அளவாக. என்னாசை நிறைவுக்கும் தன்னாசை நிறைவுக்கும் பொருந்தத் தந்தான் என்றபடி.

இதுவுமது

89. என்னுயி ரனையாள்; வாழ்க்கைக் கின்றுணை; சிலசொற் பேணிப்
பன்னுவாள்; அடிசில் கொள்ளாள்; பாவியேன் பிரிவை யெண்ணும்
துன்னிய துணையை நீத்துத் துயருறு நேமி யொக்கும்
முன்னுறு பனிக்குத் தேம்பு முண்டக மானுங் காண்பாய்.

விளக்கம்:

என்னுயிர் போன்றவள். இல்வாழ்க்கைக்கு இனிய துணையாயுள்ளவள். அதிகமாக உரையாடாது துயரினுலே சில சொற்களையே பன்னிப் பன்னிப் பேசுவாள்; உணவு கொள்ளாள்; பாவியேனது பிரிவையே நினைந்து கொண்டிருப்பாள். நெருங்கிய துணையைப் பிரிந்து துயருறுஞ் சக்கரவாகப் புள்ளெனத் துயரமடைவாள். பனிக்குத் தேம்பிய தாமரை மலர்போல முன்னுள்ள உருவமும் நிறமும் இப்போது மாறியிருப்பாள். இத்தகையாளைக் காணுதி. நேமி—சக்கரவாகப்புள்.

துயரோடும் இருப்பாளெனல்

90. அழுதழு துலர்ந்த கண்ணு மனலென வுயிர்ப்பு நீடி
எழுதுவர் விளர்த்த வாயு மேங்கிய நெஞ்சுங் கஞ்சக்
கொழுமலர் துறந்துசோருங் கூந்தலு முடையாள் நின்னுற்
றழுவிய மதியம்போலத் தகையொளி யிழந்து காண்பாள்.

விளக்கம்:

அழுதழுது நீர் வற்றிய கண்களும் நெருப்பெனத் தோன்றும் உயிர்ப்பு நீடுதலாலே சிவந்த நிறம் மாரி வெளுத்த வாயும் ஏக்கங்கொண்ட உள்ளமும் தாமரையின் செழித்த, அழகிய மலர்களைத் துறந்து சோரும் கூந்தலும் உடையவளாய் உன்னுற்றழுவப்பட்ட முழுமதிபோல ஒளி இழந்து காணப்படுவாள். இந்நிலையினளைச் சென்று காண்பாய்.

துவர்—சிவப்பு. விளர்த்த—வெளுத்த.

இதுவுமது

91. தெய்வங்கள் பரவி நிற்குஞ்; சிறியனேன் பிரிந்த கோல
மெய் வரு நினைவு பொங்கி வித்தகப் படங்கள் தீட்டும்;
ஐயனை மறந்தி யோவென் றஞ்சுக மணைத்துப் பிள்ளாய்
செய்யவர்க் கினியை நீயே யெனப்பல செப்புங் காண்பாய்.

விளக்கம்:

தெய்வங்களுக்கு வழிபாடு செய்யும். அல்லது பிரிவால் மெலிந்த எனது தோற்றத்தைக் கற்பனையில் விரித்து ஓவியமாகத் தீட்டும். இன்றேல், கூட்டிலுள்ள கிளிப்பிள்ளையை

எடுத்து அணைத்துக்கொண்டு, பிள்ளாய்! உன் ஐயனை நினைத் தாயா? நீ அவருக்கு இனியவளல்லவா? என்று கேட்கும். அவளை நீ காண்பாய்.

பரவும்—வழிபடும். மெய்வரு நினைவு—உருவெளித் தோற் றம். அஞ்சுகம்—கிளி.

வீணையை மீட்டி வருந்துவாளெனல்

92. மாசுறு கலிங்க மார்ந்த மடித்தலங் கிடந்த வீணை
ஆசையி லெடுத்தென் ஞமமமைவரிப் பாடல் பாடும்
நேசத்து முத்தஞ் சிந்தி நெகிழ்நரம் புளர்த்திக் கூட்டும்
பேசரு மையல் கொண்டு பிழைத்திடு மிசைக ளம்மா.

விளக்கம் :

அழுக்கேறிய உடையை அணிந்த மடிமீதிற் கிடந்த வீணையை ஆவலோடும் எடுத்து எனது பெயரமைந்ததொரு வரிப்பாட்டைப் பாடும். பாடும்போது அன்பினுல் மனமுருகி முத்துப்போன்ற கண்ணீரைச் சொரிந்து அக்கண்ணீரால் இளகிய தந்திகளை ஒருவாறு சுருதிகூட்டி மீட்டும் பாட முயலும். முயலும்போது சொல்லரிய மயக்கம்கொண்டு தானுகவே யமைத்த இசையின் மூர்ச்சனையை அடிக்கடி மறந்து பிழைபட்டு வருந்தும்.

மாசு—குற்றம். கலிங்கம்—சேலை. ஆர்ந்த—உடுத்த. பிரிவால் வாடும் பெண்கள் கோலஞ்செய்யாராதலின் மாசுறு கலிங்கம் என்றுன். வரிப்பாடல்—இசைப்பாடல். உளர்த்தி—தெறித்து. இசைகள்—சுரங்கள்; அவற்றின் ஆரோகண அவரோகணக் கிரமம் தவறுதலினுலே பிழைபடும்.

பிரிந்த நாளைக் கணக்கிடுவாளெனல்

93. அண்ணலைப் பிரிந்த நாளு மவனிவ ளடையு நாளும்
எண்ணிய வுளத்திற் கொள்ள விற்படி யிட்ட பூக்கள்
மண்ணுற வலகு செய்வாள்; மற்றவன் உற்ற காலைக்
கண்ணிய புலவி முற்றிக் கலவியுங் கருத்தில் வைப்பாள்.

விளக்கம்:

அண்ணலைப் பிரிந்து இத்தனை நாட்கள் கழிந்தன. அவன் இவ்விடம் வருதற்கு இன்னும் இத்தனை நாட்கள் இருக்கின்றன என்று எண்ணிக் கணக்கெடுத்தற்கு அவள் வீட்டு

வாசற்படியில் இட்ட பூக்களை எண்ணிக்கொண்டிருப்பாள். அல்லது என் காதலர் வருங்காலத்து இன்னவாறு புலந்து பின் இவ்வாறு அது தீர்ந்து இவ்வாறு கலவி கொள்வேன் என்று என்னோடு இன்பந்துய்க்குங் கற்பனைகளில் ஆழ்ந்திருப்பாள்.

எண்ணிய—எண்ணி. இற்படி—வீட்டு வாசற்படி. அலகு செய்தல்—எண்ணுதல். கருத்தில் வைத்தல்—கற்பனை செய்தல்.

இடையாமத்திற் சென்று தூதுரைப்பாயெனல்

94. எற்படு காலை தொட்டே யெழில்தரு மாலை காறும்
பற்பல நிமித்த மாகப் பருவர லின்றிச் சாமம்
முற்பட வுள்ளஞ் சோர்ந்து முன்றிலிற் புரள்வள் தூங்காள்
சொற்படு தூதி லாறிச் சுகம்பெறும் முகிலே சொல்லாய்.

விளக்கம்:

சூரியன் தோன்றும் காலை முதல் அழகுமிக்க மாலைவரையும் பலபல பொழுது போக்குகளாலும் காலங்கடத்திய என் காதலி இராப்பொழுது தோன்ற மனஞ்சோர்ந்து நிலா முற்றத்திலே துயில்கொள்ளாது புரண்டு அல்லற்படும். அந்த நடுச் சாமத்தில் நீ சென்று எனது தூதைச் சொல்வாயானால் ஆறுதலடைந்து சிறிது சுகமுறும். ஆதலால் அந்த நேரத்திற் சென்று என் வரவைக் கூறுதி.

எற்படுகாலை—உதயம். நிமித்தம்—காரணம். பருவரல்—துன்பம். சொற்படு தூது—புகழ்ந்து பேசப்படுந் தூது. சொல்—புகழ். சொல்லாய்—சொல்வாயாக.

முன்பு இன்புற்ற இரவுகளில் இப்போது துன்புறுவாளெனல்

95. சிந்தையில் மெலிந்து வாடிச் சேக்கையி லொருபாற் பூர்வ
சந்திர கலையொன் றென்னச் சரிந்திடும் முன்னு ளென்னோ
டெந்தநல் லிரவில் வேண்டு மின்பினைக் கணம்போற் றுய்த்தா
ளந்தநல் லிரவு சோகத் தாழ்ந்திடுங் கண்ணீர் சோர.

விளக்கம்:

மனம் மெலிந்து உடல் வாடிப் பிரிவுப் பள்ளியின் ஒரு புறத்து உதயகிரியிற்றோன்றும் தனிக்கலைச் சந்திரன்போலக் கிடப்பாள். முன் எந்த இராத்திரியில் அவள் என்னோடு

233—D1

விரும்பிய இன்பத்தைக் கணப்பொழுதுபோலத் துய்த்தாளோ அதே இராத்திரியை இப்போது பொறுத்தற்கரிய பிரிவுத் துன்பத்தால் வெம்பிக் கண்ணீர் சொரிந்து கழிக்கின்ருள்.

வாடி—உடல் வாடி. சேக்கை—பள்ளி. பூர்வசந்திரன்—கிழக்கே தோன்றும் சந்திரன். முன்னாள்—சாபம்பெற முன்னுள்ள நாள்.

சாபத்துக்கு முன் எந்தெந்த இராவினை ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு கணப்பொழுதாக நுகர்ந்தாளோ அந்தந்த இரவுகள் இக்காலத்தில் நெடும்பொழுதுபோல நீடித்து வருத்துவதாயிற்று.

படுக்கையில் இவ்வாறு கிடப்பாளெனல்

96. காலதர் நுழையுந் திங்கட் கலையமு தென்று சற்றே
சேலிமை திறக்கும் பின்னர்ச் செப்பருந் துயரில் மூடுங்
காலையிற் கதிரை நீயே கவித்திடின் மலர்தல் கூம்பல்
ஏலுத லில்லாக் கஞ்ச மெனவவள் கிடப்பள் காண்பாய்.

விளக்கம்:

சாளரம் வழியாக வந்த சந்திரனின் கலையமுதைப் பழக்க வாசனையாற் பார்க்க நினைத்தவள் சேல்போலுங் கண்களைத் திறந்து சிறிது நோக்கும். பின்னர்த் தனக்கு நேர்ந்த பிரிவை எண்ணிச் சொல்லரிய துன்பத்தோடும் மூடிக்கொள்ளும். இவ்வாறு கிடக்குமவள் நின்னால் மறைக்கப்பட்ட சூரியனைக் காணுது கமல மலர் மலர்தல் கூம்பலின்றிக் கிடக்கும் தன்மை போலக் காணப்படுவள். அந்நிலையினளைச் சென்று காண்பாய்.

காலதர்—சாளரம். சேல்—சேல் மீன். கண்களைக் குறித்தது. ஏலுதல்—இயலுதல்.

காலையில் மேகஞ் சூரியனை மறைக்க மலராதும் கூம்பாதும் கிடக்கும் தாமரைப் பூப்போலக் கண்களை மூடியும் மூடாதும் வாடிக்கிடக்கும்.

கனவும் அரிதாகுமெனல்

97. நெய்யறி யாது காய்ந்த நெறிகுழல் கதுப்பிற் சோர
வெய்யநெட் டுயிர்ப்பு மெல்ல மெல்லவே யலைக்கும் வேளின்
ஐயனைக் கனவி லேனு மணைவனென் றயரும் போது
மைவிழி மழைநீர் சோர மறுகிநெஞ் சழிதல் காண்டி.

விளக்கம்:

நெய் முதலியனவற்றை நீக்கிய சடைக்கூந்தல் கன்னங்களிற் சோர அதைத் தளிர்போன்ற உதடுகளை வருத்துங் கொடிய பெருமூச்சு மெல்ல மெல்ல ஊதி அகற்றும். முருக வேளை ஒத்த அழகிய என் தலைவனைக் கனவிலாவது கூடுவேனென்று எண்ணி நித்திரையை விரும்பும்போது கரிய விழிகள் கண்ணீர் சொரிந்து குழப்பமுண்டாக வருந்துதலையும் நீ காண்பாய்.

நெய்—வாசநெய். வேள்—முருகக் கடவுள். ஐயன்—தலைவன். மறுகுதல்—குழப்பமுண்டாதல். அழிதல்—வருந்துதல்.

கூந்தல் முடியாளெனல்

98. பிரிவுறு நாளில் நீத்த பெய்ம்மலர்த் தொடையல் சாபம்
இரியுநாள் காறுந் தீண்டா தின்புறீஇப் புனைவ லென்று
சுரிகுழல் சடைய தாகிச் சுந்தரக் கதுப்ப லைக்க
வரிவளை சுமந்த காந்தண் மலர்க்கர நீவிச் சோரும்.

விளக்கம்:

பிரிந்த ஞான்று கூந்தலினின்றும் நீக்கிய மலர் மாலையைச் சாபம் நீங்கும்வரையும் தீண்டாது, அது நீங்கித் துன்பமகன்ற காலத்தில் மீண்டும் அணிவேனென்று சுருண்ட கூந்தல் சடையாகப் பின்னி அழகிய கன்னங்களை வருத்த, வரிகளைக் கொண்ட சங்குக் காப்புகளைத் துறந்த காந்தள்போலும் மெல்லிய கரங்களால் அவற்றை நீக்கி வருந்தும்.

பிரிவுத்துயரோடு, நெய்யில்லாது முறுகிய பின்னற்சடை கன்னங்களை உறுத்தும் வருத்தமும், அதை நீக்கும் வருத்தமுஞ் சேரச் சோருவாள் என்றவாறு.

தொடையல்—மாலை. இரியு நாள்—நீங்கு நாள். இன்புறீஇ—இன்பமடைந்து. புனைவல்—சூடுவேன். கதுப்பு—கன்னம். நீவி—தடவியொதுக்கி.

சுமந்த என்றதனுல் இதுபொழுது நீக்கப்பட்டமை பெறப்படும்.

விரைந்து காப்பாய் எனல்

99. மெல்லியல் கலன்க ணீத்து விரகநோய் தாக்க மஞ்சம்
வல்லியி னுடங்கி மேனி வாடுவள் வருத்த நீங்க
வொல்லையிற் காண்பாய் ஐய! வுள்ளழிந் துகுப்பாய் கண்ணீர்
நல்லவர் துயர நீக்கல் நற்குலக் கருணை யன்றே.

விளக்கம்:

மெல்லியல்பை உடைய அவள், அணிகலன்களை நீக்கித் துயரத்தினுற் கட்டிலிற் கொடிபோல நுடங்கி, உடல் மெலிவள். அவள், வருத்தம் நீங்க விரைவாகச் சென்று காண்பாய். ஐயனே! அவளைக் கண்டதும் மனமுருகிக் கண்ணீர் சொரிவாய். நல்லவருடைய துன்பத்தைக் கண்டு மனம்பொருது விரைந்து நீக்கல் குடிப்பிறந்தாருக்கு இயல்பாயமைந்த காருண்ணிய மன்றோ?

கலன்கள்—ஆபரணங்கள். மஞ்சம்—கட்டில். வல்லி—கொடி. நுடங்கி—துவண்டு. ஒல்லை—விரைவு.

கூறியன எல்லாம் உண்மையெனல்

100. நின்சகி யென்பால் வைத்த நிகரிலாக் காதல் தேர்ந்தேன்
முன்பிரிந் தறியேன்; நங்கை முதற்பிரி விங்ங னுற்ருள்
என்பெரு நலத்தை யெண்ணி யிகந்துரை யியம்ப வில்லை
பொன்பயி லளகை யைய! போந்தெலாங் கடிது காண்பாய்.

விளக்கம்:

நினது தோழியாகிய அவள் என்னிடம் வைத்திருக்கும் ஒப்பில்லாத காதலை அநுபவத்தில் அறிந்தேனுதலின் முன்னெருபோதும் பிரியாதிருந்தேன். அவளுடைய முதற் பிரிவு இவ்வாறு வந்து சேர்ந்தது. (உன்னை விரைந்தனுப்பி எனது கருமத்தை முடித்துக்கொள்ளவேண்டும் என்னும்) எனது நன்மை கருதி இவ்வாறெல்லாம் அவளின் உண்மை யன்பை அளவுகடந்து புனைந்துரைத்தேனில்லை. ஐயனே! இலக்குமி விளையாடும் அளகாபுரிக்குச் சென்று எல்லாவற்றையும் கண்ணுரக் காண்பாய்.

சகி—தோழி. இகந்து—அளவுகடந்து.

ஓதற்பிரிவு, தூதிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற் பிரிவு முதலாய பிரிவுகளையும் அவளது அன்பின் மிகுதி கண்டு இதுவரையும் மேற்கொள்ளாதிருந்தேன். இருந்தும் இவ்வாறு சாபத்தினுற் பிரிவுவந்தணுகிற்று என்று வருந்துகின்றுன் இயக்கன்.

நங்கை—பெண்களிற் சிறந்தாள்.

இடக்கண் துடித்து நிமித்தங் காட்டுமெனல்

101. நெறித்திடு மளக பாரம் நீள்கடை நோக்கம் மாய்க்கும்;
வெறித்திடு தேறலின்றி விழிமறந் திடும்வி லாசம்
குறித்துமே லெழுந்து நோக்கின் குலவிடந் துடிக்குந் தெண்ணீர்
மறித்துமீ னலேப்ப வாடும் வள்ளிதழ்க் குவளை காட்டும்.

விளக்கம்:

சுருண்ட கூந்தல் கடைக்கண்ணேக்கத்தை மறைக்கும் மதுவினுல் அழகாகச் சுழன்று காதற் குறிப்பைக் காட்டும் புருவங்கள் அஃதின்மையாலவ்வாறு செய்யாதொழிந்தன. மேலே நீ தோன்றும்போது உன்னைக் குறித்து நோக்கின் விளங்கும் இடக்கண் துடிக்கும். அப்படித் துடிக்கும்போது அக்கண்கள் தெளிந்த நீரில் மீனினுல் மறித்து அலைக்கப்பட்ட குவளை மலர்கள்போலத் தோன்றும்.

நெறித்தல்—சுருளுதல். அளகம்—கூந்தல். விலாசம்—காதற் குறிப்புள்ள அழகிய நோக்கங்கள். குலவு—விளங்கும். இடம்—இடக்கண். மறித்து—தடுத்து. பாரம்—கூட்டம்.

தூக்கங் குலையேல் எனல்

102. அப்பொழு தின்பத் தூக்க மார்ந்திடின் முழக்கஞ் செய்யா
தொப்புடன் உறைதி சாமம்; ஒண்டொடி யொருகா லென்னைச்
சொப்பனத் தணைத்தின் பெய்தும்; தூமலர்க் கரங்க ணீட்டி
வெப்பெழத் தழுவும் மஞ்சே விலக்கலை; விரைந்து மன்னே.

விளக்கம்:

மேகமே! நீ செல்லும் அப்பொழுது அவள் இன்பமான தூக்கத்திலாழ்ந்திருப்பாளாஞல் முழக்கஞ்செய்யாது ஒரு புறத்தில் ஒரு யாமம் தங்குவாயாக. என் காதலி ஒருகால் என்னேச் சொப்பனத்திலே சந்தித்து இன்பமடைந்து கொண்டிருப்பாள். தூயமலர்போன்ற கைகளை நீட்டி விருப்பத்தோடு தழுவுவாளாயின் அத்தழுவலை நீ சடுதியில் விலக்கி விடாதே.

ஒப்புடன்—அழகுடன் அல்லது மன அமைதியுடன். சாமம்—ஒரு யாமம். வெப்பு—காதல்; விருப்பம்.

மெல்லத் துயிலுணர்த்திச் சொல் எனல்

103. தண்டுளி கலந்து வீசுந் தண்ணறுந் தென்ற லூதிக்
கண்டுயி லகற்று காதல் மாலதி யரும்பு மான
விண்படர் மின்னல் போல விளங்குசா ளரத்து நல்லாள்
கண்ணிமை யாது நோக்கும் கனிவுடன் முழங்கிச் சொல்வாய்.

விளக்கம்:

குளிர்ந்த தூறல் கலந்து வீசுந் தென்றலிஞல் மாலதி யரும்பை மலரச் செய்வதுபோல அவளேயும் மெல்ல ஊதித் துயில் நீக்குவாய். (தென்றலின் குளிர்ச்சியால் உற்சாகமுற்ற அவள்) மின்னற்கொடியான உன்சகியோடு சாளரத்தில் நீ நிற்பதைக் கண்ணிமையாது பார்ப்பாள். அப்போது வீரனே! நீ இனிதான முழக்கத்திஞல் அவளுக்குச் சொல்லவேண்டும்.

மேகம் தான் தூதனென்பதைத் தெரிவித்தல்

104. மங்கல மடந்தை! கேளுன் மகிழ்நனுக் கினிய நண்பன்
கங்கையைச் சுமந்து செல்வேன்; காதலர்ப் பிரிந்தோர் கூந்தல்
செங்கையான் முடிக்க மற்றத் திருவிஞர்த் தூண்ட வல்லேன்
பங்கமி லேயன் றூது பகர்ந்திட வந்தேன் கண்டாய்.

விளக்கம்:

சுமங்கலி! கேட்பாய்! நான் உன் நாயகனுக்கு இனிய நண்பன். நீரைச் சுமந்து செல்லும் மேகம் என்று சொல்லப் படுவேன். தலைவரைப் பிரிந்து முடிக்காத கூந்தலுடனிருக்கும்

மகளிரிடம், அதனைத் தமது செங்கரங்களால் முடிக்கும் ஆசையுடன் திரும்பிவரும் தலைவரை வழியில் ஊக்குவிப்பேன். உனது தலைவன் தூதாக உரைத்த செய்தியொன்றை உரைக்க இங்கு வந்தேன். கண்டுகொள்வாயாக.

'மங்கலமடந்தை' என்றது தனது கற்பின் பெருமையாற் கணவன் நலம் பெற்று உயிரோடு இருக்கின்முன் என்பதைத் தெரிவிக்கும். 'இனிய நண்பன் என்றது' யான் கூறுவனவற்றை உறுதியாக நம்பலாம் என்பதைத் தெரிவிக்கும். 'பிரிந்தோர் கூந்தல் முடிக்க' என்றது உனது கூந்தலையும் முடிப்பிப்பேன் என்பதைத் தெரிவிக்கும். 'பங்கமில் ஐயன்' என்றது நீண்ட நாட் பிரிவினுலே என்னை மறந்தானே? நிறை தவறி வேறு மகளிரை விழைந்தானே? என்ற ஐயத்தைப் போக்கி அவன் நின்பால் வைத்த அன்பிலே வேறுபட்டானுமில்லை, நிறை தவறினுனுமில்லை என்பதைத் தெரிவிக்கும்.

கங்கை—நீர். திருவினர்—இலட்சுமிகடாட்சமுடைய தலைவர்கள்.

தூதை அன்போடு கேட்குமெனல்

105. இத்திற முரைத்தி யாயி னஞ்சனை யீன்ற தெய்வப்
புத்திரன் றன்னைச் சீதை போற்றிய வாறு போற்றிச்
சித்தமும் மகிழ்ச்சி கூரத் திருமுகம் பொலியக் கேட்கும்
உத்தம! வினியார் சேர்க்கை யொத்திடு மவர் சொல்
தூதே.

விளக்கம்:

இவ்வாறு நீ கூறுவாயாஞல் அஞ்சனுதேவி பெற்ற தெய்வத் தன்மைவாய்ந்த புதல்வனுகிய அநுமானைச் சீதை ஏற்று உபசரித்ததுபோலத் தனது மனங்களிக்க உபசரித்து, அழகிய முகம் உவகையால் மேலும் பொலிவெய்துமாறு சிரத்தையுடன் முகத்தை உயர்த்திக் கேட்கும். உத்தமனே! கற்புடை மகளிருக்குத் தமது தலைவர் நண்பர் மூலம் அனுப்பும் தூது அவரது சேர்க்கைபோலவே இனிதாயிருக்கும்.

அஞ்சனை—அஞ்சனுதேவி.

சுகங்கூறெனல்

106. நீடுவாழ் முகிலே யெற்கு நினைந்துநல் லுதவி செய்வாய்
வாடுநல் வனிதைக் கின்ன வகுத்துநீ கூறுன் கேள்வன்
கோடுயர் சித்ர கூடக் குன்றுயிர் கொண்டு வாழ்வான்
ஈடிலாய்! குசலம் கேட்டா னிரும் பிரி வெய்தி நின்முன்.

விளக்கம்:

நீண்ட ஆயுளுடைய முகிலே! எனது நிலைமையை உணர்ந்து எனக்கு உதவி செய்யும் நோக்கமாக அவளை அணுகி; உனது கொழுநன் பிரிவினுல் வாடிச் சித்திரகூட மலையில் உயிரை ஒருவாறு தாங்கிக்கொண்டு வாழ்கின்ருன்; ஒப்பற்ற பெண்ணே! உன்னுடைய சுகநலத்தைக் கேட்கின்ருன்; என்று இவ்வாறு ஒவ்வொன்றையும் உனது உயர்மதியால் வகுத்து வகுத்து விளங்கச் சொல்லுதி.

கேள்வன்—கணவன். எற்கு—எனக்கு. கோடு—சிகரம். குசலம்—சுகநலம்; தீதின்மை. இரும்—பெரிய.

பிரிவுத்துயர் கூறல்

107. வல்வினை விலக்க நீங்கி வதிந்திடுன் கொழுநன் சிந்தை
செல்வழி யுணர்வுஞ் சேரச் சிதைந்துவெங் கனலாற் றெம்பிக்
கொல்லுலைக் குருகி ஞர்த்துக் குழைந்ததன் மேனி யோடு
மெல்லியல்! கனன்று வாடி மெலியுமுன் மேனி சேர்க்க.

விளக்கம்:

கொடிய வினைப்பயன் இடைநின்று பிரிக்க, இவ்விடத்தி னின்றும் நீங்கித், தூரத்தே வசிக்கும் உன் நாயகன் உள்ளஞ் செல்கின்ற துன்ப நினைவுகளெல்லாவற்ருேடும் உணர்வுஞ் சென்று சேர்ந்து, அத்துன்பங்களை அநுபவித்தலினுலே மனஞ் சிதைந்து காதற் கனலால் வெதும்பிக் கொல்லன் உலையில் ஊதும் துருத்திபோலப் பெருமூச்செறிந்து உருகிய தன் மேனியுடன் அவ்வாறு மெலியும் உனது மேனியைச் சேர்க்க வேண்டி, மெல்லியலே! கனன்று வாடி மெலிகின்ருன்.

வல்வினை—கொடிய ஊழ். கொல்லுலைக் குருகு—கொல் லன் துருத்தி. கனன்று—வெப்பமடைந்து.

இயக்கன் சொல்லிய சொல்வேனெனல்

108. ஓசையா லுரைக்குஞ் சொல்லை யுன்முகந் தீண்ட வேண்டி
மூசுவான் காதிற் பாங்கி முன்னரும் பிரிந்தா னின்று
மாசிலா விழிக்கு மெட்டான் மணிக்குழைக் காது தூரம்
ஆசையால் வகுத்த செஞ்சொ லறைந்திடப் பணித்தா னம்மா.

விளக்கம்:

சொல்லால் உரத்துக் கூறக்கூடிய விடயத்தை உன் முகத்தோடு தன் முகத்தைச் சேர்க்கும் விருப்பத்தினுல் பாங்கியர் முன்னுல் நிற்பதையும் கவனியாது உன் காதில் ஓதுவான். அத்தகைய காதலன் இன்று பிரிந்து நின்ருன். உன் காது அவனுக்கு எட்டாது. உன் கண்கள் அவனைக் காணமாட்டா. அவன் உன்மீதுள்ள காதலால் வகுத்த சொற்களை என் வாயாற் கூறுமாறு பணித்தான்.

இயக்கன் காதலியை முன்னிலையாக்கிக் கூறியது

109. மருள்விழி மானிற் கண்டேன்! வாண்முகம் மதியிற் கண்டேன்!
புருவங்கள் திரையிற் கண்டேன்! புனைகுழல் மயிலிற் கண்டேன்!
திருவளர் சாயல் கண்டேன்! திகழ்கொடி யதனில்; அந்தோ
உருவெலா மொருங்கு காண வொருபொருள் கண்டிலேனே.

விளக்கம்:

பெண்ணே! மருண்டு விழிக்கும் உன் பார்வையை மானிற் கண்டேன். ஒளிமிக்க முகத்தைச் சந்திரனிற் கண்டேன். புருவங்களைச் சுருண்டு வருந் திரையிற் கண்டேன். புனைந்த கூந்தலை மயிலின் திரண்ட பீலிக்கூட்டத்தில் கண்டேன். பிரியங்குக் கொடியில் அழகு வளரும் சாயலின் மென்மையைக் கண்டேன். ஆனுல் உன் உருவையெல்லாம் ஒருங்குகாணும் ஒரு பொருளை யான் இன்னும் காணவில்லையே! அந்தோ கொடுமை இது.

இயக்கன் விதியின் கொடுமை கூறியது

110. ஊடலுற் றிருந்த வண்ண முன்னையான் சிலையிற் றீட்டி
வாடினேன் பின்னை யுன்றன் மலரடி விழுந்த வண்ணம்
தேடிய வெழுதக் கண்ணீர் சிந்தினேன் சித்தி ரத்துங்
கூடுதல் விலக்கு மாயி னென்விதிக் கொடுமை யென்னே.

விளக்கம்:

ஊடிக்கொண்டிருந்த பாவனையில் உன்னை நான் கற்சிலையிற் கனியின் சாயங்கொண்டு தீட்டினேன். பின்னர் உன் பாதங்களில் விழுந்து ஊடல் தீர்த்த பாவனையில் என்னைத் தீட்டுவதற்கு எண்ணினேன். ஆனால், கண்களில் நீர் மல்கி அவ்வாறு செய்யமுடியாது போயிற்று. சித்திரத்திற்கூட உன்னோடு சேருவதை விலக்கும் அவ்விதியின் கொடுமை என்னே!

தேடிய—தேடி; மலரடியின் உயர்வையும் ஆற்றாமையின் சிறுமையையும் ஆராய்ந்து.

இயக்கன் கனவுத்துயர் கூறியது

111. கனிவுடை யுனது தோற்றங் கனவினி லரிதிற் கண்டே
நினைவுறத் தழுவ வீணே நீட்டிய கையை நோக்கித்
துனியுறு தலத்துத் தேவர் துளிர்மர மெங்குங் கண்ணீர்
பனியென வுகுக்குஞ் சாலப் பரவிய தரள மேபோல்.

விளக்கம்:

உனது உருவெளித் தோற்றத்தை நான் கனவிலே அரிதாகக் கண்டு, அக்கனவோடு எனது நினைவும் பொருந்தத், தழுவுமாறு கைகளை ஆகாயத்தில் வீணாக நீட்டினேன். அவ்வாறு நீட்டிய கைகளை நோக்கித் தலதேவதைகள் பரிதாபமுற்றுத் தளிர்த்த மரமெங்கும் மிகுதியாகப் பரவப்பட்ட பெரிய முத்துப்போன்ற கண்ணீரைப் பனிசொரியுமாறுபோலச் சொரிந்தார்கள்.

தோற்றம்—உருவெளித் தோற்றம்.

இரவு முழுவதும் துயில்கொள்ளாது வருந்துபவனாதலின், 'அரிதிற்கண்டு' என்றான்.

துனி—துன்பம். தரளம்—முத்து. நினைவு—காதலியைச் சென்று சேரவேண்டுமென்னும் நினைவு.

இயக்கன் காற்றை அணைத்தமை கூறியது

112. தழைத்தெழு தேவ தாருத் தளிர்ப்புட முடைத்துக் கந்தம்
விளைத்திடு பால லைந்தே வீசித் தென் திசைபா லேகும்
மழைக்குலத் திமைய மீன்ற வாயுவுன் மேனி தீண்டித்
திளைத்திடு மென்றே யெண்ணிச் சேர்த்து மெய் யணைத்தே னல்லாய்.

விளக்கம்:

தழைத்து வளர்ந்த தேவதாரு மரங்களின் தளிர் மூடிய புடங்களை உடைத்து ஒழுகும் பாலினால் நறுமணம் விரவிய இமயத்திற் பிறந்த காற்றுத் தென்திசையில் வீசும். அது உனது மேனியையுந் தீண்டியே வந்திருக்கும் என்ற எண்ணத்தினால் அவ்வாயுவைத் தழுவி அணைத்தேன் குணவதி!

புடம்—தளிரை மூடும் இதழ். கந்தம்—வாசனை. பால்—தளிரை ஒடிக்க ஊறும்பால்.

இயக்கன் இரவும் பகலும் துயருற்றமை கூறியது

113\. நீண்டிடு யாமஞ் சேர்ந்த நிசியினைக் குறுக்க லாமோ
மூண்டிடு பகலெஞ் ஞான்றும் முன்னிள வெயில்கா லாதோ:
வேண்டுவ னின்ன வாறு விளைந்திடா வினையில் முன்னிக்
காண்டகப் புரளுங் கண்ணாய்! கழிபெரும் பிரிவால் நொந்தேன்.

விளக்கம்:

காண்பதற்கு அழகாகப் புரளும் விழிகளையுடையாய்! நீண்ட சாமங்களையுடைய இந்த இரவை ஒரு கணப்பொழுதாகக் குறுக்க முடியாதா? எல்லாப் பருவங்களிலும் பகற்பொழுதை இளவெயில் காலச் செய்யமுடியாதா? என்று இம்மாதிரியான பெறுதற்கரிய விடயங்களை விரும்பி என் மனம் அலையும். உன் பெரும் பிரிவால் துயருற்றேன்.

நிசி—இரவு. முன்னி—முற்பட்டு. காண்தக—காட்சி மாட்சிமைப்பட. கழி—மிகுதி.

பிரிவாற்றிய விதம்

114\. நீளவே நினைவேன் நாளும் நினைந்திடர் தாங்கி நின்றேன்
வாளரி விழியா யஞ்சேல் வருமிடர் தாங்க வேண்டும்.
கோளிலா வின்பம் யாரைக் குறுகிடுந் தினமுந் துன்பஞ்
சூழுமோ விரண்டுந் தேரின் சக்கரம் போலச் சுற்றும்.

விளக்கம்:

வாளரி விழியாய்! எதற்கும் அஞ்சாதே. வருங் காலத்தைப்பற்றி நெடும்பொழுது பலவாறு சிந்தித்து என் துயரத்தைத் தாங்கிக்கொண்டேன். குற்றமில்லாத இன்பம்

யாருக்கிருக்கின்றது. துன்பம் எப்போதும் ஒருவரைச் சுற்றி வாட்டுமோ? இன்ப துன்பங்களாகிய இவ்விரண்டும் தேரின் சக்கரம்போல மாறி மாறி வருவன.

வாள்—ஒளி. அரி—வரி. கோள்—குற்றம்.

தேரின் சக்கரம் கீழ்மேலாகச் சுற்றி வருவதுபோல இன்ப துன்பங்கள் மாறி மாறி வரும்.

சாபம் நீங்கிய பின் இன்புறுதல் கூடுமென்று பிரிவாற்றியது

115. படவர வுறங்குஞ் சார்ங்க பாணிகண் விழிக்கும் போது
மடமயி லெனது சாபம் மாய்ந்திடுந், திங்கள் நாலுந்
திடமுடன் விழியை மூடித் தாங்கிடு, பிரிவாற் கூரும்
படர்சர நிலவில் வேண்டும் பான்மையா லின்பந்
துய்ப்போம்.

விளக்கம்:

பாம்பணையிற் பள்ளிகொள்ளும் சாரங்கபாணி துயில் நீங்கும் நாளில் எனது சாபமும் நீங்கிவிடும். இன்னும் இருக்கின்ற நாலு மாதங்களையும் உன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு கண்களை மூடிக் கழிப்பாயாக. மடமயிலே! இக்காலத்திற் பிரிவாற்றுன்பங் கூடுமென்பதை நான் அறிவேன். ஆனால் சரத்கால சந்திரிகையில் நல்வினை கூட்ட, வேண்டிய இன்பத்தை யெல்லாம் வேண்டியவாறு நுகருவோம்.

படவரவு—படமுள்ள பாம்பு. சாரங்கபாணி—கையிலே கொம்பாலான வில்லை உடையவன். திருமால். கண்விழிக்கும் தினம்—மார்கழி மாசத்து வைகுண்ட ஏகாதசி. திங்கள் நாலு—ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நாலு மாதங்கள். இவை நான்கும் தலைமகன், தலைமகளைப் பிரியாதிருந்து கூடுங்காலமாதலின் திடமுடன் தாங்க வேண்டியதாகும்.

கூரும்—மிகும். படர் - துன்பம். பிரிவால் மிகுந்துன்பத்திற்கு மேலான இன்பத்தைப் பின்னர்த்துய்ப்போம், அப்போது நல்வினையும் கூடிநின்று உதவும் என்கிறான். பிரிவாற் படர் கூரும் என மாறிக் கூட்டுக.

பான்மை—ஊழ்; தன்மையுமாம். சரநிலவில் பான்மையால் வேண்டும். இன்பந்துய்ப்போம்—சரத்கால நிலவில் நல்வினை தரப்போதிய இன்பத்தை நுகர்வோம்.

வேறுமோர் அடையாளம் கூறியது

116. பின்னருங் கூறுமோர்நாட் பேதைநீ காந்தன் கண்டம்
மன்னியே துயின்று வாய்விட் டரற்றினை மயக்கம் நீங்க
என்னையோ பட்ட தென்றான் ஏந்திழை யொருத்தி யோடு
துன்னினாய் சோர வென்றே சுடர்நகை யடக்கிச் சொன்னாய்.

விளக்கம்:

மறுபடியும் உன் ஐயன் கூறும். 'முன்னொரு நாள் நீ உன் காந்தனுடைய கழுத்தைத் தழுவிக்கொண்டு அயர்ந்து நித்திரை செய்தாயாகத் துயிலில் வாய்விட்டரற்றினாய். துயில் நீங்கிய பின் அவன் உன்னைப் பன்னிப் பன்னிக் கேட்கக், கள்வ! நீ வேறொருத்தியோடு கூடிக் குலாவியிருக்கக்கண்டேன் என்றாய்'.

காந்தன்—காதலன். அரற்றல்—சத்தமிடல். மயக்கம்—துயில். பட்டது—உற்றது. ஏந்திழை—பெண். துன்னினாய்—சேர்ந்தாய். சோர—கள்வ. நகை—முறுவல். சுடர்—ஒளி.

இயக்கன் பிரிவினாலே ஆசை கூடுமென்றது

117. இத்திறம் நலத்தி னாலே யிருந்தன னென்று காண்பாய்
பொய்த்திற முலகோர் சொல்லுப் போற்றிடா யறத்தின் செல்வீ!
மைத்திரு விழியாய்! தேயும் பிரிவினாற் காத லென்பார்
துய்த்திடு பொருளை நீங்கிற் றுன்னியே பெருகு மாசை.

விளக்கம்:

இந்த அடையாளத்தைக்கொண்டு நான் தீதின்றி யிருக்கிறேனென்பதை அறிவாய். உலகோர் சொல்லும் பொய்ச்சொற்களைக் கேளாதே. எனது இல்லறச் செல்வியாயுள்ளவளே! மைவிழியாய்! உன் பிரிவினால் காதல் குறைந்துவிடும் என்பார்கள். அது தவறு. விரும்பித்துய்க்கும் பொருளை நீங்கிய காலத்தில் அதன்மேற் செல்லும் ஆசை பதின்மடங்காக நெருங்கிப் பெருகும்.

இத்திறம்—இந்த அடையாளத்தினுல். பொய்த்திறம்—பொய்யாக. துய்த்திடுபொருள்—அநுபவிக்க விரும்பும் பொருள். துன்னியே—நெருங்கியே.

மேகத்தின் தூதை ஊக்கப்படுத்தியது

118. வல்லேயோ சதுர! நண்பன் வகுத்திடிக் கருமஞ் செய்யச்
சொல்லினு லுரையா யேனும் துன்னுகம் பீரத் தோற்றம்
ஒல்லுமென் றுணர்த்தும் புள்ளுக் குறுதுளி யுரையா தீவாய்
நல்லவ ரிரந்த தொன்று நயந்துமுன் செயலாற் சொல்வர்.

விளக்கம்:

வல்லவனே! நண்பன் வேண்டிய இந்தக் காரியத்தை நீ செய்வாயா? உன்னுடைய கம்பீரத் தோற்றம் நீ அதை ஏற்றுக் கொண்டாயென்பதையே காட்டும். சாதகப் புள்ளுக்குச் சந்தடியின்றியே துளியைக் கொடுப்பாய். உலகத்திலே நல்லவர்கள், ஒருவர் ஒரு கருமத்தைச் செய்யுமாறு கேட்டால் அதைச் செய்து முடிப்பதையே பதிலாகக் கொள்வர். அல்லது செய்து முடித்தபின்பே மறுமொழி சொல்வர்.

சதுர!—வல்லவனே! ஒல்லும்—இயலும்; முடியும். புள்—சாதகப்புள்.

மேகத்திற்கு விடை கொடுத்தனுப்பியது

119. நன்னுதற் பிரிந்த வெற்கு நயமிலாத் தொண்டை நீயும்
துன்னிய கருணை யாலோ தூயதோர் நட்பி ஞலோ
சொன்னவா றியற்றிக் காரிற் சோபையுற் றெங்குஞ் சூழ்வாய்
என்னையே போல நீயும் மின்கொடி யிமைப்பும் நீங்கேல்.

விளக்கம்:

நல்ல நெற்றியை உடைய நாயகியைப் பிரிந்த என் பொருட்டு உனக்கு ஒரு பயனுந் தருதலில்லாத தூதாகிய இத் தொண்டை வேண்டினேன். நீயும் உனது துன்னிய கருணை

யாலோ அல்லது தூய நட்பினுலோ அதை இனிதாக முடித்த பின் கார்காலத்து நிரம்பிய அழகுடன் நீ விரும்பியபடி திரிவாயாக. என்னைப்போல நீயும் உன் மின்கொடியை ஒரு கணமேனும் பிரியாதிருப்பாயாக.

நன்னுதல்—பெண். எற்கு—எனக்கு. கார்—மழைக் காலம். இமைப்பு—கண்ணிமைக்கும் ஒரு நொடிப்பொழுது.

உத்தரமேகம் முற்றும்

மகா கவி காளிதாசரியற்றிய மேகதூதத்துக்கு நவாலியூர், சோ. நடராசன் செய்த தமிழாக்கமும் விளக்கமும் முற்றும்.

கொழும்பு
அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிற்றெட்
அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது

ரூபா 1·75